விவசாய உற்பத்தியாக அறுவடை செய்யத்தக்க அல்லது உயிரியல் சொத்துக்களாக விற்பனை செய்யக்கூடிய சொத்துக்கள் நுகரத்தக்க உயிரியல் சொத்துக்களாகக் கருதப்பதுடன், அதற்கு வெட்டுமரமும் உள்ளடங்கும். விவசாய உற்பத்திகளை சந்தைக்குச் சந்தை எடுத்துச்செல்வதற்கான கிரயத்தையும் மதிப்பிடப்பட்ட விற்பனை கிரயத்தையும் கழித்து கிடைக்கும் நியாயப் பெறுமதிக்கு இந்த உற்பத்தி மதிப்பிடப்படுகின்றது. விலை மதிப்பிடல் மீதான இலாபம் அல்லது நட்டம் விபரமான வருமான கூற்றின் கீழ் காட்டப்படும்.

### 3.1.4.3பிற்போடப்பட்ட சொத்துக்கள்

பிற்போடப்பட்ட சொத்துக்கள் வருடத்துக்கு 10% கடன் பதிவழிக்கப்படுகின்றன.

### 3.1.5 முதலீட்டு ஆதனம்

மூலதன மதிப்பேற்றத்துக்கும் மேலும்/ அல்லது வாடகை வருமானத்தினை உழைப்பதற்கும் வைத்திருக்கின்ற ஆதனங்களை முதலீட்டு ஆதனம் உள்ளடக்குகின்றது. அவை ஆரம்பமாக தொடர்புடைய வணிகவினைக் கிரயங்கள், மேலும் சேர்த்தல், ஒரு பாகத்தை மாற்றீடு செய்தல் அல்லது ஆதனத்தை பழுதுபார்த்தலினால் உறப்பட்ட செலவுகள் உள்ளடங்கலான கிரயத்திலேயே அளவிடப்படுகின்றன. அடுத்துறு அளவீடானது திரண்ட பெறுமானத் தேய்வினை கழித்து பெறும் கிரயத்திலேயே இருக்கும்.

### 3.1.6 நடைபெற்றுகொண்டிருக்கின்ற மூலதன வேலை (Capital work in progress)

ஐந்தொகைத் திகதியில் மூலதனமாக்கப்படாத வருடத்தில் உறப்பட்ட செலவுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற மூலதனச் செலவுகள் என காண்பிக்கப்படும். அதே நேரத்தில், வருடத்தில் மூலதனமாக்கப்பட்டு பாவனைக்கு விடப்பட்டுள்ள மூலதன சொத்துக்கள் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் இயந்திரத்துக்கு மாற்றல் செய்யப்பட்டுள்ளன.

### 3.1.7 குத்தகை வசதிகள்

ஏதாவதொரு வசதி குத்தகையாக இருக்குமா அல்லது அது குத்தகை வசதியை உள்ளடக்கி இருக்குமா என்பது தொடர்பான தீர்மானமானது குறித்த வசதியின் கருப்பகுதியின் அடிப்படையில் அமைந்துள்ளதுடன், அவ் வசதிகளை ஏற்பாடு செய்துகொடுப்பதானது குறித்த சொத்து அல்லது சொத்துக்களின் பயன்பாட்டின் அடிப்படையிலும், அதன் மூலம் குறித்த சொத்தைப் பயன்படுத்துவதற்கான உரிமை வழங்கப்படுமா என்பதிலும் தங்கியுள்ளது.

### நிதிக் குத்தகை வசதிகள்

சொத்துக்களின் உடைமைக்கு நேரிடக்கூடிய, என்றாலும் சட்டரீதியான கோரிக்கைகள் அவசியமற்ற அனைத்து ஆபத்துக்கள் மற்றும் வெகுமதிகளை கணிசமானளவில் எதிர்த்தரப்புக்களுக்கு உரிமை மாற்றம் செய்யக்கூடிய உடன்படிக்கைகள் நிதி குத்தகைகளாக கருதப்படுகின்றன.

கூட்டுறவுத்தாபனம் நிதி குத்தகைகளின் கீழ் குத்தகைதாரராக இருக்கையில் குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் மூலதனமாக்கப்படுவதுடன் அவை “ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரண”த்தின் கீழ் உள்ளடக்கப்படுவதுடன் குத்தகை வழங்குநருக்கான ஏற்புடைப் பொறுப்பு “குத்தகை கடன்கொடுநரின்” கீழ் உள்ளடக்கப்படும். ஒரு நிதி குத்தகையும் அதனை நேரொத்திருக்கும் பொறுப்பும் ஆரம்பமாக சொத்தின் நியாயப் பெறுமதியிலோ அல்லது குறைவாயின் குறைந்தபட்ச குத்தகை கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதியிலோ அங்கீகரிக்கப்படும். பொறுப்பு நிலுவையின் அடிப்படையில் மாறா வட்டி வீதத்தினை வழங்கக்கூடிய விதத்தில் குத்தகை நடவடிக்கையில் மறைந்துள்ள வட்டி வீதத்தின் அடிப்படையில் குத்தகைக் காலம் முழுவதிலும் செலுத்தவேண்டிய நிதிக் கட்டணங்கள் “தேறிய வட்டி வருமானத்தில்” அங்கீகரிக்கப்படும்.

### தொழிற்படு குத்தகைகள்

ஏனைய அனைத்து குத்தகைகளும் தொழிற்படு குத்தகைகளென வகைப்படுத்தப்படுகின்றன. கூட்டுறவுத்தாபனம் குத்தகைதாரராக இருக்கையில் குத்தகை சொத்துக்கள் ஐந்தொகையில் அங்கீகரிக்கப்படமாட்டாது. தொழிற்படு குத்தகைகளின் கீழ் செலுத்த

வேண்டிய மற்றும் கிடைக்க வேண்டிய வாடகைகள் குத்தகைகள் காலங்கள் முழுவதிலும் நேர்கோட்டு முறை அடிப்படையில் கணக்கிடப்படுவதுடன் அவை முறையே “நிர்வாகச் செலவுகள்” மற்றும் “ஏனைய தொழிற்பாட்டு வருமானம்” கீழ் உள்ளடக்கப்படுகின்றன.

### 3.2.1 பொருள் விவரப் பட்டியல்கள்

“முதல் வந்து முதல் செல்லுதல்” (**First in first out**) அடிப்படையில் மதிப்பிடப்படுகின்ற வழக்கற்றுப்போன மற்றும் மெதுவாக நகருகின்ற பொருட்களுக்குரிய உதவித் தொகையை வழங்கியதன் பின்னர் கிரயம் மற்றும் தேறிய காசாக்கத்தகு பெறுமதியில் எது குறைந்ததோ அதன்படி பொருள் விவரப் பட்டியல்கள் அங்கீகரிக்கப்படும்.

**இருப்புக்களைக் கணக்கிடுதல்**

### 3.2.2 இருப்புக்களின் கிரயம்

**மூலப்பொருட்கள்**

ஏதாவது நேரிடக்கூடிய செலவுடனான கொள்வனவுகளின் செலவு.

**தற்போது நிறைவேற்றப்படுகின்ற பணிகள்**

மூலப்பொருட் செலவும் மாறும் மொத்த உற்பத்திச் செலவும்.

**முடிவுப் பொருட்கள்**

மூலப்பொருட் செலவும் மாறும் மொத்த உற்பத்திச் செலவும்.

### 3.2.3 காசும் காசுக்கு சமமானவையும்

காசும் காசுக்கு சமமானவை கையிலும் வங்கியிலுமுள்ள காசு, நிலையான வைப்பு முதலீடுகள், ஆறு மாதங்கள் அல்லது அதற்கு குறைவான அசல் முதிர்ச்சிகளுடனான குறுகிய கால உயர் திரவத்தன்மை முதலீடுகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. வங்கி மேலதிக பற்றுக்கள் ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்புக்களின் படுகடன்களினுள் காட்டப்பட்டுள்ளன.

### 3.2.4 ஆராய்ச்சிச் செலவுகள்

நவீன விஞ்ஞானபூர்வமான அல்லது தொழிநுட்ப அறிவினைப் பெற்றுக்கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கான செலவினம் அது ஏற்படும் போது இலாபத்தில் அல்லது இழப்பில் ஏற்றுக்கொள்ளப்படும்.

# 4. பொறுப்புக்கள் மற்றும் ஒதுக்கீடுகள்

## 4.1 இளைப்பாறல் நலன் கடப்பாடுகள்

### 4.1.1 *கட்டாய நலன் திட்டம் – ஓய்வூதியப் பணிக்கொடை*

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு சட்டத்தின் குறிப்பீட்டு நியதிகளுக்கேற்ப இளைப்பாறல் பணிக்கொடையை செலுத்துவது கூட்டுத்தாபனத்தின் பொறுப்பாகும். ஒரு உத்தியோகத்தர் கூட்டுத்தாபனத்தில் தொடர்ந்தேர்ச்சியான ஐந்து வருட கால சேவையை பூரணப்படுத்தினால் மாத்திரமே அவர் சார்பாக பணிக்கொடை செலுத்த வேண்டிய தேவையேற்படுகின்றது. இப்பொறுப்பினை நிறைவேற்றுவதற்காக ஐந்தொகையில் ஒரு ஒதுக்கீடு முன்கொணரப்படும். ஒரு வருடத்தின் ஆரம்பத்தில் முன்கொணரப்பட்ட ஒதுக்கீட்டுக்கும் வருடத்தின் இறுதியில் முன் கொண்டுசெல்லப்பட்ட ஒதுக்கீட்டுக்கும் இடையிலான வேறுபாடு வருமான கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

இப்பொறுப்புக்கு வெளிவாரியாக நிதியளிக்கப்படுவதில்லை. குறித்த விடயம் ஐந்தொகையில் நடைமுறை அல்லா பொறுப்புக்களின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றது.

### 4.1.2 *கட்டாயப் பகிர்ந்தளிப்புத் திட்டங்கள்* – **ஓய்வூதிய பணிக்கொடைகள்**

கூட்டுத்தாபனத்தினால் ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புக்கும் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புக்கும் பங்களிப்பு நிதி வழங்கப்படும். குறித்த விடயத்துடன் சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதிக்கேற்ப உரிய பகிர்ந்தளிப்பு நிதியங்களால் இப் பகிர்ந்தளிப்பு நிதி ஈடுசெய்யப்படும். ஊழியர்களின் நலன்கருதி திட்டங்களுக்கு பங்களிப்பு செய்வதற்கான கடமைப்பொறுப்புக்கள் வருமான கூற்றில் ஒரு செலவாக அங்கீகரிக்கப்படும்.

**ஊழியர் சேமலாப நிதியம்**

கூட்டுத்தாபனமும் ஊழியர்களும் அடிப்படைச் சம்பளத்தின் அடிப்படையில் முறையே 12% மற்றும் 10% இனை சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்கின்றனர்.

### ஊழியர் நம்பிக்கை நிதியம்

கூட்டுத்தாபனம் ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு அடிப்படை சம்பளத்தின் 3% த்தினை பங்களிப்புச் செய்கின்றது.

## 5. வருமானக் கூற்று

வருமானக்கூற்றினை முன்வைக்கும் நோக்கத்துக்காக செலவுகள் முறையின் தொழிற்பாடு இணைத்துக்கொள்ளப்படும். ஏனெனில், அது கூட்டுத்தாபன செயலாற்றுகையின் உருப்படிகளை உறுதியாக பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

## 5.1.1 வருமானங்களை இனங்காணல்

கூட்டுத்தாபனத்துக்கு பொருளாதார நலன்கள் கிடைக்கக்கூடிய அளவில் வருமானம் இனங்காணப்படுவதுடன், கொடுப்பனவு எப்போது செலுத்தப்பட்டது என்பதை கருத்திற்கொள்ளாது வருமானத்தை நம்பகமான முறையில் அளவிட முடியும். ஒப்பந்தத்தினால் வரையறுக்கப்பட்ட கொடுப்பனவு நியதிகளைக் கருத்திற்கொண்டு பெற்றுக்கொண்ட அல்லது பெறத்தக்க தொகையின் சீர்மதிப்பு பெறுமதியில் வருமானம் அளவிடப்படுகின்றது.

வருமானத்தை ஏற்றுக்கொள்ள முன்பு கீழுள்ள குறிப்பான இனங்காணல் தகுதிவிதிகள் பூரணப்படுத்தப்பட வேண்டும்.

### பொருட்களின் விற்பனை

பொருட்களின் உடைமையின் ஆபத்துக்கள் மற்றும் வெகுமதிகள் வழமையாக பொருட்களை விநியோகிக்கும் போது வாங்குபவருக்கு சேர்ப்பிக்கப்பட்டதும் பொருட்களின் விற்பனையினாலான வருமானம் இனங்காணப்படும்.

### சேவைகளை வழங்குதல்

கணக்கீட்டு காலத்தின் போது சேவைகள் வழங்கப்பட்டதும் அல்லது நிறைவேற்றப்பட்டதும் சேவை வழங்கலுக்கான வருமானம் இனங்காணப்படும்.

**வேறு வருமானம்**

வேறு வருமானங்கள் இயல்பாக சேரக்கூடியவை அடிப்படையில் இனங்காணப்படும். இது பிரதானமாக வருமானத்தை முகாமைத்துவம் செய்தல், பதிவுக் கட்டணம், வெட்டுமர விலைமனுகோரல் செயன்முறைகள் மற்றும் குத்தகை வாடகை வருமானம் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

### 5.1.2 செலவினங்கள்

ஒரு வியாபாரத்தினை நடத்துகையில் உறப்பட்ட அனைத்து செலவுகளும் குறித்த வருடத்துக்கான இலாபத்திற்கு உரித்தாகும் வருமானத்தினுள் உள்ளடக்கப்படும். திருத்தங்களும் புதுப்பித்தல்களும் செலவினம் உறப்பட்ட வருடத்தின் இலாப நட்டத்தில் உள்ளடக்கப்படும்.

### 5.1.3 நிதிச் செலவினங்கள்

ஒரு சொத்தை கையகப்படுத்துதல், நிர்மாணித்தல் அல்லது உற்பத்தியுடன் நேரடியாக தொடர்புடைய படுகடன் கிரயங்கள் சம்பந்தப்பட்ட சொத்துக்களின் கிரயத்தின் ஒரு பகுதியாக மூலதனமாக்கப்படுகின்றன. ஏனெனில், அத்தகைய சொத்தின் பயன்பாட்டுக்கு அல்லது விற்பனைக்கு குறிப்பிட்டதொரு காலம் செல்லும். ஏனைய அனைத்து படுகடன் கிரயங்கள் அவை நிகழந்த காலத்திலேயே செலவு வைக்கப்படும். கூட்டுறவுத்தாபனத்தின் நிதிச் செலவினங்கள் மேலதிகப்பற்று வட்டி, காசு தரகு, கடன் வட்டி (வங்கி மற்றும் ஏனையவை) மற்றும் தரகர்களின் வட்டி என்பவற்றை உள்ளடக்கும்.

## 6. நிதியியல் கருவிகள் – ஆரம்பகட்ட இனங்காணலும் அடுத்துறு அளவீடும்.

### 6.1 நிதிச் சொத்துக்கள்

#### 6.1.1 ஆரம்பகட்ட இனங்காணலும் அளவீடும்.

இலங்கைக் கணக்கீட்டு தரநியமங்களின் 39 ஆம் விடயப் பரப்பின் கீழ் நிதிச் சொத்துக்களை இலாபம் அல்லது நட்ட கூற்றின் அடிப்படையில் சீர்மதிப்பு பெறுமதியில் இனங்காணப்படுகின்ற கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள், முதிர்ச்சி முதலீடுகளுக்கு வைத்திருப்பவை என்றும் நிதிச்சொத்துக்களின் விற்பனைக்காக கிடைக்கப்பெறுபவை என்றும் வகைப்படுத்தப்படுவதுடன், ஆரம்ப இனங்காணலில் அச்சொத்தின்

நிதியில் சொத்துக்களின் வகைப்படுத்தலை தீர்மானிக்கக்கூடியவாறும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் இல்லாத சந்தர்ப்பத்தில் அனைத்து நிதியியல் சொத்துக்களும் ஆரம்பமாக சீர்மதிப்பு பெறுமதியுடன் நேரடியாக உடைமையாக்கத்தக்க கொடுக்கல் வாங்கல் கிரயங்களுடன் சேர்த்து இனங்காணப்படும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியியல் சொத்துக்களுள் காசு மற்றும் குறுகிய கால நிலையான வைப்புக்கள், வர்த்தகம் மற்றும் ஏனைய பெறத்தக்கவை, மற்றும் ஏனைய வைப்புக்கள் என்பன உள்ளடங்குகின்றன. மேற்கூறப்பட்ட நிதிச்சொத்துக்கள் நடைமுறை சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்படும்.

### 6.1.2 அடுத்துறு அளவீடு

நிதிச்சொத்துக்கள் தொடர்பான அடுத்துறு அளவீடு அவற்றின் வகைப்படுத்தலிலேயே தங்கியுள்ளன.

#### 6.1.2.1 இலாபம் அல்லது நட்டத்தின் மூலம் சீர்மதிப்பு பெறுமதிக்கு நிதிச் சொத்துக்கள்.

இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்பு பெறுமதியில் கணக்கிடுகின்ற நிதிச்சொத்துக்களுள் வர்த்தகத்துக்காக வைத்திருக்கின்ற நிதிச்சொத்துக்களும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்பு பெறுமதியில் நிதிச்சொத்துக்களாக ஆரம்ப அங்கீகாரத்தினை பெற்ற நிதிச்சொத்துக்களும் உள்ளடங்குகின்றன. நிதிச் சொத்துக்களை விற்பனை செய்வதற்கோ அல்லது மிகவும் கிட்டிய காலத்தில் மீள்கொள்முதல் நோக்கில் கையகப்படுத்தியிருந்தால் அச்சொத்துக்கள் வர்த்தகத்துக்காக வைத்திருக்கின்ற சொத்துக்கள் என வகைப்படுத்தப்படும். 2023 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்தில் கூட்டுத்தாபனத்துக்கு இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்பு பெறுமதியில் கணக்கிடப்பட்ட நிதிச்சொத்துக்களேதும் இருக்கவில்லை.

#### 6.1.2.2 கடன்கள் மற்றும் பெறத்தக்கவை

கடன்கள் மற்றும் பெறத்தக்கவை என்பது, ஒரு செயல்படு சந்தையில் குறிப்பீடு செய்யப்படாத நிலையான மற்றும் நிச்சயிக்கத்தக்க நிதிச்

சொத்துக்களாகும். ஆரம்ப அளவீட்டின் பின்னர், இத்தகைய நிதிச்சொத்துக்கள் பயனுள்ள வட்டிவீத முறையை (EIR) பயன்படுத்தி மதிப்பு குன்றுதலை கழித்து கடன் பதிவழித்தல் கிரயத்தில் அளவிடப்படும். கடன் பதிவழித்தல் கிரயமானது பயனுள்ள வட்டி வீத முறையின் பகுதிகளான ஏதாவது கையகப்படுத்தலுக்கான கழிவு அல்லது தவணை கட்டணம், கட்டணங்கள் அல்லது கிரயங்கள் என்பவற்றை கருத்திற்கொண்டே கணக்கிடப்படுகின்றது. பயனுள்ள வட்டிவீத முறை கடன் பதிவழித்தலானது வருமான கூற்றில் நிதி வருமானமாக உள்ளடக்கப்படுகின்றது. மதிப்பு குன்றுவதனால் ஏற்படும் நட்டமானது வருமான கூற்றில் நிதிக்கிரயத்தில் இனங்காணப்படும்.

### 6.1.2.3 முதிர்ச்சிக்காக வைக்கப்பட்டுள்ள முதலீடுகள்

கூட்டுத்தாபனத்துக்கு முதிர்ச்சிக்கு வைத்திருக்கும் சாதகமான எண்ணம் இருந்தால் நிலையான அல்லது நிச்சயிக்ககூடிய கொடுப்பனவுகளுடனான பெறுமதியற்ற நிதிச்சொத்துக்கள் மற்றும் நிலையான முதிர்ச்சிகள் முதிர்ச்சிக்காக வைத்திருப்பவை என வகைப்படுத்தப்படுகின்றன. ஆரம்ப அளவீட்டின் பின்னர், முதிர்ச்சி முதலீடுகளுக்காக வைத்திருப்பவையானது பயனுள்ள வட்டி வீத முறையை பயன்படுத்தி மதிப்பு குன்றுதலை கழித்து கடன் பதிவழித்தல் கிரயத்தில் கணிப்பிடப்படும். கடன் பதிவழித்தல் கிரயமானது பயனுள்ள வட்டி வீத முறையின் பகுதிகளான ஏதாவது கையகப்படுத்தலுக்கான கழிவு அல்லது தவணை கட்டணம், கட்டணங்கள் அல்லது கிரயங்கள் என்பவற்றை கருத்திற்கொண்டே கணக்கிடப்படுகின்றது. பயனுள்ள வட்டிவீத முறை கடன் பதிவழித்தலானது வருமானக் கூற்றில் நிதி வருமானமாக உள்ளடக்கப்படுகின்றது. மதிப்பு குன்றுவதனால் ஏற்படும் நட்டமானது வருமான கூற்றில் நிதிக்கிரயத்தில் இனங்காணப்படும். 2023 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்தில் கூட்டுத்தாபனத்துக்கு முதிர்ச்சி முதலீடுகளுக்காக வைத்திருப்பவை ஏதும் இருக்கவில்லை.

### 6.1.2.4 விற்பனைக்கு இருக்கும் நிதி முதலீடு

விற்பனைக்கு இருக்கும் முதலீடுகளில் பங்குரிமை மற்றும் கடன் பிணையங்கள் உள்ளடங்குகின்றன. ஒன்றில் வர்த்தகத்துக்கு வைத்திருப்பவை என்றோ அல்லது இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்பு பெறுமதியில் தீர்மானிக்கப்பட்டதாக வகைப்படுத்தப்படாத பங்குரிமை முதலீடுகள் விற்பனை நிதி முதலீடுகளுக்காக கிடைப்பனவை என வகைப்படுத்தப்படுகின்றன. கடன் பிணையங்கள் என்பது

குறிப்பிட்டுக் கூறமுடியாத காலத்துக்கு வைத்திருப்பவை ஆகும். அவற்றை திரவத்தன்மை தேவைக்காக வைத்திருக்க முடியும் அல்லது சந்தை நிலவரங்களுக்கு ஏற்ப விற்பனை செய்துவிடலாம்.

2023 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்தில் கூட்டுத்தாபனத்துக்கு விற்பனை நிதி முதலீடுகளுக்காக கிடைப்பவை ஏதும் இருக்கவில்லை.

### 6.1.2.5 இனங்கண்டு அப்புறப்படுத்துதல்

கீழுள்ள சந்தர்ப்பங்களில் ஒரு நிதிச்சொத்துக்கு (அல்லது பொருந்தும் சந்தர்ப்பத்தில் ஒரு நிதிச்சொத்தின் பாகம் அல்லது அவ்வாறான ஒரு தொகை நிதிச்சொத்துக்களின் பகுதி) அங்கீகாரம் இருக்கமாட்டாது.

I. குறித்த சொத்திலிருந்து காசுப்பாய்ச்சலை பெறுவதற்கான உரிமை காலாவதியாகுதல்.

கூட்டுத்தாபனமா

## இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

### நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்

### 8 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| தலைமை அலுவலகம் | சொந்த உரிமைக் காணி | கட்டிடங்கள் | உபகரணங்கள் | தளபாடங்கள் மற்றும் பொருத்தல்கள் | கணினி | மோட்டார் வாகனங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| **கிரயம் அல்லது மதிப்பீடு** | | | | | | | |
| **2023 ஜனவரி 01 இல் உள்ளவாறு** | **4,031,845** | **4,959,427** | **12,356,634** | **7,194,236** | **5,657,052** | **66,115,401** | **100,314,594** |
| சேர்ப்பனவுகள் | - | - | 1,920,735 | 2,315,890 | 1,063,099 | 1,396,574 | **6,696,298** |
| நீக்கப்பட்டவை | - | - | - | - | - | - | - |
| மாற்றல் | - | - | - | - | - | - | - |
| **2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு** | **4,031,845** | **4,959,427** | **14,277,369** | **9,510,126** | **6,720,151** | **67,511,974** | **107,010,892** |
| **திரண்ட பெறுமானத் தேய்வு** | | | | | | | |
| **2023 ஜனவரி 01 இல் உள்ளவாறு** | - | **4,959,384** | **10,951,980** | **3,953,031** | **4,777,732** | **66,094,153** | **90,736,280** |
| வருடத்துக்கான பெறுமானத் தேய்வுக் கட்டணம் | - | - | 391,320 | 810,774 | 372,046 | 123,316 | **1,697,455** |
| முந்திய ஆண்டின் சீராக்கல் | - | - | - | - | - | - | - |
| **2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு** | - | **4,959,384** | **11,343,300** | **4,763,804** | **5,149,778** | **66,217,469** | **92,433,735** |
| **தேறிய ஏட்டுப் பெறுமதி** | | | | | | | |
| **2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு** | **4,031,845** | **43** | **2,934,069** | **4,746,322** | **1,570,373** | **1,294,505** | **14,577,157** |

| தோட்டங்கள் | காணிகள் | கட்டிடங்கள் | உபகரணங்கள், | தளபாடம் மற்றும் பொருத்தல்கள் | கணினி | மோட்டார் வாகனங்கள் | இயந்திரம் | ஏனைய உரிமம் வழங்கப்பட்ட சொத்துக்கள் | தாங்கி உயிரியல் சொத்துக்கள் (குறிப்பு 8.1) | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **கிரயம் அல்லது மதிப்பீடு** | | | | | | | | | | |
| **2023 ஜனவரி 01 இல் உள்ளவாறு** | **645,345,972** | **184,104,453** | **23,299,859** | **5,523,633** | **1,035,022** | **84,200,574** | **144,279,268** | **6,705,259** | **803,300,611** | **1,897,794,650** |
| சேர்ப்பனவுகள் | - | 17,462,389 | 5,621,416 | 2,767,500 | 141,700 | | 30,950,415 | | 124,053,527 | **180,996,947** |
| முந்திய ஆண்டின் சீராக்கல் | - | - | - | - | - | - | - | (32,286) | - | **(32,286)** |
| மாற்றப்பட்டவை | - | - | - | - | - | - | - | - | (6,500) | **(6,500)** |
| நீக்கப்பட்டவை | - | - | - | - | - | - | - | - | - | - |
| **2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு** | **645,345,972** | **201,566,842** | **28,921,275** | **8,291,133** | **1,176,722** | **84,200,574** | **175,229,683** | **6,672,973** | **927,347,638** | **2,078,752,811** |
| **திரண்ட பெறுமானத்தேய்வு** | | | | | | | | | | |
| **2023 ஜனவரி 01 இல் உள்ளவாறு** | - | 120,775,860 | 19,509,922 | 627,160 | 896,470 | 72,527,146 | 110,280,810 | 6,672,972 | 381,966,254 | **713,257,870** |
| வருடத்திற்கான பெறுமானத்தேய்வு | - | 4,106,237 | 1,089,429 | 363,295 | 100,879 | 879,842 | 5,960,071 | - | 4,723,618 | **17,223,372** |
| மாற்றல்/ சீராக்கல் | | | | | | | | | (19,711) | **(19,711)** |
| **2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு** | - | **124,882,097** | **20,599,351** | **990,455** | **997,348** | **73,406,988** | **116,240,882** | **6,672,972** | **386,541,844** | **730,333,213** |
| **தேறிய ஏட்டுப் பெறுமதி** | | | | | | | | | | |
| **2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு** | **645,345,972** | **76,684,745** | **8,321,924** | **7,300,678** | **179,374** | **10,793,586** | **58,988,802** | **1** | **540,805,794** | **1,348,419,597** |
| **2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு தலைமை அலுவலகம் மற்றும் தோட்டங்களின் தேறிய ஏட்டுப் பெறுமதி (தலைமை அலுவலகம் மற்றும் தோட்டங்களின் மொத்தம்)** | **649,377,816** | **76,684,788** | **11,255,993** | **12,047,000** | **1,749,747** | **12,088,091** | **58,988,802** | **1** | **540,805,794** | **1,362,996,754** |

# இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

## நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்

8.1 **தாங்கி உயிரியல் சொத்துக்கள்**

தாங்கி உயிரியல் சொத்துக்கள் கிரயத்திலிருந்து ஏதேனும் திரண்ட பெறுமதி தேய்மானத்தை கழித்தே கொணரப்படும்.

| **தாங்கி உயிரியல் சொத்துக்கள்** | **தேயிலை** | | **ஏனைய பயிர்கள்** | **தென்னை** | **மிளகு** | **இறப்பர்** | **கோப்பி** | **ஏனையன** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **முதிர்ந்த பயிர்ச்செய்கை** | **முதிராத பயிர்ச்செய்கை** | **முதிராத பயிர்ச்செய்கை** | | | | | | |
| **கிரயம் அல்லது மதிப்பீடு** | | | | | | | | | |
| 2023 ஜனவரி 01 இல் உள்ளவாறு | 506,883,377 | 253,243,396 | - | 3,870,374 | 3,709,621 | 15,270,484 | 1,565,492 | 18,757,867 | 803,300,611 |
| சேர்ப்பனவுகள் | 1,777,648 | 103,816,149 | 16,527,314 | | | - | | 1,932,417 | 124,053,527 |
| முந்திய வருடத்தின் சீராக்கல் | | | | | | | | | - |
| மாற்றல்/ சீராக்கல் | (6,500) | - | | - | - | - | - | - | (6,500) |
| நீக்கப்பட்டவை | - | - | | - | - | - | - | - | - |
| **2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு** | 508,654,524 | 357,059,545 | 16,527,314 | 3,870,374 | 3,709,621 | 15,270,484 | 1,565,492 | 20,690,284 | 927,347,638 |

| **திரண்ட பெறுமானத் தேய்வு** | **தேயிலை** | | | **தென்னை** | **மிளகு** | **இறப்பர்** | **கோப்பி** | **ஏனையன** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **முதிர்ந்த பயிர்ச்செய்கை** | **முதிராத பயிர்ச்செய்கை** | **முதிராத பயிர்ச்செய்கை** | | | | | | |
| **2023 ஜனவரி 01 இல் உள்ளவாறு** | 368,101,655 | - | - | 2,841,452 | 2,527,333 | 5,322,808 | 1,433,107 | 1,739,899 | 381,966,254 |
| வருடத்திற்கான பெறுமானத் தேய்வுக் கட்டணம் | 2,381,862 | - | - | 517,483 | 125,435 | 1,138,502 | 7,702 | 552,635 | 4,723,618 |
| முந்திய வருடத்தின் சீராக்கல் | (140,980) | - | - | | (4,825) | 1,931 | 2,189 | 13,368 | (128,317) |
| மாற்றல்/ சீராக்கல் | (19,711) | - | - | | | | | | (19,711) |
| நீக்கப்பட்டவை | - | - | - | - | - | - | - | - | - |
| **2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு** | 370,322,825 | - | - | 3,358,935 | 2,647,942 | 6,463,241 | 1,442,998 | 2,305,901 | 386,541,844 |
| **தேறிய ஏட்டுப் பெறுமதி** | | | | | | | | | |
| **2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு** | 138,331,699 | 357,059,545 | 16,527,314 | 511,439 | 1,061,679 | 8,807,242 | 122,494 | 18,384,383 | 540,805,794 |
| **2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய ஏட்டுப் பெறுமதி** | | | | | | | | | **540,805,794** |

| | **முதிராத மற்றும் முதிர்ந்த தேயிலை** | **முதிராத பெருந்தோட்டம்** | **முதிராத பயிர்ச்செய்கை சிறு பயிர்ச்செய்கை** | **தென்னை** | **மிளகு** | **இறப்பர்** | **கோப்பி** | **ஏனையன** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கிரயம் அல்லது மதிப்பீடு | | | | | | | | | |
| 2023 ஜனவரி 01 இல் உள்ளவாறு | 506,883,377 | 253,243,396 | | 3,870,374 | 3,709,621 | 15,270,484 | 1,565,492 | 18,757,868 | 803,300,611 |
| சேர்ப்பனவுகள் | 1,777,647.82 | 103,816,148.85 | 16,527,313.50 | | - | - | | 1,932,416.91 | 124,053,527 |
| முந்திய வருடத்தின் சீராக்கல் | | | | | | | | - | - |
| 2020 ஆம் ஆண்டில் காணப்பட்ட சாதிக்காய் தொடர்ான வழுவினை சரிப்படுத்துவதற்கு கணக்கிலிருந்து மாற்றப்பட்டது. | (6,500) | | | | | | | | (6,500) |
| நீக்கப்பட்டவை | | | | | | | | | - |
| **2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு** | **508,654,525** | **357,059,545** | **16,527,314** | **3,870,374** | **3,709,621** | **15,270,484** | **1,565,492** | **20,690,285** | 927,347,639 |

| **பெறுமானத் தேய்விடல்** | **Tea** | **முதிராத பெருந்தோட்டம்** | | **தென்னை** | **மிளகு** | **இறப்பர்** | **கோப்பி** | **ஏனையன** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2022 ஜனவரி 01 இல் உள்ளவாறு | 368,101,655 | | | 2,841,452 | 2,527,333 | 5,322,808 | 1,433,107 | 1,739,899 | 381,966,254 |
| வருடப் பெறுமானத் தேய்வுக்கான கட்டணம் | 2,381,862 | | | 517,483 | 125,435 | 1,138,502 | 7,702 | 552,635 | 4,723,618 |
| முந்திய வருடத்திற்கான சீராக்கல் | (140,980) | | | | (4,825) | 1,931 | 2,189 | 13,368 | (128,317) |
| 2020 ஆம் ஆண்டில் காணப்பட்ட சாதிக்காய் தொடர்ான வழுவினை சரிப்படுத்துவதற்கு கணக்கிலிருந்து மாற்றப்பட்டது. | (19,711) | | | | | | | (7,044) | (26,755) |
| நீக்கப்பட்டவை | | - | | | | | | | - |
| **2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு** | **370,322,826** | - | | **3,358,935** | **2,647,942** | **6,463,242** | **1,442,998** | **2,298,857** | **386,534,800** |
| **தேறிய ஏட்டுப் பெறுமதி** | | | | | | | | | |
| **2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு** | 138,331,700 | 357,059,545 | 16,527,314 | 511,439 | 1,061,679 | 8,807,242 | 122,494 | 18,391,427 | 540,812,839 |
| **மொத்த உயிரியல் சொத்துக்கள் (குறிப்பு 901+9.2)** | **138,331,700** | **357,059,545** | | **511,439** | **1,061,679** | **8,807,242** | **122,494** | **18,391,427** | **540,812,839** |

| 9 | நுகரத்தக்க உயிரியல் சொத்துக்கள் | | |
|---|---|---|---|
| | **நுகரத்தக்க உயிரியல் சொத்துக்கள்** | **2023.12.31 இல் உள்ளவாறு** | **2022.12.31 இல் உள்ளவாறு** |
| | | **ரூ.** | **ரூ.** |
| | **உயிரியல் சொத்துக்கள்** | **3,360,565,296** | **3,356,355,765** |
| | வருடத்திற்கான சேர்ப்பனவுகள் | 932,819 | 4,209,531 |
| | **மொத்த நுகரத்தக்க உயிரியல் சொத்துக்கள்** | **3,361,498,115** | **3,360,565,296** |

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தான தோட்டங்களின் நுகரத்தக்க உயிரியல் சொத்துக்கள் தற்போது மதிப்பீடு செய்யப்படுகின்றன.

2023 இல் கூட்டுத்தாபனத்தின் தோட்டங்களால் முன்வைக்கப்பட்ட மரங்களின் விபரங்களை உறுதிப்படுத்துவதற்காக அவற்றை மதிப்பீடு செய்ய முன்பு பௌதீக ரீதியாக பரீட்சிக்கப்பட்டது.

மரங்களின் விபரப் பட்டியலின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்திய பின்னர் பொருத்தமான, அங்கீகரிக்கப்பட்ட முறைகளைப் பயன்படுத்தி நுகரத்தக்க உயிரியல் சொத்துக்களை மதிப்பீடு செய்யவுள்ளோம்.

கீழுள்ள பட்டியலில் காட்டப்பட்டிருப்பது 2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான தோட்டங்களில் இருக்கின்ற மரங்களின் எண்ணிக்கையாகும்.

| **பெருந்தோட்டத்தின் பெயர்** | **2023-12-31 ஆம் திகதிக்கு பௌதீக உறுதிப்படுத்தல்களுக்க அமைவாக (வன முகாமைத்துவ திட்டத்திலுள்ள மரங்கள் தவிர்த்து) மரங்களின் மொத்த எண்ணிக்கை.** | **அங்கீகரிக்கப்பட்ட வன முகாமைத்துவத் திட்டத்திற்கேற்ப கிடைக்கத்தக்க அறுவடைசெய்யத்தக்க மரங்களின் எண்ணிக்கை** | **2023.12.31 ஆம் திகதிக்கு அரச பெருந்தோட்டத்தக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான தோட்டங்களில் உள்ள மரங்களின் மொத்த எண்ணிக்கை** |
|---|---|---|---|
| அல்லகொல்ல அரச பெருந்தோட்டம் | 3,042 | 209 | 3,251 |
| கொடகங்க அரச பெருந்தோட்டம் | 4,070 | 1,093 | 5,163 |
| கல்பிஹில்ல அரச பெருந்தோட்டம் | 10,338 | - | 10,338 |
| கோமரை அரச பெருந்தோட்டம் | 7,232 | 303 | 7,535 |
| பாகல்லை அரச பெருந்தோட்டம் | 7,517 | - | 7,517 |
| ஹெயாபார்க் அரச பெருந்தோட்டம் | 3,182 | - | 3,182 |
| ஹுன்னஸ்கிரிய அரச பெருந்தோட்டம் | 5,691 | - | 5,691 |
| கெலேபொக்கை அரச பெருந்தோட்டம் | 7,544 | 7,177 | 14,721 |
| மிட்லன்ட்ஸ் அரச பெருந்தோட்டம் | 10,471 | 782 | 11,253 |
| நிகோலோய அரச பெருந்தோட்டம் | 2,320 | - | 2,320 |
| பூபல்கலை அரச பெருந்தோட்டம் | 10,523 | 964 | 11,487 |
| ரங்கலை அரச பெருந்தோட்டம் | 5,544 | 45 | 5,589 |
| வைதலாவ அரச பெருந்தோட்டம் | 6,959 | 109 | 7,068 |
| விஹாரலை அரச பெருந்தோட்டம் | 791 | - | 791 |
| வுட்சய்ட் அரச பெருந்தோட்டம் | 3,299 | 4,435 | 7,734 |
| வலஹந்துவை அரச பெருந்தோட்டம் | 1,051 | - | 1,051 |
| **மொத்த மரங்களின் எண்.** | **89,574** | **15,117** | **104,691** |

| 10 | | 2023.12.31 திகதிக்கு | 2022.12.31 திகதிக்கு |
|---|---|---|---|
| | **முதலீட்டு ஆதனம்** | **ரூ.** | **ரூ.** |
| | அரசாங்கத்திலிருந்தான காணிப் பங்களிப்பு | 1,600,601,926 | 1,600,601,926 |
| | மூலதன மதிப்புயர்வுக்காக உறப்பட்ட கிரயம் | 10,918,715 | 10,918,715 |
| | | **1,611,520,641** | **1,611,520,641** |

**10.1 இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணிகளும், பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு ஒப்படைக்கப்பட்ட காணிகளும்.**

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு -கா.ம.ஆ (LRC) மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் வர்த்தமானி அறிவித்தல்களினூடாக 274 காணிகளின் உடமையை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கியதுடன், அவற்றுள் 240 காணிகள் 20 பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு (RPC) ஒப்படைக்கப்பட்டுள்ளன. விபரம் கீழே உள்ளது.

| | வர்த்தமானி அறிவித்தல்கள் | வர்த்தமானித் திகதி | உடமை மாற்றம் செய்த நிறுவனம் | இ.அ.பெ. கூட்டுத்தாபத்துக்கு உரித்தாக்கிய காணிகளின் எண்ணிக்கை | பி.பெ. கம்பனிகளுக்கு ஒப்படைத்தவை | இ.அ.பெ. கூட்டுத்தாபனத்திடம் இருக்கும் காணிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 150/12 | 24.07.1981 | கா.ம.ஆ | 38 | 38 | - |
| 2 | 569/14 | 02.08.1989 | கா.ம.ஆ | 3 | 3 | - |
| 3 | 571/14 | 18.08.1989 | கா.ம.ஆ | 1 | 1 | - |
| 4 | 157/13 | 03.04.1975 | ஏனைய அரச நிறுவனங்கள் | 5 | 5 | - |
| 5 | 181/12 | 27.02.1982 | கா.ம.ஆ | 80 | 54 | 26 |
| 6 | 195/6 | 31.05.1982 | கா.ம.ஆ | 14 | 9 | 5 |
| 7 | 206/15 | 20.08.1982 | கா.ம.ஆ | 1 | - | 1 |
| 8 | 230/12 | 02.02.1983 | கா.ம.ஆ | 1 | 1 | - |
| 9 | 439/18 | 06.02.1987 | ஏனைய அரச நிறுவனங்கள் | 1 | - | 1 |
| 10 | 937/2 | 19.08.1996 | கா.ம.ஆ | 7 | 7 | - |
| 11 | 815/10 | 21.04.1994 | கா.ம.ஆ | 123 | 122 | 1 |
| **மொத்தக் காணிகள்** | | | | **274** | **240** | **34** |

**10.2 இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமாக இருக்கின்ற ஏனைய காணிகளும் பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு ஒப்படைத்த காணிகளும்.**

இ.அ.பெ. கூட்டுத்தாபனம் முப்பது (30) காணிகளை கொள்வனவு செய்ததுடன், பதினொரு (11) காணிகள் பல்வேறு நிறுவனங்களிலிருந்து வர்த்தமானி அறிவித்தல்களின்றி கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்தன. இவ்வாறான நாற்பத்தியொரு (41) காணிகளுள் நாற்பது (40) காணிகள் பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. குறித்த காணிகளின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| | காணி கிடைத்த மூலங்கள் | கிடைத்த வருடம் | காணிகளின் எண்ணிக்கை | பி.பெ.கூ க்கு ஒப்படைத்த | இ.அ.பெ.கூ த்திடம் இருக்கும் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம். | 1960 | 4 | 4 | - | - |
| 2 | காணி ஆணையாளர் | 1968 | 1 | - | - | மஹாவலி செயற்றிட்டத்திற்கு ஒப்படைத்தவை |
| 3 | ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்தி சபை | 1977 | 6 | 6 | - | - |
| 4 | இ.அ.பெ கூட்டுத்தாபனத்தினால் கொள்வனவு செய்தவை | 1972, 1973, 1974, 1975 | 30 | 30 | - | - |
| | **மொத்தக் காணிகள்** | | **41** | **40** | - | |

மேற்போர்ந்த விபரங்களின் அடிப்படையில், 1992 ஆம் ஆண்டு மொத்தமாக 280 காணிகள் 20 பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு 53 வருட குத்தகை அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. குறித்த குத்தகை காலம் 2045 இல் முடிவடையும்.

குத்தகை உடன்படிக்கைகளின் நிபந்தனைகளுக்கு அமைவாக, வரையறுக்கப்பட்ட அல்கடுவை பெருந்தோட்டங்கள், வரையறுக்கப்பட்ட உடுபுஸல்லாவ பெருந்தோட்டங்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட அகரபதான பெருந்தோட்டங்கள் குத்தகை வாடகைகளை செலுத்தியுள்ளதுடன் ஏனைய பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளின் குத்தகை வாடகைகள் பொதுத் திறைசேரிக்கு செலுத்தப்பட்டுள்ளன.

40 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டுத் தரநியமங்களுக்கேற்ப, ஒரு முதலீட்டு ஆதனம் ஆரம்பமாக (உரிமை மாற்ற புள்ளியில்) அதன் கிரயத்திலும், அதனைத் தொடர்ந்து ஒன்றில் சந்தைப் பெறுமதி மாதிரி அல்லது கிரய மாதிரியை பயன்படுத்தியும் அளவிடப்படும். என்றாலும், இலங்கை நிதி அறிக்கையிடல் தர நியமங்களுக்கு மாற்றும் திகதியில் இருந்த நாணயப் பெறுமதிகளை கவனத்திற்கொள்ளும் நிலையில் முகாமைத்துவம் இல்லை. மாறாக, காணிகளை பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு ஒப்படைக்கும் போது இருந்த பெறுமதிகளையே தோட்டங்களின் நியாய விலையாக கருத்திற்கொண்டது. எனவே, 1992 இல் உள்ளவாறு பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளின் ஐந்தொகையிலிருந்து விகிதாசாரீதியில் காணியின் பெறுமதி பிரித்தெடுக்கப்பட்டது. இவ்வாறான காணிகளை பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு கையளிக்கும் திகதியில் குறித்த காணிகளின் கிரயமானது காணியின் கிரயத்தை நியாயமானளவில் பிரதிபலிப்பதாகவும் குறித்த தொகைகள் ஏடுகளின் முன்கொணரப்பட்டுள்ளதாகவும் முகாமைத்துவம் கருதுகின்றது.

2023 இல் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணிகளை மதிப்பீடு செய்வதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், எமக்கு உரித்தான இடங்களை கணக்கிடுவதற்கான மொத்த செலவினத்தை அறிவிக்குமாறு அரச மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதற்கு பதிலளிக்கும் வகையில் எமது காணிகளை மதிப்பீடு செய்வதற்காக அவர்களின் கட்டணத்தை அறவிடுவது தொடர்பாக ஒரு சூத்திரம் தொடர்பாக அறிவித்துள்ளனர். இந்த சூத்திரத்திற்கு அமைவாக இந்த மதிப்பீட்டிற்கு பாரியளவு நிதியை செலவிட வேண்டியிருக்கும். நாம் தற்போது முகங்கொடுக்கின்ற நிதி நெருக்கடிகள் காரணமாக இந்தளவு பாரியளவு செலவினத்தை மேற்கொள்ளும் நிலையில் கூட்டுத்தாபனம் இல்லை. என்றாலும், இக்காணிகளை மதிப்பீடு செய்யும் ஆரம்ப கட்ட முன்னோடி செயற்திட்டமாக ஒரு காணியை மதிப்பீடு செய்யுமாறு பணிப்பாளர் சபையில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் காலங்களில் காணிகளை மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகளை

# இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம்
**நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்**

| 11 இருப்புக்கள் | 2023.12.31 ஆம் திகதிக்கு ரூ. | 2022.12.31 ஆம் திகதிக்கு ரூ. |
|---|---|---|
| முடிவு உற்பத்தி | 51,878,540 | 20,618,706 |
| நுகரத்தக்க கையிருப்பு | 34,343,200 | 46,780,552 |
| | **86,221,740** | **67,399,258** |

முடிவுற்பத்திக் கையிருப்புக்கள் கிரயத்தின் மிகவும் குறைவான பெறுமதி மற்றும் தேறிய தேறல்செய்யப்பட்ட பெறுமதி (NRV) என்பவற்றை கருத்திற்கொண்டு கணக்கிடப்பட்டுள்ளன.

| 12 வர்த்தகம் மற்றும் ஏனைய பெறத்தக்கவை | 2023.12.31 ஆம் திதிக்கு ரூ. | 2022.12.31 ஆம் திகதிக்கு ரூ. |
|---|---|---|
| வர்த்தக கடன்படுனர்கள் - தலைமை காரியாலயம் (அ) | 43,124,085 | 75,654,661 |
| கழி : தலைமை காரியாலய கடன்படுநர்களுக்கான ஏற்பாடு | (19,879,268) | (19,879,268) |
| வர்த்தக கடன்படுனர்கள் - அனைத்து தோட்டங்களும் (ஆ) | 251,813,385 | 239,834,659 |
| கழி : தோட்ட கடன்படுநர்களுக்கான ஏற்பாடு | (59,652,474) | (59,652,474) |
| ஏனைய பெறத்தக்கவை - தலைமை அலுவலகம் | 61,465,342 | 35,444,728 |
| **கழி : ஐயக்கடன், குத்தகை, காணி வாடகை ஏற்பாடுகள்** | (15,780,848) | (15,780,848) |
| ஏனைய பெறத்தக்கவை - அனைத்து தோட்டங்கள் | 48,331,554 | 45,821,076 |
| இடைநிறுத்தப்பட்ட பணிக்கொடை (2012 நிலுவை) | 85,257,147 | 85,257,147 |
| கழி : இடைநிறுத்தப்பட்ட பணிக்கொடைக்கான ஏற்பாடு | (85,257,147) | (85,257,147) |
| | **309,421,776** | **301,442,535** |

| அ). **வர்த்தகக் கடன்படுநர் - தலைமை அலுவலகம் கீழுள்ளவை நிலுவை உள்ளடங்கலாக** | 2023.12.31 ஆம் திதிக்கு | 2022.12.31 ஆம் திகதிக்கு |
|---|---|---|
| பீ.சீ.சி கம்பனி | 15,404,568 | 15,404,568 |
| கழி : தலைமை அலுவலக கடன்படுநர்களின் விஷேட கடன் தள்ளுபடி | (15,404,568) | (15,404,568) |
| எல்கடுவ பெருந்தோட்டம் | 1,916,092 | 1,916,092 |
| வுட்சைற் பெருந்தோட்டம் | 992,125 | 992,125 |
| கழி : ஐயக்கடன் கடன்படுநர்களுக்கான ஏற்பாடு - வுட்சய்ட் | (992,125) | (992,125) |
| துக்வரி | 2,500,000 | 2,500,000 |
| கழி : ஐயக்கடன் கடன்படுநர்களுக்கான ஏற்பாடு - துக்வரி | (2,500,000) | (2,500,000) |
| வர்த்தகக் கடன்படுநர்கள் | 880,434 | 880,434 |
| கழி : ஐயக்கடன் ஏற்பாடு - வர்த்தகக் கடன்படுநர்கள் | (880,434) | (880,434) |
| ஜீ.ஜீ மஹேந்திரரத்ன | 102,140 | 102,140 |
| கழி : ஐயக் கடன் ஏற்பாடு - ஜீ.ஜீ மஹேந்திரரத்ன | (102,140) | (102,140) |
| பெறத்தக்க கணக்குகள் - பச்சையிலை கொள்வனவாளர்கள் | 21,031,488 | 53,791,771 |
| நானாவித மற்றும் ஏனைய கடன்படுநர்கள் | 297,337 | 67,530 |
| | **23,244,917** | **55,775,393** |

| ஆ). **வர்த்தக கடன்படுநர் - தோட்டங்களுக்கு கீழுள்ள நிலுவைகள் உள்ளடங்கும்** | | |
|---|---|---|
| நானாவித கடன்படுனர்கள் | 38,390,538 | 37,164,388 |
| நுகர்வோர் கடன்படுனர்கள் | 41,071,407 | 41,071,407 |
| நானாவித வருமான கடன்படுனர்கள் | 2,588,530 | 2,588,530 |
| ஜே.ஈ.டி.பீ | 1,668,269 | 1,668,269 |
| உற்பத்தி கடன்படுநர்கள் | 726,644 | 726,644 |
| கழி : இனங்காணா நாற்றுமெடை நிலுவைகள் | (10,524,054) | (10,524,054) |
| **கழி** : தோட்ட கடன்படுநர்களின் குறிப்பான பெறுமதியிழப்பு | (47,537,070) | (47,537,070) |
| கழி : அறவிடமுடியா கடன்களுக்கான ஏற்பாடு | (1,591,349) | (1,591,349) |
| தோட்டங்களுக்கிடையிலான நடைமுறைக் கணக்கு | - | - |
| ஏனைய கடன்படுநர்கள் - நடைமுறைக் கணக்கு நிலுவைகள் | 167,367,998 | 156,615,421 |
| | **192,160,912** | **180,182,185** |

# இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம்

**நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்**

| | | 2023.12.31 ஆம் திகதிக்கு ரூ. | 2022.12.31 ஆம் திகதிக்கு ரூ. |
|---|---|---|---|
| 13 | **காசும் காசுக்கு சமமானவையும்** | | |
| **(அ)** | **சாதக நிலுவைகள்** | | |
| | கையிருப்பிலும் வங்கியிலும் உள்ள காசு | | |
| | - தலைமையகம் | 3,125,608 | 105,048,534 |
| | - தோட்டங்கள் | 1,963,235 | 4,489,398 |
| | | **5,088,843** | **109,537,932** |
| **((ஆ)** | **பாதக நிலுவைகள்** | | |
| | - மக்கள் வங்கி நடைமுறைக் கணக்குகள் | **(135,391,976)** | **(147,576,144)** |
| | **வருட முடிவில் காசும் காசுக்கு சமமானவையும்** | **(130,302,233)** | **(38,038,213)** |

**((இ).** மக்கள் வங்கியிலிருந்து ரூபா.130 மில்லியன் நிரந்தவ வங்கி மேலதிகப் பற்று பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதற்கு கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் பிணைப்பொறுப்பளிக்கப்பட்டுள்ளன. ** (யோசனை முன்வைக்கப்படுள்ளது). கட்டிடத்தின் பெறுமதியானது 2023 ஆகஸ்ட் 02 ஆம் திகதி மக்கள் வங்கியினால் பொறுப்புச்சாட்டப்பட்ட பட்டய மதிப்பீட்டு அளவையாளரால் கணிப்பீடு செய்யப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையிலமைந்ததாகும்.

**நிரந்தர வங்கி மேலதிகப் பற்று ஏற்பாட்டின் தற்போதைய கட்டமைப்பு**

| **நிரந்தர வங்கி மேதலிகப் பற்றுக்கான பிணைப்பொறுப்பு** | **பிணைப் பொறுப்பளித்துள்ள தொகை ரூபா.** | **நிரந்தர வங்கி மேலதிகப் பற்று தொகை ரூபா.** |
|---|---|---|
| இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தெமட்டகொடைகட்டிடம் ** | | 50,000,000 |
| இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தெமட்டகொடைகட்டிடம் ** | 614,000,000 | 50,000,000 |
| இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தெமட்டகொடைகட்டிடம் ** | | 30,000,000 |
| **மொத்தம்** | | **130,000,000** |

மதிப்பீட்டு வருடத்தில் **046-2005-9-0000933** ஆம் இலக்க மக்கள் வங்கி சேமிப்பு கணக்கின் பாதுகாப்பு நிலுவையை பயன்படுத்தியும், மேலும் **046600100005667-5** ஆம் இலக்க மற்றும் **046600100005591-6** ஆம் இலக்க நிலையான வைப்புக் கணக்குகளிலிருந்து பணத்தை மீளப்பெற்று ரூபா. 35.48 பெறுமதியான நிலையான வங்கி மேலதிகப் பற்று செலுத்தி தீர்க்கப்பட்டது.

| | | 2023.12.31 ஆம் திகதிக்கு ரூ. | 2022.12.31 ஆம் திகதிக்கு ரூ. |
|---|---|---|---|
| 14 | **<u>பங்களிக்கப்பட்ட மூலதனம்</u>** | | |
| | அரசாங்க பங்களிப்பு (மானியம்) | 3,519,802,947.00 | 3,455,902,947 |
| | அரசாங்கத்திலிருந்து காணி பங்களிப்பு | 2,616,589,903 | 2,616,589,903 |
| | | **6,136,392,850** | **6,072,492,850** |

மொத்த அரசாங்க பங்களிப்பு அரசாங்கத்திலிருந்து (திறைசேரி) கிடைக்கபெற்ற காசு மற்றும் அரசாங்கத்தினால் வர்த்தமானி அறிவித்தல் மூலம் இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனத்துக்கு உரிமை மாற்றம் செய்த காணிகளையும் உள்ளடக்கும். மீளாய்வுக்கு உட்படுத்தப்படுகின்ற வருடத்தில் செலுத்தப்படாத நியதிச்சட்ட கொடுப்பனவுகளுக்காக இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு திறைசேரியிலிருந்து ரூபா. 63.90

| | | தலைமை அலுவலகம் 2023 | தோட்டங்கள் 2023 | 2023.12.31 ஆம் திகதிக்கு ரூ. | 2022.12.31 ஆம் திகதிக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| 15 | **ஊழியர் நலன் கடப்பாடுகள்** | | | | |
| | ஆரம்ப நிலுவை - தோட்டங்கள் | - | 618,432,647 | 618,432,647 | 585,625,960 |
| | தலைமை அலுவலகம் | 25,489,691 | - | 25,489,691 | 24,515,057 |
| | பணிக்கொடை இடைநிறுத்தம் (2021 நிலுவை) | - | - | - | 85,257,147 |
| | பற்றாக்குறை / (மிகை) பணிக்கொடை ஒதுக்கல் | 777,458 | 1,887,622 | 2,665,080 | 7,080,643 |
| | வருடத்துக்கான ஏற்பாடு | 1,330,301 | 30,949,671 | 32,279,972 | 35,498,178 |
| | செலுத்தத்தக்க பணிக்கொடைக்கான மாற்றப்பட்டது | (2,921,628) | (90,997,889) | (93,919,517) | (94,262,337) |
| | ஏனைய கொடுக்கல் வாங்கல்கள்/ பரிமாற்றம் | 427,433 | (1,194,108) | (766,675) | 208,970 |
| | **கடப்பாடுகள்** | **25,103,255** | **559,077,942** | **584,181,197** | **643,923,619** |

# இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம்

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| | | 2023.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு | 2022.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு |
|---|---|---|---|
| 16 | **வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்தத்தக்கவை** | ரூ. | ரூ. |
| | தலைமை அலுவலகம் (அ) | 442,622,983 | 348,855,720 |
| | தோட்டங்கள் (ஆ) | 1,714,254,373 | 1,600,879,129 |
| | | **2,156,877,356** | **1,949,734,850** |

| | | 2023.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு | 2022.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு |
|---|---|---|---|
| அ). | **கீழுள்ளவை உள்ளடங்கலாக தலைமை காரியாலயத்துக்கான வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்தத்தக்கவை** | | |
| | பேர்த் தோட்டம் | 6,610,411 | 6,610,411 |
| | ஜனதா தோட்டங்கள் அபிவிருத்தி சபை | 97,709,342 | 97,709,342 |
| | முடிவுத் தேயிலை தரகர்களிடமிருந்து பெற்ற முற்பணம் | 48,316,765 | 247,000 |
| | பெற்றுக்கொண்ட முற்பணம் - பச்சை இலை கொள்வனவாளர்கள் | 1,449,988 | 369,340 |
| | முற்பணக் கொடுப்பனவு - விலைமனு வாடிக்கையாளர்கள் | 1,139,492 | - |
| | கூட்டுத்தாபன தேயிலை வியாபார தரகர்களுக்கான மேலதிக கொடுப்பபனவுகள் | 6,872 | - |
| | அரச வளங்கள் முகாமைத்துவ கூட்டுத்தாபனம் | 28,709,029 | 28,709,029 |
| | உரக் கூட்டுத்தாபனம் | 35,931,679 | 35,931,679 |
| | சிலாபம் பெருந்தோட்டம் | 41,210,959 | 39,610,959 |
| | கடன் இலங்கை கணிய மணல் | 25,000,000 | 25,000,000 |
| | அட்டுறு செலவினங்கள் | 23,306,903 | 19,277,659 |
| | EPF - செலுத்தத்தக்கது | 22,926,897 | 20,101,188 |
| | ESPS - செலுத்தத்தக்கது | 11,692,077 | 8,965,776 |
| | CPPS - செலுத்தத்தக்கது | 18,135,315 | 14,445,397 |
| | E.T.F செலுத்தத்தக்கது | 293,615 | 175,062 |
| | மீளளிக்கும் வைப்புக்கள் | 41,402,978 | 38,654,512 |
| | செலுத்தத்தக்க பணிக்கொடை | 3,253,946 | 1,627,943 |
| | இலங்கை தேயிலை சபை — உரம் | 6,666,672 | - |
| | செலுத்தத்தக்க வட்டி - மக்கள் வங்கிக் கடன் - 100 மி. | 20,054,428 | 6,537,285 |
| | ஏனைய செலுத்தத்தக்கவை | 8,805,616 | 4,883,139 |
| | **மொத்தம்** | **442,622,983** | **348,855,720** |

| | | திகதியில் உள்ளவாறு | திகதியில் உள்ளவாறு |
|---|---|---|---|
| ஆ). | **கீழுள்ளவை உள்ளடங்கலாக வர்த்தகம் மற்றும் தோட்டங்களுக்கான செலுத்தத்தக்கவை** | | |
| | கடன்கொடுநர்கள் | 6,838,664 | 5,952,080 |
| | விடுமுறைக் கொடுப்பனவுக்கான ஏற்பாடு | 993,725 | 1,500,749 |
| | விடுமுறைக் கொடுப்பனவு | 20,773,747 | 24,014,560 |
| | எல்கடுவ தோட்டம் | 172,137 | 172,137 |
| | ஏனைய பொறுப்புக்கள் | 102,183,652 | 57,431,311 |
| | தொழிற் சங்கங்கள் | 9,557,646 | 8,714,745 |
| | ஆளணி மற்றும் தொழிலாளர் கொடுப்பனவுகள் | 34,188,575 | 50,066,403 |
| | கணக்காய்வு மற்றும் காப்புறுதிக்கான கட்டணங்களுக்கான ஏற் | 7,700,651 | 8,182,158 |
| | செலுத்தத்தக்க ஊ.சே.நி | 666,314,285 | 617,378,035 |
| | செலுத்தத்தக்க - ESPS | 61,620,943 | 44,089,555 |
| | செலுத்தத்தக்க - CPPS | 24,954 | 24,954 |
| | செலுத்தத்தக்க ஊ.ந.நி | 49,438,814 | 45,837,829 |
| | செலுத்தத்தக்க பணிக்கொடை | 625,998,758 | 550,685,803 |
| | அட்டுறு செலவினங்கள் | 13,920,970 | 80,865,163 |
| | வரவு மீதூதிய கொடுப்பனவு | 1,009,067 | 1,192,301 |
| | ஊ.சே.நி மிகை விதிப்பு செலுத்தத்தக்கவை | 78,378,572 | 77,726,161 |
| | ஊ.ந.நி மிகை விதிப்பு செலுத்தத்தக்கவை | 9,295,631 | 6,427,665 |
| | பணிக்கொடை மிகை விதிப்பு செலுத்தத்தக்கவை | 25,843,582 | 20,617,519 |
| | **மொத்தம்** | **1,714,254,373** | **1,600,879,129** |
| **16.1** | **வங்கிக் கடன் மக்கள் வங்கி** | **79,310,000** | **100,000,000** |

2020 ஏப்ரல் மாதத்தில் காசுப் பாய்ச்சல் பற்றாக்குறையை ஈடுசெய்வதற்காக 2020 ஏப்ரல் 09 ஆம் திகதி மக்கள் வங்கியிலிருந்து மேற்கூறப்பட்ட கடன் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், ஆறு மாதங்களில் உரிய வட்டியுடன் குறித்த கடன் செலுத்தப்படும் என்று திறைசேரி உத்தரவாதமளித்தது. உடன்பட்ட வட்டி விகிதம் AWPLR+2.5%. எனினும், கடந்த வருடங்களில் நாம் முகங்கொடுத்த மிகவும் இறுக்கமான காசுப் பாய்ச்சற் நிலைமைகளால் எமக்கு ரூபா. 20.69 மில்லியனை மாத்திரமே செலுத்தக்கூடியதாக இருந்ததுடன் வட்டியை மாத்திரம் செலுத்துதல் என்ற நிபந்தனையுடன் சலுகைக்காகலம் நீடிக்கப்பட்டது.

தற்போது இந்த வங்கிக் கடனை செலுத்தப்படாது நிலுவையிலுள்ள வட்டியுடன் ஐந்து வருடங்களுக்கு மீளசெலுத்தல் உடன்பாட்டுடன் அதனை நீண்டகால கடன் வசதியாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம், திறைசேரி அங்கீகாரம் மற்றும் பிணை என்பன பெற்றுக்கொள்ளப்பட்டிருப்பதுடன் அதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

# இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம்

**நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்**

| 17 **வருமானம்** | 2023.12.31<br>திகதிக்கு<br>ரூ. | 2022.12.31<br>திகதிக்கு<br>ரூ. |
|---|---|---|
| தேயிலை | 530,705,781 | 347,708,177 |
| பச்சை இலை | 462,446,492 | 710,242,379 |
| சிறு பயிர்கள் | 18,048,754 | 4,220,199 |
| இறப்பர் | 1,414,816 | 8,492,760 |
| **மொத்த வருமானம்** | **1,012,615,844** | **1,070,663,514** |

கொழும்பு தேயிலை ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட முடிவுத் தேயிலையிலிருந்து கிடைத்த வருமானங்கள், கூட்டுத்தாபனத் தேயிலையிலிருந்த கிடைத்த விற்பனை வருமானங்கள் மற்றும் மறுக்கப்பட்ட தேயிலை விற்பனையிலிருந்து கிடைத்த வருமானங்கள் என்பன விற்பனை வருமானங்களில் உள்ளடங்கும்.

| 18 **ஏனைய வருமானம்** | 2023.12.31<br>திகதிக்கு<br>ரூ. | 2022.12.31<br>திகதிக்கு<br>ரூ. |
|---|---|---|
| மரம் - விலைமனுகோரல் | 86,053,385 | 96,106,317 |
| குத்தகை வாடகைகள் | 18,189,536 | 19,382,258 |
| முகாமைத்துவக் கட்டணம் | 10,612,085 | 14,790,199 |
| நிதி வருமானம் | 1,014,565 | 1,974,535 |
| ஹுன்னஸ்கிரிய நீர் வீழ்ச்சியிலிருந்து கிடைத்த வருமானம் | 1,369,773 | 180,946 |
| அரசாங்க கொடைகள் மற்றும் மானியம் | 2,655,167 | 592,667 |
| விருந்தினர் பங்களாவிலிருந்து கிடைத்த வருமானம் | 1,289,152 | 788,439 |
| நுழைவுச் சீட்டு வருமானம் | 2,205,250 | 2,475,050 |
| ஏனைய வருமானம் - தோட்டங்கள் மற்றும் தலைமை அலுவலக | 11,955,071 | 23,141,784 |
| விருந்தினர் பங்களாவிலிருந்து கிடைத்த வருமானம் | 399,900 | 521,800 |
| **மொத்த ஏனைய வருமானம்** | **135,743,884** | **159,953,995** |

| 19 **நிர்வாக செலவினங்கள்** | 2023.12.31<br>திகதிக்கு<br>ரூ. | 2022.12.31<br>திகதிக்கு<br>ரூ. |
|---|---|---|
| தனிப்பட்ட செலவு (தலைமை அலுவலகம்) | 49,200,419 | 45,758,326 |
| கட்டாயப் பங்களிப்புக்கள் EPF, CPPS மற்றும் ESPS (தலைமை அலுவலகம்) | 4,852,131 | 4,785,954 |
| கட்டாய பங்களிப்புகள் - ETF (தலைமை அலுவலகம்) | 1,202,980 | 1,155,700 |
| பெறுமானத் தேய்வு - தலைமை காரியாலயம் | 1,697,455 | 980,000 |
| பணிக்கொடைச் செலவு - தலைமையகம் | 1,330,301 | 1,408,962 |
| ஏனைய நிர்வாக செலவுகள் - தலைமையகம் மற்றும் தோட்டம் | 65,819,110 | 75,443,521 |
| பணிக்கொடைச் செலவு - (தோட்டங்கள்) | 30,949,671 | 34,089,216 |
| ஏனைய நிர்வாக செலவுகள் - தோட்டங்கள் | 63,104,361 | 61,248,356 |
| **மொத்த நிர்வாகச் செலவினங்கள்.** | **218,156,428** | **224,870,036** |

| 20 **நிதிச்செலவினங்கள்** | 2023.12.31<br>திகதிக்கு<br>ரூ. | 2022.12.31<br>திகதிக்கு<br>ரூ. |
|---|---|---|
| காசுக்கழிவுகள் | 6,808,618 | 6,360,240 |
| தேயிலை தரகர் முற்பண வட்டி | 8,050,274 | 1,929,105 |
| வங்கிக் கட்டணங்கள் | 1,258,547 | 1,127,602 |
| வங்கி மேலதிக பற்று வட்டி | 36,729,279 | 24,230,270 |
| வங்கிக் கடன் வட்டி (மக்கள் வங்கி) | 18,601,853 | 15,842,442 |
| ஏனைய கடன் வட்டி - சிலாபம் பெருந்தோட்டம் | 1,600,000 | 1,600,000 |
| **மொத்த நிதிச்செலவினங்கள்** | **73,048,571** | **51,089,659** |

**21 வருமான வரி**

கூட்டுத்தாபனத்தின் வருடாந்த கணக்குகளில் வருமான வரி கணக்கெடுப்புகள் கடந்த பதினெட்டு வருடங்களாக காட்டப்படவில்லை. இதன் காரணமாகவும் தொடர்ந்தேர்ச்சியான நட்டங்களாலும் எதிர்காலத்தில் வரியிடத்தக்க இலாபங்கள் கிடைக்காமல் போகலாம் என்றும் இ.அ.பெ.கூட்டுத்தாபனத்தினால் வருமான வரி செலுத்தப்படாதிருக்கலாம் என ஊகிக்க முடிகின்றது. கடந்த இருபத்தேழு வருடங்களுள் (1995 - 2021) வெறும் நான்கு வருடங்களிலேயே கூட்டுத்தாபனம் இலாபம் உழைத்துள்ளது. (என்றாலும், தற்போதும், எங்களால் முன்வைக்கப்பட வேண்டிய முன்னைய வருடங்களுக்குரிய வருமான வரி அறிக்கையை சமர்ப்பிப்பதற்கும் அடுத்த வருடங்களுக்குரிய வருமான வரி அறிக்கையை உரிய திகதியிலேயே சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம்). உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் கலந்துரையாடல் நடாத்தப்பட்டதுடன், வருமான வரி அறிக்கையை சமர்ப்பிப்பது தொடர்பாக முன்னேற்றம் கண்டிருக்கிறோம்.

## 22 தொடர்புடைய திறத்தவர் பரிமாற்றங்கள்

**அரச மற்றும் அரச கட்டுப்பாட்டிலுள்ள நிறுவனங்களுடனான பரிமாற்றங்கள்**

சாதாரண தொழிற்பாடுகளின் போது கூட்டுத்தாபனம் தொடர்புடைய திறத்தவர்களுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்கின்றது. தொடர்புடைய திறத்தவர்களுள் இலங்கை அரசாங்கம் (கூட்டுத்தாபனத்தின் அறுதி உரிமை உடையது), பல்வேறு அரசாங்க திணைக்களங்கள் மற்றும் அரச கட்டுப்பாட்டிலுள்ள நிறுவனங்கள் உள்ளடங்குகின்றன. கூட்டுத்தாபனத்தினால் அரச மற்றும் அரச கட்டுப்பாட்டிலுள்ள நிறுவனங்களுடன் நடத்தும் பரிமாற்றங்கள் மற்றும் ஏற்பாடுகள் தனிப்பட்ட வகையில் முக்கியமானவை. என்றாலும், தனிப்பட்ட ரீதியாகவன்றி கூட்டாக மேற்கொள்ளும் பரிமாற்றங்களின் விபரம் வருமாறு.

| | 2023 | 2022 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| **நிலுவையிலுள்ள மீதிகள்** | | |
| **பின்வரும் நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டியவை** | | |
| அரச வளங்கள் முகாமைத்துவ கூட்டுத்தாபனம் | 28,709,029 | 28,709,029 |
| உரக் கூட்டுத்தாபனம் | 35,931,679 | 35,931,679 |
| சிலாபம் பெருந்தோட்டங்கள் | 41,210,959 | 39,610,959 |
| வரையறுக்கப்பட்ட லங்கா கணிய மணல் | 25,000,000 | 25,000,000 |
| எல்கடுவ பெருந்தோட்டம் | 172,137 | 172,137 |
| ஜனதா தோட்டங்கள் அபிவிருத்தி சபை (JEDB) | 97,709,342 | 97,709,342 |
| பேர்த் தோட்டம் | 6,610,411 | 6,610,411 |
| | **235,343,557** | **233,743,557** |
| **பின்வருவனவற்றிலிருந்து பெறத்தக்கவை** | | |
| எல்கடுவ பெருந்தோட்டம் | 1,916,092 | 1,916,092 |
| ஜனதா தோட்டங்கள் அபிவிருத்தி சபை (JEDB) | 41,071,407 | 41,071,407 |
| ஜனதா தோட்டங்கள் அபிவிருத்தி சபை (JEDB) | 1,668,269 | 1,668,269 |
| | **44,655,768** | **44,655,768** |

## 23 எதிர்பார பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்

நீண்டகாலமாக செலுத்தப்படாதிருந்த நியதிச்சட்ட பொறுப்புக்கள் ( EPF, ETF மற்றும் பணிக்கொடைகள்) தொடர்பாக ஐந்தொகை திகதியில் இ.அ.பெ.கூ க்கு எதிராக பன்விலை, தெல்தெனிய மற்றும் மாத்தளை நீதிவான் நீதிமன்றங்களில் 784 வழக்குகள் தாக்கலிடப்பட்டிருந்தன. 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்தில் மொத்தமாக 163 வழக்குகள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதுடன், 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் மொத்தமாக 784 வழக்குகள் விசாரிக்கப்படுகின்றன. மேலும், 2023 இல் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக 95 வழக்குகள் புதிதாக தாக்கலிடப்பட்டுள்ளன. குறித்த வழக்குகள் கூட்டுத்தாபனத்திற்கு சார்பாக தீர்க்கப்படலாம் என்றிருந்தாலும் அதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு என கூட்டுத்தாபனத்தின் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். அதற்கேற்ப, ஏதேனும் எதிர்பாரா பொறுப்புக்கு இந்நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகள் செய்யவில்லை.

முந்தைய வருடங்களைப் போன்று, 2023 இல் ஒவ்வொரு வாரமும் விசாரணைக்கு எடுக்கப்பட்ட நீண்டகாலமாக செலுத்தப்படாத ஊழியர் பணிக்கொடை தொடர்பான வழக்குகளுக்கான கொடுப்பனவுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. அந்த வகையில், 2020 முதல் 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் வரையான காலத்தில், வாராந்தம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட நியதிச்சட்ட நீதிமன்ற வழக்குகளுக்காக திறைசேரியிலிருந்து நிதி கோராது அதன் சொந்த நிதியிலிருந்து 281.04 மிலியன் ரூபா செலுத்தப்பட்டது. என்றாலும், 2023 செப்டம்பர் மாதத்திலிருந்து ஊழியர் நியதிச்சட்ட கொடுப்பனவுகளுக்காக அல்லது அது தொடர்பான வழக்குகளில் இணக்கத்தை ஏற்படுத்திக்கொள்வதற்காக திறைசேரியிலிருந்து மாதாந்தம் 21.3 மில்லியன் ரூபா கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டதுடன், அந்த வகையில் 2023 செப்டம்பர் முதல் டிசம்பர் வரை கூட்டுத்தாபனத்திற்கு திறைசேரியிலிருந்து 63.9 மில்லியன் ரூபா கிடைத்துள்ளது. வழக்கு நடவடிக்கைகளுக்காக கணிசமான தொகை வெளியே செல்வதாலும் 2021 மார்ச் மாதம் முதல் தொழிலாளர் வேதனம் ரூபா. 1000 அதிகரிக்கப்பட்டதாலும் கூட்டுத்தாபனத்திற்கு வருடாந்தம் ரூபா. 150 மில்லியனை மேலதிக செலவாக உறப்பட வேண்டியிருந்தது. இது 34.5 சதவீத அதிகரிப்பாகும். இதன் காரணமாக இந்த காலத்திற்குரிய மாதாந்த பணிக்கொடை செலுத்தப்படவில்லை. இந்த நான்கு மாதங்களுக்கு மாத்திரம் குறித்த பணிக்கொடை செலுத்தப்பட்டது.

## 24 ஐந்தொகை திகதிக்கு பின்னரான நிகழ்வுகள்

ஐந்தொகை திகதிக்கு பின்னரான அனைத்து முக்கிய நிகழ்வுகளும் கருத்திற்கொள்ளப்பட்டதுடன் நிதிக்கூற்றுக்களுக்கான பொருத்தமான சீராக்கல்கள் மற்றும் வெளிப்படுத்துகைகள் நிதிக்கூற்றில் தேவையான போது குறிப்பிடப்பட்டுள்ளன.

## 25 முந்திய வருட சீராக்கல்கள்

முந்திய வருட சீராக்கல்கள் முந்திய நிதி வருடங்களுடன் தொடர்புடைய கீழுள்ள பரிமாற்றல்களை உள்ளடக்குவதுடன், அவை பெருந்தோட்டங்களால் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டன

| **விபரங்கள்** | 2023 | 2022 |
|---|---|---|
| | ரூ | ரூ |
| செலுத்த வேண்டிய பணிக்கொடை/ ஏற்பாடு (குறை /மிகை ஏற்பாடு) | 6,022,343 | 12,036,972 |
| பணிக்கொடை மிகைக் கட்டணங்கள் | 227,010 | 12,884,415 |
| EPF மிகைக் கட்டணங்கள் | 3,854,975 | 21,415,537 |
| ETF மிகைக் கட்டணங்கள் | 521,454 | 3,472,407 |
| ஐயக்கடன் ஏற்பாடுகள் - சபையின் அங்கீகாரத்துடன் | - | 116,036,749 |
| குறைத்து/ மிகைத்து கூறப்பட்ட பெறுமானத்தேய்வு ஏற்பாடுகள் | (141,578) | 969,966 |
| உரிமை கோரப்படாத கடன்கொடுநர் நிலுவை ஏற்பாடுகள் | - | (21,797,337) |
| ஏனைய செலவுகள்/ சீராக்கல்கள் | (7,069,652) | 6,610,147 |
| **மொத்தம்** | **3,414,552** | **151,628,855** |

## 26 பிற்போடப்பட்ட சொத்துக்கள்

கணக்கீட்டுக் கொள்கையின் 3.1.4.3 க்கு அமைவாக இந்த வருடத்தில் பிற்போடப்பட்ட சொத்துக்கள் 10 சதவீதத்தினால் பதிவழிக்கப்பட்டதுடன், இலாபம் மற்றும் நட்டக் கணக்கில் சாதாரண கட்டணங்கள் - வீதிகள் கீழ் அறவிடப்பட்டது. முந்திய நிதியாண்டுக்கான சீராக்கலும் இலாபம் மற்றும் நட்ட ஒதுக்கீட்டுக் கணக்கில் கணக்கு வைக்கப்பட்டு செலவு வைக்கப்பட்டது.

# தணிக்கை அறிக்கை 2023



**தலைவர்,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்.**

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது நியதிகளுக்கேற்ப 2023 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்துக்கான இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குவிதித் தேவைப்பாடுகள் தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை.

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1. தகுதியுடைய அபிப்பிராயம்

2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு உள்ளவாறான இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமைக்கூற்று, அத்திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான விரிவான வருமானக்கூற்றுக்கள், பங்குரிமைக் கூற்றுக்கள், அத்திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான பணப்பாய்ச்சற்கூற்று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளுடன் தொடர்புடைய தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் இணைத்து வாசிக்கத்தக்க 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் மற்றும் 1958 ஆம் ஆண்டு 04 ஆம் இலக்க இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் 14 ஆம் உறுப்புரையின் விதிமுறைகளுக்கு அமைவாக எனது கட்டளையின் பேரில் கணக்காய்வு செய்யப்பட்டது. எனது அறிக்கையானது அரசியலமைப்பின் உறுப்புரை 154(6) ஆம் ஏற்பாடுகளின் கீழ் உரிய காலத்தில் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும்.

எனது கருத்துப்படி, எனது அறிக்கையின் தகுதியுடைய அபிப்பிராயத்துக்கான அடிப்படை என்ற பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் விளைவுகள் தவிர்த்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் 2023 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு உள்ளவாறான கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமை தொடர்பாக உண்மையானதும் நியாயமானதுமான பார்வையை வழங்குவதுடன், அதன் நிதி செயலாற்றுகையும் குறித்த திகதியில் முடிவடைந்த திகதிக்கான அதன் நிதிப்பாய்ச்சல்களும் இலங்கை கணக்கீட்டு தரநியமங்களுக்கேற்ப அமைந்துள்ளன.

### 1.2 தகுதியுடைய அபிப்பிராயத்துக்கான அடிப்படை

அ. இலங்கையின் நிதியறிக்கையிடல் நியமம் - 13 இன் 27 ஆம் பந்திக்கு அமைவாக நிதியல்லாச் சொத்துக்களை நியாயப் பெறுமதியில் கணக்கிட்டிருக்க வேண்டுமென்றிருந்தாலும், கூட்டுத்தாபனத்திற்குரிய 16 தோட்டங்களுள் 15 தோட்டங்களுக்குச் சொந்தமான 10,918 ஹெக்டயர் நிலப்பரப்பின் பெறுமதியை கணக்கிட்டு சொத்துக்களாக கணக்குவைக்கப்படவில்லை.

ஆ. இலங்கைக் கணக்கீட்டு நியமம் – 19 இன் 57 ஆவது பந்தியின் பிரகாரம், நிறுவனத்தின் சேவை நலன் பொறுப்புக்களைக் கணக்கிடுகையில்

உள்ளபடியான முறை பிரயோகிக்கப்பட வேண்டுமென்றிருந்தாலும், ரூபா. 584,181.197 பெறுமதியான ஊழியர் நன்மைகளைக் கணக்கிடும் போது கூட்டுத்தாபனத்தினால் அவ்வாறு உள்ளபடியான முறை பயன்படுத்தப்படவில்லை. இதனால், குறித்த பெறுமதி மிகையை அல்லது பற்றாக்குறையை காண்பிக்கலாம்.

இ. கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 14 தோட்டங்களில் பரவலாக காணப்படுகின்ற 104,691 வெட்டுமரங்களை உரிய முறையில் மதிப்பீடு செய்யாது அல்லது அவற்றை சாதாரண பெறுமதியில் கணக்கிடாது அவற்றின் பெறுமதியை நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 3,361,498,115 காட்டப்பட்டிருந்தது. இது இலங்கைக் கணக்கீட்டு நியமம் 41 இன் 12 மற்றும் 30 ஆம் உறுப்புரைகளுக்கு முரணானது.

ஈ. இலங்கைக் கணக்கீட்டு நியமம் 41 இன் 45 ஆம் உறுப்புரைக்கு அமைவாக உயிரியில் சொத்துக்கள் முதிர்ந்த மற்றும் முதிர்ச்சியடையாத சொத்துக்கள் என காட்டப்பட வேண்டுமென்றிருந்தாலும், கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ரூபா. 9,991,4115 பெறுமதியான இறப்பர், மிளகு மற்றும் கோப்பி ஆகியன அவ்வாறு பிரித்து காட்டப்படவில்லை.

உ. மீளாய்விற்கு உட்படுத்தப்படுகின்ற வருடத்தில் வெட்டுமர விற்பனையினால் கிடைத்த ரூபா. 86,053,385 பெறுமதியான வருமானத்திலிருந்து அந்த மரங்களுக்கான செலவுகளை இனங்கண்டு உரிய கணக்குகளுக்கு சீராக்கம் செய்யப்படாமையினால், நுகரத்தக்க உயிரியல் சொத்துக்கள் மற்றும் வருமானங்கள் மிகைப் பெறுமதியில் காட்டப்பட்டிருந்தன.

ஊ. நிதிக் கூற்றிற்கு அமைவாக தோட்டங்களுக்குச் சொந்தமான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் 06 வகைகளின் செலவுகள் ரூபா. 499,386,228 ஆக இருந்தாலும், தலைமை அலுவலகத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற ஏட்டில் அதன் பெறுமதிய ரூபா. 375,367,990 என காட்டப்பட்டிருந்ததால் அங்கு ரூபா. 124,018,238 பெறுமதியான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. கூட்டுத்தாபனத்தினால் நிலையான சொத்துக்களுக்கான பதிவேடு நிர்வகிக்கப்பட்வில்லை.

எ. கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணிகளின் மொத்தப் பரப்பு 147,559 ஹெக்டயராக இருப்பதுடன், வேறு நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட மற்றும் கூட்டுத்தாபனத்தின் நிர்வாகத்தின் கீழ் இருக்கின்ற காணிகளின் பரப்பு 141,900 ஹெக்டயர் மாத்திரமாகும். எனவே, ஏறத்தாழ 5,659 ஹெக்டயர் காணி சம்பந்தமாக எவ்விதமான சான்றுகளுமில்லை. ஆதலால், அந்தக் காணிகளின் இருப்பு தொடர்பாக கணக்காய்விற்கு உட்படுத்த முடியவில்லை.

ஏ. கூட்டுத்தாபனத்தின் நிதிப் பாய்ச்சல் கூற்றின் செலுத்த வேண்டிய கடன் வட்டியின் வித்தியாசமான ரூபா. 13,517,143 பெறுமதியான தொகை இரண்டு தடவைகள் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

ஐ. 2022 மற்றும் 2023 வருட இறுதிகளில் நடைமுறையல்லா பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா. 59,742,422 பெறுமதியான பணிக்கொடை கணக்குகளுக்கிடையிலான வித்தியாசமானது பணப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்பாட்டு மூலதன வித்தியாசத்தின் கீழ் சீராக்கம் செய்யப்பட்டிருந்தது.

ஒ. வியாபாரம் மற்றும் ஏனைய கிடைக்கத்தக்கனவற்றில் ரூபா. 23,230,823 பெறுமதியான நாற்றுக்களின் நிலுவை உள்ளடக்கப்பட்டிருந்தாலும் பௌதீக சரிபார்த்தலின் படி நாற்றுக்களின் பெறுமதி ரூபா. 5,951,139 ஆக காட்டப்பட்டிருந்ததால், நாற்றுக்களின் இருப்பு ரூபா. 7,279,684 இனால் மிகைப்படுத்தி கணக்கிடப்பட்டிருந்தது.

ஓ. தலைமை அலுவலகம், பிராந்திய அலுவலகம் மற்றும் தோட்டங்களுக்கிடையில் இடம்பெறுகின்ற கொடுக்கல் வாங்கல்களுக்காக நிர்வகிக்கப்படுகின்ற நடைமுறைக் கணக்குகளில் ஒன்றுக்கொன்று தீர்க்கப்படாதிருந்த ரூபா. 167,367,998 பெறுமதியான நிலுவை நடைமுறைச் சொத்துக்களாக கணக்கு வைக்கப்பட்டிருந்ததால் அப்பெறுமதியினால் நடைமுறைக் கணக்குகள் மிகைப்படுத்தி காட்டப்பட்டிருந்தது. மேலும், இந்நிலுவைகளில் ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா. 4,872,435,761 பெறுமதியான பற்று நிலுவைகளும் ரூபா. 1,906,242,471 கடன் நிலுவைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

ஔ. தோட்டங்களின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கூட்டப்பட்ட பெறுமதி ரூபா. 56,943,420 ஆக இருந்தாலும், அதில் ரூபா. 14,806,302 பெறுமதியான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்பான பற்றுச் சீட்டு மற்றும் ஏனைய ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. ஆதலால், அதன் உண்மைத்தன்மையையும் அவ்விடயத்துடன் தொடர்புடைய நிலுவைப் பெறுமதியையும் கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியவில்லை.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கேற்ப (இ.க.நி) எனது கணக்காய்வினை மேற்கொண்டேன். இந்தக் கணக்காய்வு நியமங்களின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களை, இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களைக் கணக்காய்வு செய்வது தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பகுதியில் மேலும் விபரித்துள்ளேன். எனது கருத்துரைக்கு ஒரு அடிப்படையை வழங்குவதற்காக என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதுமானவை என்பதும் காலோசிதமானவை என்பதும் என நம்பிக்கையாகும்.

**1.3 கூட்டுத்தாபனத்தின் 2023 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள வேறு தகவல்கள்**

இக்கணக்காய்வு அறிக்கையின் திகதிக்குப் பிறகு எனக்கு வழங்குமென எதிர்பார்க்கின்ற கூட்டுத்தாபனத்தின் 2023 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கியுள்ள என்றாலும் நிதிக் கூற்று மற்றும் அது தொடர்பாக எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்காத தகவல்களை ஏனைய தகவல்கள் என கருதப்படும். இந்த ஏனைய தகவல்கள் தொடர்பில் முகாமைத்துவம் பொறுப்புக்கூற வேண்டும்.

நிதிக்கூற்று பற்றிய எனது கருத்துக்கள் ஏனைய தகவல்களை உள்ளடக்காது என்பதுடன், நான் அது தொடர்பாக எந்த விதத்திலும் உறுதிகூறுவதில்லை என்பதுடன் எந்த விதமான கருத்துக்களையும் முன்வைக்கவும் மாட்டேன்.

நிதிக் கூற்று பற்றிய எனது கணக்காய்வுடன் தொடர்புடைய எனது பொறுப்பு யாதெனில், மேலே இனங்கண்ட ஏனைய விபரங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் போது அவற்றை வாசிப்பதும், அவ்வாறு வாசிக்கும் போது ஏனைய தகவல்கள் நிதிக்கூற்றுடன் அல்லது கணக்காய்வுடன் அல்லது வேறு விதத்தில் பெற்றுக்கொண்ட எனது அறிவுடன் அளவுரீதியாக பொருந்துவதில்லையா என்று கருத்திற்கொள்வதாகும்.

கூட்டுத்தாபனத்தின் 2023 வருடாந்த அறிக்கையை வாசிக்கும் போது அதில் அளவுரீதியான வழுக்கள் காட்டப்பட்டிருப்பதாக நான் ஊகித்தால், சரிப்படுத்த விடயங்களை உரிய தரப்பினருக்கு அறிவிப்பது அவசியம். அதன் பின்னரும், சரிப்படுத்தப்படாத வழுக்கள் காட்டப்பட்டிருப்பின் அவற்றை அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கு அமைவாக என்னால் உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கும் அறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்று தொடர்பாக முகாமை மற்றும் நிர்வாகத்தினைக் கொண்டு நடாத்தும் தரப்பினரின் பொறுப்புக்கள்.

இந்நிதிக்கூற்றினை இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கேற்ப தயாரிப்பதும் அதனை நியாயமான முறையில் முன்வைப்பதும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானிப்பதும் முகாமையின் பொறுப்புக்களாகும்.

நிதிக் கூற்றினைத் தயாரிக்கும் போது கூட்டுத்தாபனத்தைத் தொடர்ந்து நடாத்திச் செல்வதற்கான இயலுமையைத் தீர்மானிப்பது முகாமையின் ஒரு பொறுப்பாக இருப்பதுடன், முகாமை கூட்டுத்தாபனத்தைக் கலைப்பதற்கோ அல்லது வேறு மாற்று வழி ஏதும் இல்லாதபட்சத்தில் அதன்

தொழிற்பாடுகளை நிறுவத்துவதற்கோ தீர்மானித்தாலே அன்றி கூட்டுத்தாபனத்தின் தொடர்ச்சியான தொழிற்பாட்டினை கொண்டு நடாத்துவது என்ற அடிப்படையில் கணக்குகளை பேணுவதும் கூட்டுத்தாபனத்தின் தொடர்ச்சியான தொழிற்படுத்துவதுடன் தொடர்புடைய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமையின் பொறுப்பாகும்.

கூட்டுத்தாபனத்தை நிர்வகிக்கும் தரப்பினரே அதன் நிதி அறிக்கையிடல் செயற்பாடு சம்பந்தமான பொறுப்புக்களைக் கூற வேண்டும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணி வரல் வேண்டும்.

**1.5 நிதிக்கூற்றுக் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

மொத்தத்தில், முழு நிதிக்கூற்றிலும் மோசடி அல்லது தவறினாலான அளவு சார்ந்த பிறழ்கூற்றேதும் இல்லையென்ற நியாயமான உறுதிப்படுத்தலை பெற்றுக்கொள்வதும் எனது கருத்துரையை உள்ளடக்கி கணக்காய்வாளர் அறிக்கைகையை சமர்ப்பிப்பதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்படுத்தலானது உயர்மட்ட உறுதிப்படுத்தலாக இருந்தாலும் குறித்த கணக்காய்வினை இலங்கைக் கணக்காய்விடல் தரநியமங்களுக்கமைவாக கணக்காய்விடும் போது, அது எப்போதும் அளவுசார்ந்த பிறழ்கூற்றுக்களை வெளிப்படுத்தும் என உத்தரவாதப்படுத்தப்படாது. மோசடி அல்லது தவறிலிருந்தோ, தனி அல்லது கூட்டுச் செல்வாக்கினாலோ பிறழ்கூற்றுக்கள் ஏற்பட முடியுமென்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்துமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கைக் கணக்காய்விடல் நியமதரங்களுக்கேற்ற விதத்திலான கணக்காய்வின் ஒரு பகுதியென்ற வகையில் நான் கணக்காய்வு முழுவதிலும் தொழில்சார் நீதியை பிரயோகிப்பதுடன் தொழில்சார் ஐயுறவினை பேணுகின்றேன். மேலும்,

- மோசடி அல்லது தவறு போன்ற காரணங்களால் நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய அளவுசார்ந்த பிறழ்கூற்றின் ஆபத்துக்களை அடையாளப்படுத்தும் போதும் மதிப்பீடு செய்யும் போதும்

சூழ்நிலைக்கேற்ப கணக்காய்வு ஒழுங்குவிதிகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களைத் தவிர்த்துக்கொள்வதற்காக போதியளவிலான பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வது எனது கருத்துரைக்கு அடிப்படையாக இருக்கும். அளவு சார்ந்த பிறழ்கூற்றுக்களினால் இடம்பெறும் தாக்கத்தினை விட மோசடியின் விளைவினாலான தாக்கம் மிகவும் சக்தி வாய்ந்ததாக இருப்பதுடன், கருத்தொற்றுமை இன்மை, போலி ஆவணங்களைத் தயார்செய்தல், வேண்டுமென்றே புறக்கணித்தல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை மீறுதல் என்பன ஒரு மோசடி ஏற்படுவதற்கு காரணமாக அமையும்.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் வினைத்திறன் தொடர்பாக கருத்தினை முன்வைக்கும் கருத்திலல்லாது, காலோசிதமான, பொருத்தமான கணக்காய்வுச் செயன்முறைகளைத் திட்டமிடுவதற்காக கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக ஒரு விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது,

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்துவமும் முகாமையினால் வெளிப்படுத்தப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் காரணமாக கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தேர்ச்சியான தொழிற்பாடு தொடர்பாக அளவுசார் நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது பற்றி பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டுக்கு நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு சம்பந்தமான அடிப்படையைப் பயன்படுத்தும் பொருத்தப்பாடு தீர்மானிக்கப்பட்டது. அளவுசார் நிச்சயமற்றதன்மை இருப்பதாக நான் ஊகித்தால் நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டியுள்ளதுடன், அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதியளவில் இல்லாதிருப்பின் எனது கருத்தை மாற்ற வேண்டியிருக்கும். எவ்வாறிருப்பினும், எதிர்கால நிகழ்வுகள் மற்றும் நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ச்சியான இருப்பு முடிவுறலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கியுள்ள நிதிக்கூற்றுக்களின் முன்வைப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் எனபன மதிப்பிடப்பட்டதுடன், அவற்றுக்கு அடிப்படையாக இருந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் குறித்த நிதிக்கூற்றுக்களில் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன என்றும் மதிப்பிடப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுத் தேடல்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கூட்டுத்தாபனத்தை நிர்வகிக்கும் தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டன.

## 2. ஏனைய சட்ட மற்றும் கண்காணிப்புத் தேவைப்பாடு பற்றிய அறிக்கைகள்

2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைப்பாடுகள் குறித்து விஷேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) உறுப்புரையில் விதந்துரைத்துள்ள தேவைப்பாடுகளுக்கமைவாக, எனது அறிக்கையில் பாதகமான கருத்துரைக்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினாலான செல்வாக்கு தவிர்த்து, கணக்காய்வுக்குத் தேவைப்படுகின்ற தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கனை நான் பெற்றுக்கொண்டதோடு எனது பரீட்சித்தலில் தெளிவாகியது போன்று கூட்டுத்தாபனம் சரியானதொரு நிதி அறிக்கையைப் பேணி வரவில்லை.

2.1.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (இ) (III) உறுப்புரையில் விதந்துரைத்துள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக, கூட்டுத்தாபனத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்று முந்திய வருடத்துடன் இணங்குகின்றது.

2.1.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (Iv) உறுப்புரையில் விதந்துரைத்துள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக முன்னைய வருடத்தில் நான் பரிந்துரைத்த 1.2.1 (இ), (ஈ), (ஊ),(எ), (ஏ), (ஐ), 1.2.2, 1.2.3 (இ), (ஈ), 1.2.4, 1.2.5 (அ), (ஆ), 1.2.6 (ஆ), (இ), (ஈ) மற்றும் 1.2.7 (அ), (இ), (ஈ), (எ), (ஏ), (ஐ), (ஒ) ஆகிய பரிந்துரைகள் தவிர்த்து ஏனைய பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட செயன்முறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையிலும், அவ்வாறே, அளவுசார்ந்த விடயங்களுடன் வரையறுப்பதனால், கீழே குறிப்பிடும் கூற்றுக்களைக் கூறும் அளவிற்கு எந்தவொரு விடயமும் எனது அவதானத்திற்கு உட்படவில்லை

2.2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) உறுப்புரையில் குறிப்பிட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக கீழே குறிப்பிடுகின்ற அவதானிப்புக்கள் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் நிர்வாக சபையின் எவரேனுமொரு உறுப்பினருக்கு கூட்டுத்தாபனத்துடன் தொடர்புபட்டு ஏதேனுமொரு உடன்படிக்கை தொடர்பாக நேரடியாகவோ அல்லது வேறு விதத்தில்

சாதாரண வியாபார நிலைமைகளுக்குப் புறம்பான ஏதேனுமொரு தொடர்பு இருத்தல்.

2.2.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) உறுப்புரையில் குறிப்பிட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக கீழே குறிப்பிடுகின்ற அவதானிப்புக்கள் தவிர்த்து ஏதேனுமொரு எழுத்து மூலமான சட்டத்துக்கோ அல்லது கூட்டுத்தாபனத்தின் நிர்வாக சபையினால் வெளியிடப்பட்ட வேறு ஏதேனும் பொது அல்லது விஷேட ஒழுங்கு விதிமுறைகளுக்கு புறம்பாக செயற்பட்டிருத்தல்,

| | **சட்ட விதிமுறைகள்/ ஒழுங்கு முறைகளின் குறிப்பீடு** | **அவதானிப்பு** |
|---|---|---|
| அ | 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் 15 மற்றும் 16 ஆம் உறுப்புரைகள், மற்றும் 1980 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் ii பகுதியின் 16(i) ஆம் உறுப்புரை | 2000 முதல் 2023 வரை ரூபா. 689,241,182 பெறுமதியான ஊழியர் சேமலாப நிதியம், ரூபா. 49,732,429 பெறுமதியான ஊழியர் நம்பிக்கை நிதியம், ரூபா. 73,313,020 பெறுமதியான தோட்ட ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ரூபா. 18,160,269 பெறுமதியான லங்கா தோட்டக்காரர்களின் ஊழியர் சேமலாப நிதியம் என்பன மீளாய்வு நிறுவனத்தின் இறுதித்திகதி வரை செலுத்தப்படவில்லை. 2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு செலுத்த வேண்டிய தோட்டப் பிரிவின் மிகை விதிப்புக் கட்டணங்கள் முறையே ரூபா. 78,378,572 மற்றும் ரூபா. 9,295,631 ஆகும். |
| ஆ | 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்துதல் சட்டத்தின் 02 ஆம் பிரிவின் 5(1) உறுப்புரை | ஒரு ஊழியர் ஓய்வுபெற்ற அல்லது மரணித்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் பணிக்கொடையை செலுத்த வேண்டுமென்றிருந்தாலும், கடந்த வருடம் மற்றும் மீளாய்விற்குட்படுத்தப்படுகின்ற வருடம் உள்ளடங்கலாக 2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு செலுத்த வேண்டிய பணிக்கொடை பெறுமதி ரூபா. 629,252,704 ஆக |

| | | |
|---|---|---|
| | | இருந்ததுடன் அதற்கு மிகை விதிப்புக் கட்டணாக ரூபா. 25,843,582 இனை செலுத்த வேண்டியிருந்தது. மேலே குறிப்பிட்ட நிதியங்களுக்கு உரிய தொகை செலுத்தப்படாமையினால் அது தொடர்பான வழக்குகளுக்காக 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான சட்டத்தரணிகள் கட்டணமாக ரூபா. 1,933,000 வினை கூட்டுத்தாபனத்தினால் செலுத்த வேண்டியிருந்தது. |
| இ | 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உண்ணாட்டு அரசிறை (திருத்த)ச் சட்டத்தின் 90 மற்றும் 93 ஆம் உறுப்புரைகள் | கூட்டடுத்தாபனத்தினால் 2023 ஆம் ஆண்டின் சுய மதிப்பீட்டின் அடிப்படையில் உரிய வருமான வரி செலுத்தப்படவில்லை என்பதுடன், வரியை கணக்கிடவுமில்லை. 2022/ 2023 மதிப்பீட்டு வருடத்தின் வருமான வரி அறிக்கையும் உண்ணாட்டு இறைவரி திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. |
| ஈ | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/ 2021 ஆம் இலக்க பொது வர்த்தக முயற்சிகளுக்கான வழிகாட்டற் கோவையின் 3.2 ஆம் உறுப்புரை | 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முதநிலை பதவிகள் தவிர்த்து வேறு பதவி நிலைகளுக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறைகளுக்கான அங்கீகாரம் பெறப்படவில்லை. |
| உ | 2018 மார்ச் 19 ஆம் திகதிய 01 /2018 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் 2 (அ) பந்தி மற்றும் 2015 ஜுலை 10 ஆம் திகதிய 02 /2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 02 ஆம் பந்தி | கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 122 வாகனங்களுள் 75 வாகனங்கள் பாவனைக்குதவாத நிலையிலிருந்ததுடன், அவற்றுள் திருத்தி பாவனைக்கு எடுக்க முடியாத வாகனங்கள் 57 இருந்ததுடன், அவற்றை விற்றொழிப்பதற்கு எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், திருத்தி பாவனைக்கு எடுக்கத்தக்க வாகனங்களையும் திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுமில்லை. |
| ஊ | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 | கூட்டுத்தாபனத்தினால் 2023 ஆம் |

| | | |
|---|---|---|
| | ஆம் இலக்க நிறுவன நல்லாட்சி பற்றிய வழிகாட்டற்கோவையின் 2.3 ஆம் உறுப்புரை | ஆண்டுக்குரிய மூலோபயத் திட்டம் தயார்செய்யப்படவில்லை என்பதுடன், பயிர்ச்செய்கைத் துறைக்கு மாத்திரம் செயல்திட்டம் தயார்செய்யப்பட்டிருந்தது. |

2.2.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) உறுப்புரையில் குறிப்பிட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக கூட்டுத்தாபனத்தின் அதிகாரம், பணி மற்றும் செயற்பாடுகளுடன் இணங்காத விதத்தில் செயற்பட்டிருத்தல்.

2.2.4 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) உறுப்புரையில் குறிப்பிட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக கீழே குறிப்பிடுகின்ற அவதானிப்புக்கள் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் வளங்களை சிக்கனமாகவும், வினைத்திறனுடனும், விளைத்திறனுடனும், குறிப்பிட்ட காலத்தினுள் உரிய சட்ட விதிமுறைகளுக்கேற்ப கொள்வனவு செய்து பாவிக்கப்படவில்லை.

தற்போது கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாக 09 தொழிற்சாலைகள் இருந்தாலும், அவற்றுள் 03 தொழிற்சாலைகளில் மாத்திரமே உற்பத்தி நடவடிக்கைகள் இடம்பெறுவதுடன், 05 தொழிற்சாலைகள் தொடர்ந்து நீண்டகாலமாக மூடிவைக்கப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ஒரு தொழிற்சாலையை 2022 ஒக்டோபர் மாதத்திலிருந்து திருத்த வேலைகளுக்காக மூடிவைக்கப்பட்டள்ளது. மேலும், பாவனைக்கு எடுக்காத கோமரை தோட்டத்தின் நக்கிள்ஸ் பங்களா உல்லாசப் பயணிகள் தரிசிக்கும் பிரபலமான சில இடங்களுக்கு மத்தியில் காணப்பட்டாலும் அதனை திருத்துவதற்கு கூட்டுத்தாபனத்தினால் எத்தகைய நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

## 2.3 வேறு அவதானிப்புரைகள்

அ. கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 280 பிராந்திய தோட்டங்கள் 20 கம்பனிகளுக்கு 53 வருட நீண்ட குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், நிதிநிலைமைக் கூற்றுக்களில் அது ரூபா. 1,611,641 பெறுமதியான முதலீட்டு ஆதனங்களாகக் காட்டப்பட்டிருந்தாலும், அந்த முதலீட்டு ஆதனங்களிலிருந்து கிடைக்கும் வருடாந்த வருமானத்தை ஒரு உடன்படிக்கையின் பிரகாரம் திறைசேரிக்கு அனுப்புவதால் கூட்டுத்தாபனத்திற்கு வருமானம் இழந்திருந்தது.

ஆ மீளாய்விற்கு உட்படுத்தப்படுகின்ற வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு பிரதான அலுவலகத்தின் வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்தத்தக்க ரூபா. 442,622,983 பெறுமதியான நிலுவைத் தொகையில் 05 நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா. 228,561,009

பெறுமதியான கடன் மீதியிலிருந்து அதனை தீர்ப்பதற்கு இதுவரையில் எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இ. மீளாய்விற்கு உட்படுத்துகின்ற வருடத்தின் இறுதியிலிருந்த ரூபா. 309,421,777 பெறுமதியான வர்த்தகம் மற்றும் ஏனைய கிடைக்கத்தக்க மீதியில் 04 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவைத் தொகையாக ரூபா. 63,448,037 காட்டப்பட்டிருந்தது.

உ. 2023 இல் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தோட்டங்களின் தேயிலை விளைச்சலானது 2022 ஆம் ஆண்டின் விளைச்சலுடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 07 முதல் 41 வரை குறைந்திருந்ததுடன், 2023 இல் இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த தேயிலை விளைச்சல் 5,089,282 கிலோகிராமாக இருந்ததுடன் அது 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 24 சதவீத வீழ்ச்சியாகும். அத்துடன், 2023 ஆம் ஆண்டில் 9,170,548 கிலோகிராம் தேயிலை விளைச்சலைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென உத்தேசித்திருந்தாலும் வெறும் 55 சதவீதமான இலக்கினையே எய்தக்கூடியதாக இருந்தது. வெளித்தோட்டக்காரர்களுக்கு வழங்கியிருந்த காணிகளிலிருந்து 940,151 கிலோகிராம் தேயிலை விளைச்சல் எதிர்பார்க்கப்பட்டாலும் உண்மையில் கிடைத்த விளைச்சல் 364,597 கிலோகிராம் ஆகும். அது எதிர்பார்த்த விளைச்சலுடன் ஒப்பிடுகையில் 61 சதவீத வீழ்ச்சியாகும். கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 14 தோட்டங்களுள் 13 தோட்டங்களின் ஒரு கிலோகிராம் தேயிலைக்கான உற்பத்திச் செலவு 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 இல் நூற்றுக்கு 33 முதல் நூற்றுக்கு 444 வரை அதிகரித்திருந்தது.

ஊ. கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 16 தோட்டங்களுள் 08 தோட்டங்கள் மீளாய்வு வருடத்தில் நட்டமடையும் நிலையில் இருந்ததுடன், கோமரை மற்றும் கெலேபொக்கை தோட்டங்கள் 2022 இல் முறையே ரூபா. 8,974,150 மற்றும் ரூபா. 31,396,561 இலாபமீட்டினாலும் 2023 இல் முறையே ரூபா. 46,723,873 மற்றும் ரூபா. 16,805,293 நட்டமடைந்திருந்தது. கூட்டுத்தாபனத்தின் ஊழியர் செலவினமானது அதன் ஒட்டுமொத்த செலவினங்களுடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 50 சதவீதத்தினை விட உயர்வானதொரு பெறுமானத்தைக் காட்டியதுடன் ஹெயார்பார்க் தோட்டத்தின் ஊழியர் செலவினமானது அதன் மொத்த செலவினங்களின் நூற்றுக்கு 98 ஆக இருந்ததுடன் அதன் விற்பனை செலவினத்துடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 112 சதவீதமாக இருந்தது. ஹுன்னஸ்கிரிய, ரங்களை, பாகலை மற்றும் வுட்சய்ட் ஆகிய தோட்டங்களின் ஊழியர் செலவினமானது அந்தத் தோட்டங்களின் மொத்த செலவினங்களின் நூற்றுக்கு 80 சதவீதத்தினை விட கூடுதலாக இருந்தமை குறித்த தோட்டங்கள் நட்டமடைவதற்கு நேரடியாக தாக்கம் செலுத்தியுள்ளது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

எ. கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தோட்டங்களை அளக்கும் போது வர்த்தமானி மூலம் கிடைத்த 04 தோட்டங்களின் பரப்பை விட 790 ஹெக்டயர் குறைவாக இருந்ததுடன் ஒரு தோட்டத்தின் பரப்பு 3.19 ஹெக்டயர் கூடுதலாக இருந்ததாகவும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

டப்.பீ.சீ விக்ரமரத்ன
கணக்காய்வாளர் அதிபதி

**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுஇ சட்டம் மற்றும் கண்காணிப்புத் தேவைப்பாடுகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்பாக இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் விடைகள்**

(1) நிதிக்கூற்று

1.2 தொடர்ச்சியான நிலைத்திருப்பு

கணக்காய்வு அறிக்கையின் வரைபில் குறிப்பிட்டுள்ளவாறு 2023.12.31 ஆம் திகதிக்கு கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாட்டு மூலதனம் ரூபா. 1970.85 மில்லியன் மறைப் பெறுமதியைக் காட்டியதுடன், அத்திகதியில் செலுத்த வேண்டியிருந்த ஊழியர் நியதிச்சட்டக் கொடுப்பனவுகளின் பெறுமதி ரூபா. 1459.7 மில்லியனாக இருந்தது. கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமை இத்தகைய மறைப் பெறுமதியை காட்டுவதற்கு பல்வேறு காரணங்கள் ஏதுவாக இருந்து வந்துள்ளன. அவற்றுள் முக்கியமான சில காரணங்கள் கீழ்வருமாறுஇ

- எமது தோட்டங்களின் தேயிலைக் கொழுந்து விளைச்சல் திருப்திகரமான மட்டத்தில் இல்லாமை. ஏனெனில்இ கூட்டுத்தாபனம் முகங்கொடுத்த நிதி நெருக்கடிகள் காரணமாக உரிய காலத்தில் தோட்டங்களுக்கு உரம் மற்றும் களைகொல்லிகளை பிரயோகிக்க முடியாதிருந்தமையும், கடந்த வருடங்களில் நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலையும் தேயிலைக் கொழுந்து விளைச்சல் குறைந்தது.

- உற்பத்திச் செலவு அதிகரித்தமை.

  *2021* ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர்களின் சம்பளங்கள் *30* சதவீதத்தினை விட கூடுதலான வீதத்தில் அதிகரித்தமைஇ உரம் மற்றும் களைக்கொல்லிகளின் விலை கணிசமானளவு அதிகரித்தமை போன்ற காரணங்களால் எமது தேயிலை உற்பத்திச் செலவினமும் அதிகரித்துள்ளது.

  இவ்வாறு அதிகரித்த உற்பத்திச் செலவினங்களை ஈடுசெய்துகொள்ளும் விதத்தில் தேயிலைக் கொழுந்தின் விலையும் முடிவுத் தேயிலையின் விலையும் அதிகரிக்கவில்லை. மேலும், தேயிலைக் கொழுந்து விளைச்சலும் அதிகரிக்கவில்லை. மேற்கூறப்பட்ட காரணங்களால் கூட்டுத்தாபனத்தின் இலாபம் வீழ்ச்சியடைந்தது.

- வெட்டுமர விற்பனையால் கிடைக்கும் வருமானம் குறைவடைந்தமை

  2020 – 2021 காலத்தினுள் நிலவிய கொவிட் 19 தொற்று நோய்இ அதனைத் தொடர்ந்து நாடு முகங்கொடுத்த பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டின் நிர்மாணத் தொழிற்துறை வீழ்ச்சியடைந்ததால் வணிக வெட்டு மரங்களுக்கான கேள்வி கடந்த சில வருடங்களாக வீழ்ச்சியடைந்தது. இதுவும் எமது நிறுவனத்தின் இலாபம் வீழ்ச்சியடைவதற்கு வித்திட்டது.

- நாட்டில் கொவிட் 19 தொற்று நோய் தலைதூக்கியிருந்த 2020 இல் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்காக மக்கள் வங்கியிடமிருந்து ரூபா. 100 மில்லியன் கடன்

பெற்றுக்கொள்ளப்பட்டது. கூட்டுத்தாபனத்தின் நிதி நெருக்கடிகளால் குறித்த கடன் தொகையை முறையாக செலுத்த முடியாதிருந்ததுடன்இ 2023.12.31 ஆம் திகதிக்கு செலுத்துவதற்கு எஞ்சியிருந்த கடன் பெறுமதி ரூபா. 79.3 மில்லியனாக இருந்ததுடன்இ குறித்த திகதியில் வங்கி மேலதிகப் பற்றின் பெறுமதி ரூபா.135.39 மில்லியனாக இருந்தது.

- குறைந்த வட்டியை செலுத்துவதனூடாக கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்கும் நிதி ரீதியான அனுகூலங்களைக் கருத்திற்கொண்டு நாம் செலுத்த வேண்டிய மேற்கூறப்பட்ட கடன் தொகை மற்றும் வங்கி மேலதிகப்பற்று குறித்து மக்கள் வங்கியுடன் கலந்துரையாடி 5 வருடங்களுக்கு நீடித்த கடன் தொகையாக 2024 பெப்ரவரி மாதத்தில் மாற்றிக்கொள்ளப்பட்டதுடன்இ நீண்டகால கடன் தவணைப் பணம் உரிய முறையில் செலுத்தப்பட்டு வருகின்றது.

- இவ்வாறான நெருக்கடிகளுக்கு மத்தியிலும் கூட்டுத்தாபனம் அதன் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி வருவதுடன் நீண்ட காலத்திற்குப் பிறகு 2022 இல் ரூபா. 19.2 மில்லியன் இலாபத்தை உழைக்கக்கூடியதாக இருந்தது. உரிய காலத்தில் எமது தோட்டங்களுக்கு உரம் மற்றும் களைகொல்லிகளை பிரயோகிக்க முடியுமாக இருந்தால் திருப்திகரமான தேயிலைக் கொழுந்து விளைச்சலுடன் கூட்டுத்தாபனத்தை இலாபமீட்டும் நிறுவனமாக நடாத்திச்செல்லலாம் என்பது முகாமைத்துவத்தின் நம்பிக்கையாகும். மேலும்இ நிறுவனத்தின் இலாபத்தை உயர்த்துவதற்காக எமது தோட்டங்களிலுள்ள வளங்களிலிருந்து வருமானமீட்டும் செயற்றிட்டங்கள் யாவை என இனங்கண்டு அத்தகைய செயற்றிட்டங்களில் ஈடுபடுவதற்கான எதிர்பார்ப்பு நிறுவனத்திற்குள்ளது.

- கூட்டுத்தாபனம் முகங்கொடுக்கின்ற நிதி நெருக்கடிகளுக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான மடுவெலை எனும் தோட்டத்தின் ஒரு பகுதியை விற்பனை செய்து பணத்தைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்தாலும், ஜனாதிபதி செயலகத்தின் பணிப்புரைகளுக்கு அமைவாக அரச நிறுவனங்களின் காணிகளை விற்றொழிப்பது தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருப்பதால் எமது கூட்டுத்தாபனம் எதிர்பார்த்தது போன்று காணிகளை விற்று கிடைக்கும் பணத்தைப் பயன்படுத்தி ஒரு சில பொறுப்புக்களையாவது செலுத்தி முடிப்பதற்கான சந்தர்ப்பம் கிட்டவில்லை.

மேலும்இ ஒரு அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைவாக கூட்டுத்தாபனத்தின் நிலுவையாக இருக்கின்ற நியதிச்சட்டக் கொடுப்பனவுகளை செலுத்தி முடிப்பதற்காக 2023 செப்தம்பர் முதல் எமது கூட்டுத்தாபனத்திற்கு வருடாந்தம் ரூபா. 21.3 மில்லியன் கிடைப்பதுடன் அந்தப் பணத்தைப் பயன்படுத்தி ஊழியர் நியதிச்சட்டக் கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய வழக்குகளின் தவணைப் பணம்இ ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டியுள்ள மாதாந்த

- நிலுவைப் பணம் ஊழியர்களின் பணிக்கொடை என்பவற்றை செலுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறேஇ எமது கூட்டுத்தாபனத்தின் நிதிப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்காக நிரல் அமைச்சிலிருந்து நிதி ஒதுக்கீடுகள் கோரப்பட்டுள்ளதுடன் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் உள்ளடங்கலாக இன்னும் சில அரச நிறுவனங்களின் நியதிச்சட்டக் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கான நிதியைப் பெற்றுக்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

(1.3) **கருத்துரைக்கான அடிப்படை**

அ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 08 இன் 42 ஆம் மற்றும் 43 ஆம் உறுப்புரைகளின் பிரகாரம் முந்தைய வருடங்களில் இடம்பெற்றுள்ள தவறுகளை உகந்தவாறு சீராக்கம் செய்த பின்னர் அவற்றை சரிப்படுத்துவதுடன் தொடர்புடைய தகவல்களை மீளாய்வு வருடத்தின் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்க வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்கிறோம். நிதிக் கூற்றுக்களில் இவ்வாறு முந்திய வருட ஒப்பீட்டு ரீதியான தகவல்களை அனுப்புவது தொடர்பாக ஆராய்ந்த பிறகு 2024 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது உரிமை மாற்றல் கூற்றுக்களில் முன்வைக்கின்ற தவறுகளை சரிப்படுத்துவது தொடர்பான ஒப்பீட்டுத் தகவல்கள் முன்வைக்கப்படும்.

ஆ) கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டிலுள்ள தோட்டங்களின் நிதி ரீதியான பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாமைக்கான காரணம் யாதெனில்இ இந்தக் காணிகளின் உரிமையை வர்த்தமானி மூலம் எமக்கு சாட்டப்பட்டாலும் குறித்த காணிகளின் பரப்பினை அளவீடு செய்யாமலேயே வழங்கப்பட்டுள்ளது. என்றாலும்இ எமது வேண்டுகோளின் அடிப்படையில் தற்பொது பெருந்தோட்டத் தொழிற்துறை அமைச்சின் நிதி ஒதுக்கீடுகளின் கீழ் 6 தோட்டங்களின் கெடஸ்ட்ரல் அளவீடு செய்யப்பட்டுள்ளது.

எமது கட்டுப்பாட்டிலுள்ள காணிகளை மதிப்பிடுவதற்காக நாம் அரச மதிப்பீட்டுத் திணைக்ளத்திலிருந்து மதிப்பீட்டுச் செலவினம் தொடர்பான விபரங்களை கோரியுள்ளோம். அதற்கு துலங்கல் காண்பிக்கும் விதத்தில் அரச மதிப்பீட்டுத் திணைக்களம் அதன் பிரமாணங்களுக்கு அமைவாக மதிப்பீட்டுப் பெறுமதியை வழங்குவதற்கு தேவையான பணத்தை அறவிட்டுக்கொள்ளும் முறையைக் காண்பிக்கும் ஒரு சூத்திரத்தை எமக்கு அனுப்பியுள்ளது.

குறித்த சூத்திரத்திற்கு அமைவாக தற்போது அளவீடு செய்துள்ள தோட்டங்களின் மதிப்பீட்டுப் பெறுமதியை பெறுவதற்கான செலவினம் 15 கோடியாக இருக்கும். அத்தகைய பாரிய பணத்தை செலவு செய்யும் நிதியியல் இயலுமை எமது நிறுவனத்திற்கு இல்லை. எனவேஇ கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்படவில்லை.

என்றாலும்இ ஒரு காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி பெரும்பாலும் ஐந்து வருடங்களுக்க மட்டும் பயன்படுத்தப்படுவதனால் அரச மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு காலத்திற்குக்காலம்

பெற்றுக்கொண்ட மதிப்பீட்டு அறிக்கைகளை 05 வருடங்களுக்கு மாத்திரம் வழங்குவது செயல்முறை ரீதியானது என்பதை கவனத்திற்குக் கொண்டுவருகிறோம்.

அத்துடன்இ எமது கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஒரு காணியை வெளித்தரப்பினருக்கு விற்பனை செய்யும் போதோ அல்லது குத்தகைக்கு வழங்கும் போதோ வெளித்தரப்பினரின் செலவில் அத்தகைய மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக்கொள்வது நடைமுறையிலுள்ள ஒரு செயன்முறையாகும். மேலும்இ எமக்கு சொந்தமான பயன்படுத்தப்படாத ஏறக்குறைய 330 ஏக்கர் பரப்புக்கும் மேலதிகமான காணிகளை புதிய காணி மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் அரச தலையீட்டுடன் முதலீட்டாளர்களுக்கு குத்தகைக்கு வழங்கும் செயற்பாட்டின்போது அந்தத் தோட்டங்களின் பெறுமதிகளை பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

மேற்போர்ந்த பின்னணியில் எமது தோட்டங்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் தற்போதைய சந்தைப் பெறுமதியைக் கருத்திற்கொண்டு அந்தப் பெறுமதியை எங்கள் தோட்டங்களுக்கும் உகந்ததாக்கிக்கொண்டு அதனடிப்படையில் அண்ணளவான பெறுமதியைத் தீர்மானிப்பது பொருத்தமென நம்புவதோடு அத்தொகையை கூட்டுத்தாபனத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்க முடியுமென கருதுவதோடு அதற்கு கணக்காய்வாளர் அதிபதி காரியாலயத்தின் ஆலோசனைகளை எதிர்பார்க்கிறோம்.

மேலே குறிப்பிட்டவாறு அண்ணளவான மதிப்பீட்டுப் பெறுமதி போதியதாக இல்லையெனின்இ நீண்டகாலமாக இருந்து வருகின்ற இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்குத் தேவையான நிதியினை அமைச்சினூடாக பெற்றுக்கொள்ள கோரிக்கை விடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இ. இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 9 இன் 57 ஆம் உறுப்புரைக்கு அமைவாக நிறுவனத்தின் ஊழியர் நலன் பங்களிப்புக்களைக் கணக்கிடும் போது ஆயுள்கால முறைமை பிரயோகிக்க வேண்டுமென்றிருந்தாலும் அதற்கு காப்புறுதிக் கணிப்பவரின் சேவையைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. இலங்கையில் ஒரு சில நிறுவனங்கள் மாத்திரம் இச்சேவைகளை வழங்குவதால் அதற்கு அதிகளவு பணத்தை செலவு செய்ய வேண்டியுள்ளது. தற்போது இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் எதிர்கொள்கின்ற நிதி நெருக்கடிகளால் இதற்கு தேவையான நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. எனவேஇ எதிர்காலத்தில் இது தொடர்பாக கவனம் செலுத்தப்படும்.

ஈ) தோட்டங்கள் குறித்து தயாரிக்கப்பட்ட மரங்களின் எண்ணிக்கை தொடர்பான தரவு அறிக்கைகளில் காணப்பட்ட குறைபாடுகள் தற்போது சீர்செய்யப்பட்டுள்ளதுடன் அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் பரிந்துரைத்துள்ளவாறு மரக் கூட்டுத்தாபன சுற்றுநிருபத்திற்கு அமைவாக உயிரியல் சொத்துக்களை மதிப்பீடு செய்து 2024 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குடன் சீர்செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

உ) எமது பயிர் விளைச்சலில் 95 சதவீதத்திற்கும் மேற்பட்டது தேயிலைப் பயிர்ச்செய்கையாகும். 2021 ஆம் ஆண்டிலிருந்து தேயிலைப் பயிர்ச்செய்கையானது முதிர்ந்த தேயிலை மற்றும் முதிர்ச்சியடையாத தேயிலை என இரண்டாகப் பிரித்து இலங்கை கணக்கீட்டு நியமம் 41 க்கு அமைவாக நிதிக் கூற்றுக்களில் முன்வைக்கப்படுகின்றது.

தேயிலை தவிர்த்து ஏனைய பயிர்களையும் மேற்கூறப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக முதிர்ந்தது மற்றும் முதிர்ச்சியடையாதது என வெவ்வேறாக 2024 ஆம் ஆண்டிற்குரிய கணக்கீட்டுக் குறிப்புக்கள் இலக்கம் 8.1 இன் கீழ் முன்வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஊ) 2023 இல் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 4 மோட்டார் வாகனங்கள் ரூபா. 698இ500 க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக காட்டப்பட்டிருந்தாலும்இ அவ்வாறு விற்கப்பட்டிருப்பது எமது தோட்டங்களுக்குரிய பாவனைக்குதவாத விற்றொழிக்க வேண்டிய பழைய வாகனங்களாகும். இந்த வாகனங்கள் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட பொருட்களாக உரிய விலைமனுக் கோரல் முறையைப் பின்பற்றி விற்பனை செய்யப்பட்டுள்ளது. அந்த விற்பனை தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| திகதி | விலைமனு இல | விபரம் | தொகை (ரூ) |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 2023.03.20 | ளுடுளீஊ.⁚.ஏநாஉைடந.⁚.வு-18.⁚.2023 | பாவனையிலிருந்து அகற்றப்பட்ட மோட்டார் சைக்கிள் | 28,000 |
| 2023.03.20 | ளுடுளீஊ.⁚.ஏநாஉைடந.⁚.வு-16.⁚.2023 | பாவனையிலிருந்து அகற்றப்பட்ட மோட்டார் லொறி | 113,000 |
| 2023.03.23 | ளுடுளீஊ.⁚.ஏநாஉைடந.⁚.வு-17.⁚.2023 | பாவனையிலிருந்து அகற்றப்பட்ட மோட்டார் லொறி | 367,500 |
| 2023.04.11 | ளுடுளீஊ.⁚.ஏநாஉைடந.⁚.வு-28.⁚.2023 | பாவனையிலிருந்து அகற்றப்பட்ட மோட்டார் வாகனம் | 190,000 |
| | மொத்தப் பெறுமதி | | 698,500 |

மேலே குறிப்பிட்ட பாவனையிலிருந்து அகற்றப்பட்ட மோட்டார் வாகனங்களை விற்று கிடைத்த பணமானது பாவனையிலிருந்து அகற்றப்பட்ட பொருட்களின் விற்பனை வருமானத்தில் கீழ் கணக்கு வைக்கப்பட்டுள்ளதுடன்இ அது வாகன விற்பனை வருமானம் என காட்டப்படவில்லை. எனவேஇ இவ்வாறு கிடைத்த பணம் பணப் பாய்ச்சற் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்படவில்லை. அத்துடன்இ இவ்வாறு பாவனையிலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களின் செலவானது மோட்டார் வாகன செலவுகளிலிருந்து கழிக்கப்படாமைக்கும் திரட்டிய தேய்மானக் கணக்கிலிருந்து கழித்து காட்டாமைக்குமான காரணம் யாதெனில் எமது கூட்டுத்தாபனத்தில் இற்றைப்படுத்தப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு இல்லாமையினால் நிலையான சொத்துக்களை இனங்காண முடியாதுள்ளது. இந்த வாகனங்கள் விற்றொழிக்க வேண்டி நிலையில் இருந்ததால் மோட்டார் வாகன விற்பனையிலிருந்து கிடைத்த இலாபம்⁄. நட்டம் கணக்கிடப்படவில்லை. என்றாலும்இ தற்போது நிரல் அமைச்சின் உதவியுடன் நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை தயார்செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் எதிர்காலத்தில் இப்பிரச்சினை தீர்க்கப்படும்.

எ) இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இன் 17 ஆம் உறுப்புரைக்கு அமைவாக மீளாய்வு வருடத்தில் மீண்டும் செலுத்தப்பட்ட ரூபா. 20.69 மில்லியன் கடன் தவணை மற்றும் ரூபா. 35.48 மில்லியன் வங்கி மேலதிகப்பற்று என்பன பணப் பாய்ச்சற் கூற்றில் நிதி நடவடிக்கைகளின் காட்டப்பட வேண்டுமென நாம் ஏற்றுக்கொள்கிறோம். 2024 ஆம் ஆண்டு நிதி நிலைமைக் கூற்றினைத் தயாரிக்கும் போது மீண்டும் செலுத்தப்பட்ட கடன் தவணைப் பணத்தை பணப் பாய்ச்சற் கூற்றின் நிதி நடவடிக்கைகளின் கீழ் முன்வைக்கப்படுமென அறியத்தருகிறோம்.

ஏ) எமது கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாக நுகரத்தக்க உயிரியல் சொத்துக்களை (வணிக வனப் பயிர்ச்செய்கை) விலைமதிப்பீடு செய்யும் நடவடிக்கை பூர்த்தியான பிறகு வெட்டி அகற்றப்பட்டுள்ள மரங்களின் செலவினத்தை இனங்கண்டு அந்தப் பெறுமதியானது அதன் மூலம் நுகரத்தக்க சொத்துக்களின் மீதி கூடுதலாக கணக்கிடுவது தவிர்க்கப்படும்.

ஐ மீளாய்வுக்குட்படுத்தும் வருடத்தில் வெட்டுமர விற்பனையினால் கூட்டுத்தாபனம் ரூபா. 80.05 மில்லியன் வருமானம் உழைத்தது. என்றாலும்இ குறித்த வெட்டுமர விற்பனை வருமானத்துடன் தொடர்புடைய மரங்களின் செலவினத்தை இனங்கண்டு அதனை நுகரத்தக்க உயிரியல் சொத்துக்களின் நிலுவையிலிருந்து

கழித்து நிதிக்கூற்றுக்களில் முன்வைக்க தவறியுள்ளது. ஏனெனில்இ எமது தோட்டங்களுக்கு சொந்தமான மரங்களை விலைமதிப்பீடு செய்யும் பணி இதுவரையில் பூர்த்திசெய்யப்படாமையினால் விற்பனை செய்யப்பட்ட மரங்களின் செலவுகளை இனங்காண முடியாதுள்ளது. என்றாலும்இ தற்போது விலைமதிப்பிடும் செயற்பாடு நடைபெற்றுக்கொண்டிருப்பதால் 2024 ஆம் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்கை தயாரிக்கும் போது குறித்த செயற்பாடு பூர்த்தியாகியிருந்தால் விற்பனை செய்யப்பட்ட மரங்களின் செலவினத்தை நுகரத்தக்க உயிரியல் சொத்துக்களின் நிலுவையிலிருந்து கழித்துக் காட்டக்கூடியதாக இருக்கும் என்பதோடு அதன் மூலம் நுகரத்தக்க சொத்துக்களில் நிலுவையை மிகைப்படுத்திக் காட்டுவதை தவிர்ந்துகொள்ள முடியும்.

ஒ. மீளாய்விற்குட்படுத்தும் வருடத்தில் உபகரணங்கள் மற்றும் கணினிகளின் பெறுமானத் தேய்வினை கணக்கிடும் போது முறையே ரூபா. 21இ756.00 மற்றும் ரூபா. 163இ929.00 பெறுமதியான நிலுவையை குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருப்பதால் மீளாய்விற்குட்படுத்தும் வருடத்தில் இலாபமானது ரூபா.185,685.00 இனால் மிகைப்படுத்தி காட்டப்பட்டுள்ளது என்பதுடன் இணங்குகிறோம்.

இங்கு தலைமைக் காரியாலயத்திற்குரிய கணிணி மற்றும் உதிரிப் பாகங்களின் பெறுமானத் தேய்வினைக் கணக்கிடுகையில் சில கணிணிகள் மற்றும் உதிரிப்பாகங்களுக்குரிய 2023 இன் மொத்த பெறுமானத் தேய்வுப் பெறுமதியும்இ இன்னும் சில கணிணி மற்றும் உதிரிப் பாகங்களின் பயனுள்ள ஆயுட்காலத்தின் இறுதி மாதங்களுக்குரிய பெறுமானத் தேய்வுப் பெறுமதியும் கணக்கிடப்பட்டுள்ளது. எனவே, பெறுமானத் தேய்வினை கணக்கிடும் போது விட்ட தவறினால் ரூபா. 163இ929.00 பெறுமதியான பெறுமானத் தேய்வு குறைத்துக் கணக்கிடப்பட்டுள்ளது.

அவ்வாறேஇ தலைமைக் காரியாலயத்திற்குரிய உபகரணங்களின் பெறுமானத் தேய்வினைக் கணக்கிடும் போதும் சில உபகரணங்களின் 2023 ஆம் ஆண்டுக்குரிய மொத்த பெறுமானத் தேய்வினையும் தவறவிடப்பட்டிருப்பதால் ரூபா. 21,756.00 குறைவாக பெறுமான தேய்விடப்பட்டுள்ளது.

அதற்கேற்பஇ 2024 ஆம் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளைத தயாரிக்கும் போது உரிய பெறுமதிகளை சீராக்கம் செய்து குறித்த நிலையலான சொத்துக்களுக்குரிய திரண்டதேய்மானத்தை சரியாக கணிக்கிடுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும்இ இவ்வாறான வழுக்கள் மீண்டும் இடம்பெறாதிருப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஓ. தோட்டங்களால் நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்யும் சில சந்தர்ப்பங்களில் தலைமைக் காரியாலயத்திற்கு குறித்த திகதியை தாமதித்து அறிவித்தால் அல்லது அவ்வாறு அறிவிக்காதிருந்தால் குறித்த சொத்துக்களை கொள்வனவு செய்து முழு மாதத்திற்கும் தேய்மானமிடப்படும். எனவேஇ இவ்வாறான தேய்மானமே மிகைப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது. என்றாலும்இ 2024 ஆம் ஆண்டில் நிலையான சொத்துக்களுக்கான தேய்மானத்தை கணக்கிடும் சந்தர்ப்பத்தில் வருடத்தில் புதிதாக கொள்வனவு செய்த நிலையான சொத்துக்களின் கொள்வனவு திகதியை கருத்திற்கொண்டு தேய்மானத்தை கணக்கிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

ஔ. அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானங்களின் அடிப்படையில் தோட்டத்திற்குச் சொந்தமான 280 தோட்டங்கள் 1992.06.22 முதல் 53

வருடங்களுக்காக 20 பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறு குத்தகைக்குக் கொடுக்கும் போது ஒவ்வொரு தோட்டத்திற்கும் வெவ்வேறான குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திட்டுள்ளதுடன் குத்தகை வழங்குநராக இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் செயற்பட்டுள்ளது.

என்றாலும்இ இவ்வாறு தோட்டங்களை தனியார் மயப்படுத்தும் போது 99 வருட காலத்திற்கு உடன்படிக்கை கைச்சாத்திட்டுள்ளதுடன்இ குறித்த காலத்திற்காக ஒரு தோட்டத்திற்குக் கிடைக்கும் குத்தகைப் பணம் ரூபா. 500 என குறிப்பிடப்பட்டிருந்தது. குறித்த குத்தகைப் பணத்தை குறித்த பெருந்தோட்டக் கம்பனிகளால் இலங்கை அரச பெருந்தோட்டக் கம்பனிக்கு செலுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

என்றாலும்இ பின்னர் குறித்த உடன்படிக்கைக் காலத்தை 53 வருடங்கள் வரை குறைத்து வேறு குத்தகை உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன்இ அதில் குறிப்பிட்டுள்ள மிகவும் முக்கியமானதொரு நிபந்தனைக்கேற்ப பெருந்தோட்டக் கம்பனிகள் வேறு சூத்திரமொன்றைப் பயன்படுத்தி குத்தகைப் பணத்தை செலுத்த வேண்டியிருப்பதுடன்இ அதனை பெருந்தோட்டத் தொழிற்சாலை அமைச்சினூடாக திறைசேரிக்கு வழங்க வேண்டும்.

எனவேஇ குறித்த பணம் எமது கணக்கில் வரவு வைக்கப்படாமைக்கான காரணத்தின் அடிப்டையில் அதனை பெறத்தக்கது என குறிப்பிடுவது பிழையான பதிவாகும். என்றாலும்இ கூட்டுத்தாபனத்திற்குரிய ஒரு ஆதனத்தின் வருமானத்தை கூட்டுத்தாபனத்தின் கணக்கில் பதிவு செய்யாமலிருப்பது பிரச்சனைக்குரிய விடயமாகும். இது தொடர்பாக பெருந்தோட்ட அமைச்சின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதோடு மீண்டும் அமைச்சின் அவதானத்தை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஃ. கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தாங்கி உயிரியல் சொத்துக்களின் வணிக ரீதியான விளைச்சலைப் பெற்றுக்கொள்ளவிருக்கும் தருணத்திலேயே அவற்றை முதிர்ச்சியடையாத பயிர்ச்செய்கையிலிருந்து முதிர்ச்சியடைந்த பயிர்ச்செய்கைக்கு மாற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. அது பற்றி இதுவரையில் நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டுக் கொள்கைகளின் கீழ் வெளிப்படுத்தப்படவில்லை. ஆதலால்இ 2024 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கை தயாரிக்கும் போது இது தொடர்பாக கணக்கீட்டுக் கொள்கைகளின் அடிப்படையில் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும்இ 2021 இலிருந்து தோட்டங்கள் புதிய பயிர்ச்செய்கைகளுக்காக உறப்பட்டசெலவுகளை தோட்டங்களில் ஐந்தொகைகளில் காட்டுமாறு அறிவிக்கப்பட்டிருந்ததால்இ 2022இ 2023 வருடங்களுக்குரிய குறித்த புதிய பயிர்ச்செய்கைக்காக உறப்பட்ட செலவினங்கள் ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ளது. அவற்றுள்இ 2023 இல் முதிர்ச்சியடைந்த பயிர்ச்செய்கைக்காக குறித்த இரண்டு வருடங்களில் உறப்பட்ட செலவினங்களை மாத்திரம் 2023 இல் மாற்றியுள்ளது. (ரூபா. 1இ177இ648.00))

மேலும்இ 2024 ஆம் ஆண்டிற்குரிய கணக்கினைத் தயாரிக்கும் போது முதிர்ச்சியடைந்த பயிர்ச்செய்கைக்கு மாற்றுகின்ற பயிர்ச்செய்கைகளுடன் தொடர்புடைய அனைத்து பெறுமதிகளையும் முதிர்ச்சியடையாத கணக்கிலிருந்து முதிர்ச்சியடைந்த கணக்கிற்கு

(தோட்டங்களிலிருந்து இது தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொண்ட பிறகு) சரியாக மாற்றப்படும்.

க். கணக்காய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு 2023.12.31 ஆம் திகதியளவில் தோட்டங்களின் ஆதனம்இ பொறி மற்றும் உபகரணங்களின் 6 வகைகளுக்குரிய செலவினம் மற்றும் தலைமை அலுவலகத்தில் நிர்வகிக்கப்படுகின்ற பதிவேடுகளுக்கிடையில் ரூபா. 124.018 மில்லியன் வித்தியாசம் காணப்படுகின்றது. நீண்ட காலமாக கூட்டுத்தாபனத்தில் நிலையாக சொத்துப் பதிவேடு இல்லாமையே இதற்கான காரணமாகும். நிரல் அமைச்சின் ஒத்துழைப்புடன் முழுமையானதொரு நிலையான சொத்துப் பதிவேட்டினை தயார்செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன்இ அதன் ஆரம்பக்கட்டமாக கெலேபொக்கைத் தோட்டத்தின் நிலையான சொத்துக்களின் மீள்மதிப்பீட்டுப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் கீழ் கெலேபொக்கைத் தோட்டத்தின் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களை மதிப்பீடு செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர்களாலேயே மதிப்பீடு செய்யப்படுகின்றது. தமது அன்றாட நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக இப்பணியில் ஈடுபட வேண்டியிருப்பதால் கணிசமான காலமெடுக்கும். என்றாலும்இ 2024 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கை தயாரிக்கும் போது ஓரளவாவது இந்த வித்தியாசத்தை குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனஅறிவித்துக்கொள்கிறேன்.

ங். 2023.12.31 ஆம் திகதிக்குரிய நிதிக்கூற்றுக்களுக்கு அமைவாக தோட்டங்களின் வங்கிக் கணக்குகளிலுள்ள காசு மீதிக்கும் தோட்டங்களின் கணக்குகளில் காட்டப்படுகின்ற காசு மீதிக்கும் இடையில் ரூபா.0.225 மில்லியன் வித்தியாசம் இருப்பதாக கணக்காய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன்இ கையிலுள்ள காசு மீதி ரூபா. 0.401 மில்லியனாக இருப்பதுடன் தோட்டங்களின் கணக்குகளுக்கு அமைவாக அது ரூபா. 0.104 ஆகும். எனவேஇ இரு கணக்குகளுக்குமிடையில் ரூபா. 0.297 மில்லியன் வித்தியாசமுள்ளது. இது தொடர்பாக ஆராய்ந்தபோது மூன்று காரணங்கள் இனங்காணப்பட்டுள்ளன.

1. மிட்லன்ட் மற்றும் ரங்களை தோட்டங்கள் 2023.12.31 ஆம் திகதி தயார்செய்த இறுதி ஐந்தொகையில் வங்கியிலுள்ள காசு மீதிக்கு கையிலுள்ள காசு மீதியாகவும் கையிலுள்ள காசு மீதிக்கு வங்கியிலுள்ள காசு மீதியாகவும் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

2. 2022 ஆம் ஆண்டில் குடாஓயா மற்றும் ஓபல்களை ஆகிய இரு தோட்டங்களும் ஒரு தோட்டமாக இயங்கியதுடன்இ அவ்வாறு இயங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டதுடன்இ அப்போது குடாஓயா தோட்டத்தின் வங்கிக் கணக்கிலிருந்து காசு மீதி ரூபா. 65இ819.08 பணம் 2013.12.31 ஆம் திகதி ஓபல்கலை தோட்டத்திற்கு மாற்றப்பட்டது. அதுவும் இந்த வித்தியாசத்திற்கு காரணமாக இருந்தது. விபரம் இணைக்கப்பட்டுள்ளது.

3. இற்றைக்கு 25 வருடங்களுக்கு முன்பு கொட்டகங்கை தோட்டத்தின் தோட்டக் குடியிருப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு கிடைத்த உதவித்தொகையானது குறித்த வேலைத்திட்டத்திற்கு பயன்படுத்திய பிறகு ரூபா. 4859.98 அந்தத் தோட்டத்தின் வங்கிக் கணக்கிலுள்ள காசு மீதியாக காட்டப்பட்டது. இதுவும் வங்கி மீதியென தோட்டத்திலிருந்து அறியக்கிடைத்தது.

மேலே குறிப்பிட்ட ரூபா. 65இ819.08 மற்றும் ரூபா. 4859.98 கூட்டுத்தாபனத்தின் இறுதிக் கணக்கில் வங்கியிலுள்ள நிதியாக சேர்க்கப்பட்டுள்ளது.

ச. கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டிலுள்ள 16 தோட்டங்களுள் 2 தோட்டங்கள் தவிர்த்து ஏனைய 14 தோட்டங்களும் கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் அமைந்துள்ளன. இந்தத் தோட்டங்கள் வர்த்தமானி மூலம் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாகியுள்ளதுடன்இ அவ்வாறு உரிமையை வழங்கும் போது அத்தோட்டங்கள் அளவீட செய்யப்படவில்லை. வர்த்தமானயில் குறிப்பிட்டுள்ள காணிகளின் அளவின் அடிப்படையில் இதுவரையில் செயற்பட்டுள்ளது.

என்றாலும்இ இவ்வாறு அளவீடு செய்யப்படாமையினால் அண்மைக்காலங்களில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகளுக்கான தீர்வாக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சிற்கு கிடைத்த நிதி ஒதுக்கீட்டினைப் பயன்படுத்தி அரச நிலஅளவை அதிகார சபையினால் இந்தத் தோட்டங்களின் நில அளவீட்டுப் படங்கள் தயாரிக்கப்படுகின்றன.

அத்தகைய நில அளவீட்டுப் படங்களுடன் ஒப்பிடுகையில் பெரும்பாலான தோட்டங்களின் அளவீடுகள் வர்த்தமானியில் குறிப்பிட்ட அளவீடுளை விட குறைத்தே காட்டுகின்றன. இது தொடர்பாக தோட்ட அதிகாரிகளிடம் விசாரித்தபோது நக்கிள்ஸ் வனஒதுக்கு வலயத்திற்கு தோட்டங்களிலிருந்து காணிகளை ஒதுக்கி எல்லைக் கணுக்கள் நடப்பட்டிருந்தாலும் அவ்வாறு எல்லைக் கணுக்கள் நடும்போது காணியின் பரப்புக்கள் அளவிடப்படவில்லை.

2007 ஆம் ஆண்டில் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் 1507/9 ஆம் இலக்க 2007.07.23 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் எமது தோட்டங்களுக்குச் சொந்தமான பல காணிகளை நக்கிள்ஸ் வன ஒதுக்கீட்டு வலயமாக ஒதுக்கியுள்ளது. எனினும்இ இங்கு காணிகள் அளவீடு செய்யப்படாமையினால் ஒவ்வொரு தோட்டத்திலிருந்து கையகப்படுத்திக்கொண்ட காணிகளின் அளவு பற்றி எண்ணியல் ரீதியான தெளிவில்லை.

மேலும்இ அரச நிலஅளவை அதிகார சபை உத்தியோகத்தர்கள் நில அளவைச் செயற்பாட்டின் போது அனுமதியின்றி வன ஒதுக்கீட்டு வலயத்திலுள்ள காணிகளை அளவிடாதென்பதால் இந்த அளவீட்டின் மூலமாகவும் எதிர்பார்க்கப்படுகின்ற பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள முடியாதிருக்கும். எனவேஇ வன ஒதுக்கீட்டு வலயத்தின் எல்லைகளாக அமைந்துள்ள எமது கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணிகளை அளக்கும் போது வன ஒதுக்கீட்டு வலயத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணிகளையும் அளப்பதற்கு அனுமதி தருமாறு 2024.06.12 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் வனப் பாதுகாப்புத் திணைக்களத்திடம் கோரியுள்ளது.

அவ்வாறேஇ இந்த வன ஒதுக்கீட்டு வலயத்திற்கென ஒதுக்கியுள்ள காணிகளின் அளவை உறுதியாக இனங்கண்டு அவ்வாறு இழந்துள்ள காணிகளுக்கான இழப்பீடுகளை அரச விலைமதிப்பீட்டுப் பெறுமதியில் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

ஹுன்னஸ்கிரிய தோட்டத்தில் மாத்திரம் 3.19 ஹெக்டயர் அதிகரித்திருப்பதற்கான காரணம் மேலே கூறப்பட்டவாறு அளவீடு செய்யாது வர்த்தமானி அறிவித்தல் பிரசுரித்திருப்பதாகும்.

ஞ் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தோட்டங்கள் பற்றிய தகவல்களடங்கிய ஒரு பதிவேடு இதுவரையில் கிடைக்கவில்லை. அரசாங்கத்திக்குச் சொந்தமான தோட்டங்களை நிர்வகிப்பதற்கான ஒரு நிறுவனம் இல்லாதிருந்ததால் 1958 ஆம் ஆண்டில் ஒரு பாராளுமன்றச் சட்டத்தினூாக ஆரம்பிக்கப்பட்ட போது

இக்கூட்டுத்தாபனத்திற்கு ஆரம்பத்திலேயே சில காணிகள் உரித்தாக்கப்பட்டாலும்இ குறித்த காணிகள் பற்றிய விபரங்களை மூல ஏடுகளிலிருந்து பெற்றுக்கொள்ள முடியாத நிலை இருந்தாலும் குறித்த காணிகள் பௌதீக ரீதியில் எமது உரித்தில் அல்லது தோட்டங்களில் இருக்கின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சான்றுகளுள்ளன.

என்றாலும்இ எமது கூட்டுத்தானத்திற்குச் சொந்தமாகவிருக்கும் தோட்டங்களுள் அதிகமானவை காணி மறுசீரமைப்பச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்கு கையகப்படுத்திக்கொண்டு பின்னர் வர்த்தமானி அறிவித்தலினூடாக எமக்கு பொறுப்பளித்த காணிகளாகும்.

மேலே விபரிக்கப்பட்டவாறு கிடைத்த சில தோட்டங்களை அரசாங்கத்தின் தேவைப்பாடுகளுக்காக குறித்த காணிகளை முழுமையாக அல்லது காணி ஒரு பகுதியை மாத்திரம் எமக்கு உரித்தாக்கிக்கொண்டுள்ளதுடன்இ குறித்த காரணங்களின் அடிப்படையில் பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் ஒரு சில காணிகள் பௌதீக ரீதியாக கூட்டுத்தாபனத்தின் அல்லது பெருந்தோட்டக் கம்பனிகளின் பொறுப்பில் இல்லை. உதாரணம் – பல்லேகலைஇ திஸ்பனைஇ பர்த்.

இத்துடன் இணைத்துள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு வர்த்தமானி அறிவித்தல்இ வேறு நிறுவனங்களிலிருந்து மற்றும் கொள்வனவு செய்த தோட்டங்களின் மொத்தப் பரப்பு 147இ559.12 ஹெக்டயாராகும். அது கணக்காய்வு உசாவலில் 1இ49இ374 என காட்டப்பட்டுள்ளது. அவ்வாறு காட்டப்பட்டுள்ளமைக்கான காரணம் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையினால் எங்களுக்கு வழங்கப்பட்டதாக குறிப்பிடும் 6 தோட்டங்களுள் 4 தோட்டங்களின் மொத்தமானது ஒட்டுமொத்தக் கூட்டுத்தொகையுடன் இரண்டு தடவைகள் சேர்க்கப்பட்டுள்ளமையும் எங்களுக்கு வழங்கப்படவில்லை என வெளிப்படுத்தப்பட்ட இம்புல்தெனிய மற்றும் பய்ன்ஹில் தோட்டங்களில் கூட்டுத்தொகையும் இறுதி கூட்டுத்தொகையுடன் சேர்க்கப்பட்டுள்ளமையாகும் என கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கேற்பஇ கிடைத்த மூல ஏடுகளான வர்த்தமானி அறிவித்தல்இ வருடாந்த அறிக்கை மற்றும் கொள்வனவு செய்த காணிகளின் உறுதி என்பவற்றின் அடிப்படையில் தோட்டங்களின் மொத்த நிலப்பரப்பு 147இ559.12 ஹெக்டயராகும். குறித்த ஆவணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ட். இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் கொள்வனவு செய்த தோட்டங்களுள் 2019 வருடத்தில் 6 தோட்டங்களின் உறுதிகள் மாத்திரமே எம்மிடம் இருந்ததுடன்இ பல்வேறு மூல ஏடுகளில் தேடிப்பார்த்து 18 தோட்டங்களின் உறுதிகளைப் பெற்றுக்கொள்ள முடிந்தது.

கொள்வனவு செய்ததாக குறிப்பிடுகின்ற ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள சில தோட்டங்களைப் பற்றி தேடிப்பார்த்த போது ஒரு சில உண்மைகள் வெளிப்பட்டுள்ளன. உதாரணமாகஇ இரத்தினபுரி மாவட்டத்திலமைந்துள்ள பலாங்கொடை பெருந்தோட்டக் கமபனியால் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற நன்பேரியல் தோட்டத்திற்குச் சொந்தமான உறுதியைத் தேடும் போது குறித்த தோட்டமானது காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு பணம் கொடுத்து கூட்டுத்தாபனத்தினால் கொள்வனவு செய்யப்பட்டதாகும்.

அந்த வகையில்இ காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிலிருந்து கொள்வனவு செய்யும் போது உறுதி வழங்கப்படாது என்பதுடன்இ உறுதிகளற்ற ஏனைய காணிகளையும் அந்த முறையில் தான் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என ஆராயப்படுகின்றது.

ண் 2023 ஆம் ஆண்டின் நிதி நிலைமைக் கூற்றுக்கு அமைவாக குத்தகை வருமானம் ரூபா. 18இ189இ536 ஆக இருந்ததுடன்இ காணிப் பிரிவினால் கணக்காய்விற்காக வழங்கப்பட்டுள்ள பதிவேடுகளுகேற்ப அது ரூபா. 20இ921இ819 ஆக குறிப்பிடப்பட்டிருப்பதால் ரூபா. 2இ732இ283 வித்தியாசம் அவதானிக்கப்பட்டுள்ளது. என்றாலும்இ குறித்த வித்தியாசத்தைப் பற்றிய தேடலின் போது பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்பட்டன.

- யுஆீ ஊறநலடழடெ ீஎவ) டுவன - இந்த நிறுவனத்திலிருந்து 2023.01.18 ஆம் திகதிக்கு பின்னர் கிடைத்த மாதாந்த குத்தகை வாடகை வருமானம் ரூபா. 160இ000 ஆக இருந்ததுடன்இ அதற்கு முன்னர் இருந்த மாதாந்த குத்தகை வருமானம் ரூபா. 112இ500 ஆகும். என்றாலும்இ காணிப் பிரிவிலிருந்து வழங்கியுள்ள பதிவேடுகளுக்கு அமைவாக அது ரூபா. 152இ109.59 ஆகும். எனவேஇ நிதிக்கூற்றுக்களில் குறிப்பிட்டுள்ள பெறுமதி பிழையானது.

- ஆகரபதன பெருந்தோட்டக் கம்பனி – இந்தக் கம்பனியிலிருந்து கிடைத்த குத்தகை வருமானம் காணிப் பிரிவிலிருந்து வழங்கப்பட்டுள்ள ஏடுகளில் உள்ளடக்கப்படவில்லை.

- யுஅயணழடெ வுசயனபைெ ீஎவ) டுவன – இந்நிறுவனத்துடன் ஏற்படுத்திக்கொண்ட குத்தகை வாடகை உடன்படிக்கைக்கு அமைவாக அவர்களிடமிருந்து கிடைத்த இறுதி குத்தகை வாடகை ரூபா. 693இ437.50 ஆகும். இது காணிப் பிரிவிலிருந்து வழங்கிய கணக்கேடுகளில் குறிப்பிடப்படவில்லை.

- யுளயை டீசழயனஉயளவபைெ ஊழசிழசயவழைெ ீஎவ) டுவன – இந்நிறுவனத்திலிருந்து கிடைக்கின்ற குத்தகை வாடகை வருமானம் ரூபா. 1இ620இ000 ஆக இருந்தாலும்இ காணிப் பிரிவிலிருந்து கிடைத்த ஏடுகளின் படி அது ரூபா. 2இ664இ000 என தவறுதலாக குறிப்பிடப்பட்டிருந்தது.

- ீநழிடநள ஆநனயை நேவறழசம ீஎவ) டுவன – இந்நிறுவனத்திலிருந்து கிடைக்கின்ற குத்தகை வாடைகை வருமானம் ரூபா. 1இ080இ000 ஆக இருந்தாலும்இ காணிப் பிரிவிலிருந்து கிடைத்த ஏடுகளில் அத்தொகை ரூபா 1இ274இ400 என பிழையாக குறிப்பிடப்பட்டுள்ளது.

- செல்வராஜ் சிவகுமார் மற்றும் ளூரஅமைழ டுயமெய ா்ழவநட – இந்நிறுவனங்களிலிருந்து கிடைத்த குத்தகை வாடகை வருமானம் நிதிக் கூற்றுக்களில் சரியாக குறிப்பிடப்பட்டிருந்தாலும் காணிப் பிரிவினால் வழங்கியுள்ள ஏடுகளில் குத்தகை வருமானம் தவறாகவே உள்ளது.

- நேற ஞுயஅயடெ புசழரி – இந்நிறுவனத்திலிருந்து கிடைக்க வேண்டிய குத்தகை வாடகை வருமானம் சம்பந்தமாக ஒரு விலை விபரப் பட்டியலை வழங்குவதற்கான தகவல்கள் காணிப் பிரிவிலிருந்து நிதிப் பிரிவிற்கு கிடைக்கவில்லை.

மேலும்இ தோட்டங்களிலிருந்து கடைகளை வாடகைக்கு அமர்த்துதல் மற்றும் கட்டிடங்களை குத்தகைக்கு வழங்குதல் கிடைத்த குத்தகை வாடகை

வருமானங்களை உரியவாறு கணக்கு வைக்கப்பட்டிருந்தாலும் குறித்த பெறுமதிகள் காணிப் பிரிவிலிருந்து வழங்கப்பட்ட ஏடுகளில் குறிப்பிடப்படவில்லை.

த். 2024 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றில் இவ்வாறான வழுக்களைத் தவிர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ந். 2023.12.31 ஆம் திகதி நடாத்தப்பட்ட பௌதீக இருப்பு மதிப்பீட்டின் படி தோட்டங்களில் இருந்த நாற்று மேடைகளின் பெறுமதி ரூபா. 15இ951இ139.00 ஆகும். குறித்த திகதிக்கான கணக்குகளின் படி நாற்று மேடைகளின் பெறுமதி ரூபா. 23இ230இ823 ஆகும். அவ்வாறேஇ 2022 ஆம் ஆண்டியின் இறுதியில் நடாத்தப்பட்ட கணக்கெடுப்பில் நாற்று மேடைகளின் பெறுமதியானது கணக்குகளின் பெறுமதியை விட ரூபா. 10இ524இ054 குறைவாக இருந்தது.

அவ்வாறு கணிசமானதொரு பெறுமதியில் பௌதீக ரீதியாக நாற்றுக்கள் இல்லாதிருந்தமைக்கான காரணங்கள் தற்போது தேடப்பட்டு வருவதுடன் குறித்த காரணங்களை உறுதிப்படுத்திய பிறகு பௌதீக ரீதியாக காணப்படாத ஏடுகளிலிருந்து அதனை நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும்இ 2024 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கைத் தயாரிக்கும் போது நாற்று மேடைகளின் பெறுமதியை இருப்பு உருப்படியின் கீழ் நிதிக் கூற்றுக்களில் முன்வைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

ப். எமது கூட்டுத்தாபனத்தில் நிலுவையாக இருக்கின்ற நியதிச்சட்டக் கொடுப்பனவுகளை செலுத்தி முடிப்பதற்காக அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் 2023 செப்தம்பர் மாத்திலிருந்து மாதாந்தம் ரூபா. 21.3 மில்லியன் வழங்கத் துவங்கியதுடன்இ 2023.12.31 ஆகும் போது அவ்வாறான 03 தவணைகளில் ரூபா. 63.9 மில்லியன் கிடைத்தது. அந்தப் பணத்தைப் பயன்படுத்தி நாம் வாராந்தம் நியதிச்சட்டக் கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய வழக்குத் தவணைகளுக்கான பணம் செலுத்தப்படுவதுடன் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மாதாந்தக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதுடன் பணிக்கொடைகளும் செலுத்தப்படுகின்றன. 2023 நவம்பர் மாதத்திற்காக 2023.2.08 ஆம் திகதி கிடைத்த பணத்திலிருந்து 2023.12.31 ஆம் திகதிக்கு செலுத்தப்படாதிருந்த ரூபா. 14இ500இ094.00 பெறுமதியான 2024 ஜனவரி மாதத்திற்குரிய வழக்குத் தவணைகள் மற்றும் பணிக்கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளன. ஏதாவதொரு மாதத்திற்கு திறைசேரியிலிருந்து பணம் கிடைத்த பின்னர் குறித்த பணம் ஒரு மாத காலத்தில் செலுத்தப்படுவதுடன் ஏதாவதொரு மாதத்தின் இறுதியில் குறித்த மாதத்திற்கு கிடைத்த பணம் முழுமையாக செலுத்தி முடியாதிருக்கலாம் என்பதோடு அடுத்து வரும் மாத்தில் எஞ்சியுள்ள பணத்திலிருந்து நியதிச்சட்டக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.

ம். கணக்காய்வு உசாவலில் குறிப்பிடுள்ள இந்த நிலுவையானது (ரூபா. 167.161) சில நடைமுறைக் கணக்குகளின் கூட்டுத்தொகையாகும். பெரும்பாலும் இவை ஒன்றுடன் ஒன்று ஈடுசெய்யப்படுகின்ற நடைமுறைக் கணக்குகளாகும். இந்த கணக்கு மீதிகள் 2012இ 2019 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளிலிருந்து இருந்து வருவதாகும். 2023 ஆம் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்கினைத் தயாரிக்கும் போது 2021 இலிருந்து இருந்து வருகின்ற ஒரு மீதியை சீராக்கல் செய்து சரிப்படுத்தப்பட்டிருப்பதுடன் அடுத்து வரும் வருடங்களில் ஏனைய மீதிகளை சரிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ய். 2020 இல் மக்கள் வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட ரூபா. 100 மில்லியன் பணத்திலிருந்து 2023.12.31 ஆம் திகதியளவில் செலுத்துவதற்கு எஞ்சியிருந்த ரூபா. 79.31 மில்லியன்இ அத்திகதியில் வங்கி மேலதிகப் பற்றாக இருந்த ரூபா. 135.39 மில்லியன் மற்றும் அவற்றுக்கு செலுத்த வேண்டியிருந்த வட்டி ஆகிய நிலுவைகள் தொடர்பில் வங்கியுடன் கதைத்து அவற்றை ஐந்தாண்டு வருட நீண்டகால கடனாக மாற்றப்பட்டது. 2024 பெப்ரவரி மாதத்தில் இவ்வாறு மாற்றப்பட்டதுடன் அவ்வாறு மாற்றுவதற்கான காரணம் யாதெனில் அதன் மூலம் கூட்டுத்தாபனம் செலுத்த வேண்டிய வட்டித் தொகை குறைவடைவதாகும். தற்போது இக்கடன்களுக்கான தவணைப் பணம் உரிய முறையில் செலுத்தப்படுகின்றது.

ர். நீண்டகாலமாக கூட்டுத்தாபனம் முகங்கொடுக்கின்ற நிதி நெருக்கடி காரணமாக இது வரையில் செலுத்த முடியாதிருந்த நீண்டகாலமாக இருந்து வருகின்ற நிலுவைகள் தொடர்பில் கீழே குறிப்பிடப்படுகின்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- **சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி (ரூபா. 41.21 மில்லியன்)** – சிலாபம் பெருந்தோட்டக் கம்பனிக்கு செலுத்த வேண்டியிருந்த பணத்தை (வட்டி உள்ளடங்கலாக) எமது கூட்டுத்தாபனத்தின் நிதி நெருக்கடிகள் காரணமாக தள்ளுபடி செய்யுமாறு 2024.05.16 ஆம் திகதிய கடிதம் அனுப்பப்பட்டது.

- **லங்கா கனிய மணல் கம்பனி (ரூபா. 25 மில்லியன்)** – இந்தக் கம்பனிக்கு கூட்டுத்தாபனத்தினால் செலுத்த வேண்டிய பணம் தொடர்பாக கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தில் தாக்கலிட்டுள்ள வழக்கை இணக்கத்துடன் முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்குமாறு 2024.05.16 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

- **இலங்கை உரக் கம்பனி (ரூபா. 35.9.3 மில்லியன்)** – எமது கூட்டுத்தாபனத்தினால் இந்தக் கம்பனிக்கு 2023.12.31 ஆம் திகதி செலுத்த வேண்டியிருந்த பணத்தை எமது கூட்டுத்தாபனத்தின் நிதி நெருக்கடி காரணமாக செலுத்துவது சிரமமாக இருப்பதனால் அதனை ஈடுசெய்வதற்காக எமது கூட்டுத்தாபனத்திலுள்ள ஒரு நிலையான சொத்தை கையேற்பதற்கு குறித்த நிறுவனம் இணக்கம் தெரிவிக்கின்றதா என்றும் அவ்வாறில்லையெனின்இ குறித்த கடன் தொகையை தள்ளுபடி செய்யுமாறும் 2024.06.10 திகதிய கடிதத்தின் மூலம் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதுஇ

- **அரச வள முகாமைத்துவக் கூட்டுத்தாபனம் (ரூபா. 28.71 மில்லியன்)** – இந்நிறுவனத்திற்கு 2023.12.31 ஆம் திகதியிலுள்ளவாறு செலுத்த வேண்டிய பணம் தொடர்பாக நிதி அமைச்சிற்கு 2024.06.10 ஆம் திகதி ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. எமது கூட்டுத்தாபபனத்தின் நிதி நெருக்கடிகளைக் கருத்திற்கொண்டு குறித்த நிறுவனம் நிதி அமைச்சின் கீழ் இருக்கும் ஒரு நிறுவனம் என்பதால் அரச வள முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய மேற்குறிப்பிட்ட கடன் தொகையை தள்ளுபடி செய்யுமாறு ஒரு கடிதத்தின் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

- **மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை (ரூபா. 97.71 மில்லியன்)** – கூட்டுத்தாபனத்தினால் 2023.12.31 ஆம் திகதியிலுள்ளவாறு மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா. 54இ969இ666.00 தொகையை (எமது கூட்டுத்தாபனத்தினால் செலுத்த வேண்டிய ரூபா. 97இ709இ342.00 மற்றும் எமக்கு கிடைக்க வேண்டிய ரூபா. 42இ739இ676.00 தொகையை ஈடுசெய்த

பின்னர்) எமது நிறுவனத்தின் நிதி நெருக்கடிகள் காரணமாக தள்ளுபடி செய்யுமாறு 2024.05.22 ஆம் திகதிய கடிதத்தினூடாக கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்ட கடிதங்களுள் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினால் மாத்திரம் தற்போது பதில் கிடைத்துள்ளதுடன்இ அச்சபையின் கணக்காய்வுக் குழுவினால் குறித்த கடன்தொகையை தள்ளுபடி செய்ய முடியாதென எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுஇ

ல். 2022 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் நீண்டகாலமாக இருந்து வருகின்ற அறவிட முடியாத கடன்பட்டோர் மீதிகளுக்கான ஐயக்கடன் ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டாலும் ஒரு சில கடன்களை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. குறித்த கடன்பட்டோர் மீதிகளை அறவிட்டுக்கொள்வது தொடர்பாக குறித்த நிறுவனங்களுக்கு எழுத்து மூலமும் வாய்மொழி மூலமும் அறிவித்தல்கள் அனுப்பப்பட்டுள்ளன.

வ். வருடத்திற்குரிய மொத்த வட்டித் தொகை ரூபா. 8இ050இ274.48 ஆக இருந்ததுடன் அது கீழுள்ள நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| டீயசவடநநவ ீசழனரஉந ஆயசமநவபைெ | 1,320,929.85 |
| குழசடிள ரூ றுயடமநச டீசழமநச | 3,281,315.80 |
| டுஊடீடு | 3,288,863.53 |
| ஆநசஉயவெடைந டீசழமநசள | 159,165.30 |
| வுழவயட | **8,050,274.48** |

கூட்டுத்தாபனத்தின் நிதி நெருக்கடிகளின் போது தொழிலாளர்களின் வேதனத்தை வழங்கவும்இ தலைமை அலுவலகம்இ பிராந்திய அலுவலகம் மற்றும் தோட்டங்களின் காரியாலயங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கு குறித்த திகதியிலேயே வேதனங்களை வழங்குவதற்காகவே இந்து முற்பணம் பெற்றுக்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு மாதமும் இடம்பெறுகின்ற பணிப்பாளர் சபை கூட்டங்களுக்கு அதற்கு முந்திய காலங்களில் எடுக்கப்பட்ட முற்பணம் பற்றி தகவல்கள் முன்வைக்கப்படும். ஏனைய காலங்களை விட இந்த வருடத்தில் அதிகளவு முற்பணம் பெற்றுக்கொண்டமைக்கான காரணம் யாதெனில்இ இவ்வருடத்தில் ஏனைய நிதி மூலங்களிலிருந்த கூட்டுத்தாபனத்திற்கு வந்த பணம் பற்றாக்குறையாக இருந்தமையாகும்.

தங்களது கணக்காய்வறிக்கையில் காட்டுப்பட்டுள்ளவாறு பெற்றுக்கொண்ட முற்பணங்களுக்கான வட்டித் தொகை அட்டவணையில் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், வருடத்திற்குரிய மொத்த வட்டியினுள் அதற்கு மேலதிகமாக ஓநடிவை ழேவநள வுநய ஊடயஐஅள .ீநயெடவல ஊாயசபநள என்பவற்றுக்காக அறவிட்ட முழு வட்டியும் உள்ளடங்கியிருப்பதாக அறிவித்துக்கொள்கிறேன்.

ழ். 2024 இல் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான வாகனங்களைப் பற்றி மீளாய்வு செய்வதற்கு நான்கு தோட்ட அதிகாரிகளுடன் கூடிய ஒரு கணிப்பாய்வு சபை நியமிக்கப்பட்டது. அங்கு 122 வாகனங்கள் அடையாளப்படுத்தப்பட்டு ஒரு

அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த அறிக்கைக்கு அமைவாக ஓடும் நிலையில் இல்லாத 75 வாகனங்களுள் திருத்தியும் பயன்படுத்த முடியாத நிலையில் 25 வாகனங்கள் இருப்பதாக இனங்காணப்பட்டது. மோட்டார் வாகப் போக்குவரத்துத் திணைக்களத்தினால் குறித்த வாகனங்களின் செஸிஸ் இலக்கங்கள் வெட்டி முடிக்கப்பட்டுள்ளதுடன், அவ்வாறு செஸிஸ் இலக்கங்கள் வெட்டப்பட்ட 25 வாகனங்களில் 12 வாகனங்களின் பதிவும் இரத்துச்செய்யப்பட்டுள்ளது.

ஓடும் நிலையில் இல்லாத 75 வாகனங்களுள் செஸிஸ் இலக்கம் வெட்டாத மற்றும் பதிவிலிருந்து இரத்துச்செய்யப்படாத 50 வாகனங்களில் 18 வாகனங்களை நிறுவனத்தின் நிதி நிலைமைகளுக்கு அமைவாக படிப்படியாக திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும்இ குறித்த 75 வாகனங்களுள் செஸிஸ் இலக்கம் வெட்டப்படாத பதிவு இரத்துச் செய்யப்படாதஇ திருத்திப் பாவனைக்குப் பெற முடியாத 32 வாகனங்களின் செஸிஸ் இலக்கங்களை வெட்டி வாகனப் பதிவினை இரத்துச்செய்து பாவனையிலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ள். தோட்டங்களுக்கு நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வது சம்பந்தமான தகவல்கள் பிரதான மற்றும் தோட்ட அலுவலகங்களில் இருப்பதுடன்இ தோட்ட அலுவலகங்களின் தகவல்கள் மற்றும் தரவுகளை கணக்காய்விற்கு முன்வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது குறிப்பிட்ட சில தோட்டங்களின் தரவுகள் கிடைத்துள்ளன. அவை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. பிரதான அலுவலகத்திலிருந்த கோமரைத் தோட்டத்திற்கு கொள்வனவு செய்த வுநய ஊழடழரச ளுநியசயவழச ஆயஉாநைெ இயந்திரத்துடன் தொடர்புடைய தகவல்கள் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஏனைய நிலையான சொத்துக்களுடன் தொடர்புடைய தகவல்களை தோட்டங்களிலிருந்து பெற்று அவற்றை கணக்காய்விற்காக சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

ற். உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து காணிகள் ஆணையாரினூடாக பெருந் தோட்ட அமைச்சு மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையினால் எமக்கு வழங்கப்பட்ட 1977 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள அனைத்து தோட்டங்களும் 1992 இலிருந்து பெருந்தோட்டக் கம்பனிகள் முகாமைத்துவத்தின் கீழ் இருக்கின்றன.

உள்நாட்டு இறைவரி ஆணையாளர்இ காணிகள் ஆணையாளர் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு ஆகிய நிறுவனங்களிலிருந்து வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள தோட்டங்கள் அரச வர்த்தமானி அறிவித்தலினூடாக வழங்கப்பட்டிருப்பதாக நாம் நம்புகிறோம். எனவேஇ 1960 முதல் 1975 வரையான ஆண்டுகளில் வெளியிட்டுள்ள அரச வர்த்தமானி அறிவித்தல்களை தேசிய சுவடிகள் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினால் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டதாக 1977 ஆம் ஆண்டின் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள 6 தோட்டங்களுள் 4 தோட்டங்கள் தோட்டக் கம்பனிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. அதில் குறிப்பிட்டுள்ள பெரடய்ஸ் தோட்டமும் ஒரு தோட்டமாக எமது

கட்டுப்பாட்டில் இல்லை. அது இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள பாம் கார்டின் தோட்டத்தின் ஒரு பகுதியாக குத்தகை உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ள பெரடய்ஸ் தோட்டமா என வேறுபடுத்தி இனங்காண முடியாதுள்ளது.

மேலும்இ பய்ன்ஹில் எனும் பெயரில் குறிப்பிட்டுள்ள தோட்டமும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் குத்தகை உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டு வழங்கியுள்ள எந்தவொரு பெருந்தோட்டக் கம்பனியினதும் நிர்வாகத்தின் கீழ் இல்லை. அது பற்றி ஆராய்ந்த போதுஇ அது மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் கீழ் இருப்பதாக அறிந்துகொள்ளக் கிடைத்தது. எனவேஇ 1977 ஆம் ஆண்டு வருடாந்தறிக்கையில் குறிப்பிட்டுள்ள மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினால் வழங்கப்பட்டுள்ளதாக கூறும் விடயத்தை கருத்திற்கொள்ளாதிருக்க முடியும்.

**2.2.2(அ) மற்றும் (ஆ)**

நிறுவனத்தின் நீண்ட கால நிதி நெருக்கடி காரணமாகஇ ஊழியர் சேமலாப நிதியம் (நீ்கு)இ ஊழியர் நம்பிக்கை நிதியம் (நுவுகு)இ தோட்ட ஊழியர் சேமலாப நிதியம் (நுளீஎ) மற்றும் லங்கா தோட்டக்காரர்களின் ஊழியர் சேமலாப நிதியம் (ஊீஎ) போன்ற நிதியங்களுக்கான கட்டாயப் பகிர்ந்தளிப்புக்கள் மற்றும் பணிக்கொடைக் கொடுப்பனவுகள் உரிய முறையில் செலுத்தப்படவில்லை. எனவேஇ குறித்த கொடுப்பனவுகள் தொடர்பாக பாரியளவிலான மிகை விதிப்புக் கட்டணங்களை செலுத்த வேண்டிய கட்டாயத்தில் கூட்டுத்தாபனம் உள்ளது. இது தொடர்பாக எமது நிரல் அமைச்சிற்கு தொடர்ந்தேர்ச்சியான தெளிவுபடுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதோடு இந்நியதிச்சட்டக் கொடுப்பனவுகளை செலுத்துவதற்காக திறைசேரியிலிருந்து நிதி கோரப்பட்டுள்ளது. அதன் விளைவாகஇ குறித்த நியதிச்சட்டக் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக தற்போது அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. திறைசேரியிலிருந்து நிதி கிடைத்ததும் அவற்றை செலுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**இ.** (ை) ∴ (ை)

கூட்டுத்தாபனம் எதிர்காலங்களில் வரி வருமான அறிக்கைகளை உரிய முறையில் இறைவரித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. முந்திய சில வருடங்களுக்கான குத்தகை வரி அறிக்கைகள் இறைவரித் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட வேண்டியுள்ளதால்இ அதற்காக பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அல்லது வரி ஆலோசகர் ஒருவரின் உதவியைப் பெற்றுக்கொள்ளவுள்ளதுடன்இ தற்போது அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. எதிர்காலத்தில் இது தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஈ. இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான அனைத்து வாகனங்கள் தொடர்பாக 2020 ஆம் ஆண்டு முழுமையான பௌதீக கணிப்பாய்வினை நடாத்தி வாகனங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. அத்துடன்இ எமது கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான வாகனங்களைப் பட்டியல்படுத்துவதற்கு 04 பேர் அடங்கிய ஒரு கணிப்பாய்வுச் சபை நியமிக்கப்பட்டுள்ளது. குறித்த சபை 122 வாகனங்களை பட்டியல்படுத்தியுள்ளது. எனவேஇ தற்போது வாகனங்களின் விபரங்களடங்கிய ஒரு பட்டியல் தற்போது நிர்வகிக்கப்படுகின்றது.

எனினும்இ உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் எமது கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான அனைத்து வாகனங்களையும் கணக்காய்விற்கு உட்படுத்தி ஒரு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு பணிப்பாளர் சபை ளுடுளுஊ.ீ.2024.ீ.டீ.ீ.யுனஅiெ.ீ.01.ீ.ஆயச-49.ீ.01 ஆம் இலக்க பணிப்பாளர் சபைப் பத்திரத்தின் கீழ் தீர்மானமெடுக்கப்பட்டுள்ளது. குறித்த தீர்மானத்திற்கு அமைவாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(ை) குறிப்பான ஏதேனுமொரு பணி நிமித்தம் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே அதிகபட்சம் ரூபா. 100இ000.00 என்ற வரையறையில் முற்பணம் வழங்கலாமென கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட பின்னர் பதவி நிலையல்லாத ஏனைய உத்தியோகத்தர்களுக்கு அத்தகைய முற்பணம் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது. எனவேஇ தற்போது நாம் 2015 ஜுலை 14 ஆம் திகதிய 03.ீ.2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 371(2) ஆம் திருத்த விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு செயற்படுகிறோம் என்பதை தயவுடன் அறியத்தருகிறேன்.

உ. கல்பிஹில்ல அரச பெருந்தோட்டத்தின் தோட்ட அதிகாரியாக சேவையாற்றிய தோட்ட அதிகாரி திரு. மங்கல தயாரத்ன அவர்களின் சேவை இடைநிறுத்தப்பட்டதன் காரணமாகஇ அச்சந்தர்ப்பத்தில் தோட்ட அதிகாரியாக நியமிப்பதற்குப் பொருத்தமான ஒருவர் இல்லாதிருந்தமையினால் பிரதி நிறைவேற்று அதிகாரி (தோட்டம்) அத்தோட்டத்தின் கடமைகளை தழுவல் செய்வதற்கு 2023.0.25 ஆம் திகதி நியமிக்கப்பட்டார்.

தற்போது கடமைத் தழுவலுக்காக 2023.06.26 ஆம் திகதிய பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பேரில் 25ூ கொடுப்பனவொன்று வழங்கப்படுகின்றது. தோட்டங்களை மேற்பார்வையிடுவதற்கு எரிபொருள் கொடுப்பனவும் தோட்டங்களுக்கு சம்பளம் வழங்குவதற்காக பணத்தை எடுத்துச் செல்வதற்கு கொமிஸ் பணமும் தோட்டத்திற்குரித்தான வருடாந்த மதிப்பீட்டுச் செலவினங்களுக்கு அமைவாக வழங்கப்பட்டுள்ளது.

(ை) 2024.06.10 ஆம் திகதி முதல் கல்பிஹில்ல அரச தோட்டத்திற்கான பதில் தோட்ட அதிகாரியாக திரு. எஸ்.டப்.சீ.எஸ் அலதெனிய அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஊ. கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டம் நிரல் அமைச்சினூடாக 2021 மார்ச் மாதம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன்இ பிறகு இது தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுடன் பல தடவைகள் கலந்துரையாடி தேவையான திருத்தங்களை செய்து 2022 ஜனவரி மற்றும் 2023 மே மாதங்களில் மீண்டும் நிரல் அமைச்சினூடாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த பதவிகளை வகுதி வகுதியாக அங்கீகரித்து கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்படுமென குறிப்பிட்டுள்ளதுடன்இ தற்போது ஆரம்பநிலைப் பதவிக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது.

எ. நிர்வாக உதவியாளர்இ வேலை மேற்பார்வையாளர் – பிரதான அலுவலகம்இ உதவி கணக்காளர் மற்றும் அலுவலக உதவியாளர் – பிரதேச அலுவலகம் ஆகிய 04 பதவிகளும் 2017 ஆம் ஆண்டிற்கு முன்பு வழங்கப்பட்ட பதவிகளாகும். என்றாலும்இ 2017 ஆம் ஆண்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெறும்போது தவறுதலாக இப்பதவிகளுக்கான அங்கீகாரம் கோரப்படவில்லை. எனவேஇ இப்பதவிகளுக்கான அங்கீகாரத்தினை

வெவ்வேறாகப் பெற்றுக்கொள்வதற்காக 2022.10.18 மற்றும் 2023.03.15 ஆம் திகதிகளில் சம்பள ஆணைக்குழுவின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. இதுவரையில்இ சம்பள ஆணைக்குழு அல்லது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திலிருந்து பதில் கிடைக்கப்பெறவில்லை. இதனால்இ ஆீஐ∴யுனஅடை∴09∴ளுடுளீஊ∴ஊஊ ஆம் இலக்க மற்றும் 2023.11.22 ஆம் திகதிய கடிதத்தினூடாக மீண்டும் ஞாபகமூட்டல் கடிதம் அனுப்பட்டுள்ளது. அத்துடன், நிர்வாக உதவியாளராக கடமையாற்றிய திருமதி எல் கமராலலாகே 2024.05.24 ஆம் திகதி ஓய்வு பெற்றுள்ளார்.

ஏ. வணிகத் திட்டம்

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் தலையீட்டுடன் கடந்த வருடத்தில் 2024 – 2028 வருடங்களுக்கான வணிகத்திட்டம் தயார்செய்யப்பட்டதுடன்இ அதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரமும் கிடைத்தது. நிரல் அமைச்சுஇ பெருந்தோட்ட அமைச்சு என்ற நிலையிலிருந்து அரச பெருந்தோட்ட முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சு என்ற நிலைக்கு மாற்றமடைந்த பின்னர் நிறுவனத்தின் கட்டமைப்புக்களை மறுசீரமைக்கும் முறைமைகளுக்கேற்ப கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான பயிரிடுதல் மற்றும் வேறு கருத்திட்டங்களுக்கு விடுவிக்க முடியுமான காணிகள் பற்றிய விபரங்கள் வணிகத்திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. ஆதலால்இ 2024.03.19 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் செயற்குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட பரிந்துரைகளுக்கு அமைவாக மீண்டும் வணிகத்திட்டத்தை தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. எனவேஇ தற்போது குறித்த பரிந்துரைகளையும் உள்வாங்கி நிரல் அமைச்சின் திட்டமிடல் பிரிவின் பிரதானிகளின் ஒத்துழைப்புடன் குறித்த திட்டம் தயாரிக்கப்படுகின்றது. அந்த வகையில்இ அடுத்த மாதம் இரண்டாவது வாரம் முடிவடையதற்கு முன்பு புதிய வணிகத்திட்டத்தை (2024-2028) தயார்செய்து நிரல் அமைச்சிற்கு வழங்கப்படும்.

2.2.4

அ. தற்போது பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு 09 தேயிலைத் தொழிற்சாலைகள் சொந்தமாக இருப்பதுடன்இ அவற்றுள் 03 தொழிற்சாலைகளில் உற்பத்தி நடவடிக்கை இடம்பெறுகின்றது. மிகவும் பழைய இயந்திராதிகளுடன் நீண்டகாலமாக செயற்படாத நிலையில் 05 தொழிற்சாலைகள் உள்ளன. இந்த 05 தொழிற்சாலைகளால் நவீன சந்தைக்கு பொருத்தமான தரமான தேயிலையை உற்பத்தி செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. ஆதலால்இ இவை மூடப்பட்ட நிலையிலேயே உள்ளன. என்றாலும்இ ரங்களை தேயிலைத் தொழிற்சாலையின் தேயிலையை உலர்த்தும் இயந்திரத்தின் உலைப் பகுதி பழுதடைந்துள்ளதால்இ தொழிற்சாலைக்கு தீ விபத்துக்கள் ஏற்படும் எனும் அச்சம் காரணமாக குறித்த உலைப் பகுதியை அகற்றி அதனைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் அதனை திருத்த முடியாதென்பதால் புதிய உலைப் பகுதியை கொள்வனவு செய்ய வேண்டியுள்ளதுடன்இ தற்போதிருக்கின்ற மிகவும பழைய ஊவுஊ இயந்திரத்தின் மூலம் தரமான தேயிலையை உற்பத்திசெய்ய முடியாத நிலைமையும் காணப்படுகின்றது. எனவே இதற்குப் பதிலாக தரமான தேயிலையை உற்பத்திசெய்ய முடியுமான ஊகுரு (ஊழவெைரழெரள குநசஅநவெயவழைெ ருவெை) இயந்திரத்தைப் பொருத்த வேண்டுமென பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமை காரணமாக இந்த இயந்திரத்தினை கொள்வனவு செய்ய முடியவில்லை. அதனைஇ இந்த வருடம் வரை காலந்தாழ்த்துமாறு பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது. அததுடன்இ இத்தொழிற்சாலையின் இயற்றிறனை மேம்படுத்தி தற்போது பழுதடைந்த நிலையிலுள்ள தேயிலை உலர்த்தும் தொட்டிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய பகுதிகளை 95 சதவீதம் திருத்தியுள்ளது. இந்த இயந்திரத்தை பொருத்திய பிறகு புதியதொரு தொழிற்சாலையாக இலாபமீட்டக்கூடிய நவீன தேயிலை வகையை உற்பத்திசெய்யக்கூடியதாக இருக்குமென அறியத்தருகிறேன்.

ஆ. கோமரை தேயிலைத் தொழிற்சாலையிலுள்ள மிகவும் பழைய ஊழடழரச ஞுநியசயவந இயந்திரமானது தற்போது தேயிலை உற்பத்திக்குப் பயன்படுத்தப்படாத மிகவும் பழைய இயந்திரமாகும். எனவேஇ இந்த இயந்திரத்தை தன்கந்தை பழைய தேயிலைத் தொழிற்சாலைக்கு மாற்றி வேறு நிதி ஒதுக்கீட்டினூடாக தேயிலை உற்பத்தி செய்யவும் அவ்வாறான தேயிலை உற்பத்தியை வெளிநாட்டவர்களுக்கு காட்சிப்படுத்தக்கூடியவாறு சிறு கொள்ளளவுடனான தேயிலை உற்பத்தியை ஆரம்பிக்கதற்குமான கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப இந்த ஊழடழரச ஞுநியசயவந இயந்திரத்தை குறித்த இடத்திற்கு மாற்றப்படும்.

இ.) கோமரை அரச தோட்டத்திற்குச் சொந்தமான நக்கிள்ஸ் பங்களா 45 வருடங்களுக்கு வேறு தரப்பினர்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. குறித்த குத்தகைக் காலம் முடிவடைந்திருந்தாலும் அது மீண்டும் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்படவில்லை. பின்னர்இ கூட்டுத்தாபனத்தின் நிர்வாக அதிகாரி மிகவும் சிரமத்துடன் 2020 ஆம் ஆண்டு மீண்டும் பெற்றுக்கொள்ளப்பட்டது. தற்போது இந்த பங்களாவினை வேறு முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஈ.) மொத்தமாக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தோட்டங்களில் வருமானம் உழைக்கின்ற தேயிலை வகைகளுக்கு கீழ்வருமாறு உரம் வழங்கப்பட்டது. அதற்கேற்பஇ 2020 மற்றும் 2021 களில் முறையே கிட்டத்தட்ட 384 மற்றும் 550 டொன் உரம் பிரயோகிக்கப்பட்டதுடன்இ அவ்வாறு பிரயோகிக்கப்பட்ட உரத்தின் அளவிற்கேற்ப தேயிலைக் கொழுந்து விளைச்சல் அதிகரித்தது. என்றாலும்இ 2021 இல் அரசாங்கத்தினால் இரசாயன உரப் பாவனைக்கு வரையறை விதிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 2022 இல் சந்தையில் உரத் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனால்இ 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 இல் உரத்தின் விலை பத்து மடங்கு அதிகரித்தது. விளைவாக 2022 இல் உரப் பாவனை கிட்டத்தட்ட 40 டொன்னினால் குறைந்தது. என்றாலும்இ 2021 இல் வருமானமீட்டும் தேயிலை வகுதிக்கு போதியளவு உரம் பிரயோகிக்கப்பட்டதனால் 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 இல் விளைச்சல் அதிகரித்திருந்தது. என்றாலும்இ 2023 இல் மீண்டும் உரப் பிரயோகம் கிட்டத்தட்ட 20மூ இனால் மட்டுப்படுத்தப்பட்டதனால் அனைத்து தோட்டங்களிலும் இருந்து கிடைத்த தேயிலை விளைச்சலின் பெறுமதி 7மூ முதல் 41மூ வரை குறைவடைந்திருந்தது. இவ்வாறு தேயிலைக் கொழுந்து விளைச்சல் மதிப்பு குன்றுவதற்கு குறித்த தோட்டங்களின் அமைவிடம்இ பருவகால மழைவீழ்ச்சி கிடைக்கும் விதம் மற்றும் தோட்டங்களின் விளைதிறன் என்பன காரணங்களாக அமைந்திருந்தன.

**உ.**) இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து தோட்டங்களும் 100 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய விதைகளைக் கொண்ட தோட்டங்களாகும். இந்தக் காணிகளில் 01 ஹெக்டயர் நிலப்பரப்பில் இருக்கின்ற தேயிலைப் புதர்களின் எண்ணிக்கை 1650 இனை விடவும் குறைவானது. இந்தக் காணிகளுக்கும் இரசாயன உரம் வழங்க வேண்டியிருந்தாலும் கிடைக்கும் வருமானத்துடன் ஒப்பிடுகையில் விலை கூடிய இரசாயன உரங்களை பிரயோகிப்பது சிரமமாக இருந்ததுடன் இரசாயன உரத்தின் விலை அதிகரித்ததோடு தேயிலைக் கொழுந்து விளைச்சலின் அளவும் குறைந்தது.

**ஊ**). மேலே (ஈ) மற்றும் (உ) இல் குறிப்பிட்ட விடயங்களுக்கேற்ப 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 இல் பச்சைக் கொழுந்து விளைச்சல் 27 சதவீதத்தினால் குறைந்தது. அதனுடன்இ ஒப்பிடுகையில் ஒரு கிலோகிராம் தேயிலைக் கொழுந்து விளைச்சலுக்கான உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளது. என்றாலும்இ 2023 இல் பெரும்பாலான தோட்டங்களில் மதிப்பீடு செய்த உற்பத்தி செலவினங்களை விட குறைவானதொரு செலவினத்தை நிர்வகிக்க முடிந்தது. அவற்றுள் ஹெயார்பார்க் தோட்டத்திலிருந்து சம்பூரண விளைச்சலைப் பெற்றுக்கொள்ளும் ஒரு ஹெக்டயர் நிலப்பரப்பில் பழைய விதைகள் கொண்டிருப்பதால்இ அதில் உரிய முறையில் உரம் பிரயோகிக்கப்படாதிருந்தாலும் குறித்த பழைய விதைகளுக்கு வித்தியாசமான காலநிலைகளுக்கு ஈடுகொடுக்கும் திறன் உள்ளதாலும் தளிர் தேயிலையை நிர்வகிப்பதை விட குறைந்த செலவில் விளைச்சலைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதாலும் ஹெயார்பார்க் தோட்டத்தில் குறைந்த தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாலும் 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 இல் உற்பத்திச்செலவு குறைந்திருந்தது.

## எ. இயற்றிறன்:. பற்றாக்குறை:. பயன்பாடு

எமது கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தேயிலைத் தொழிற்சாலைகளிலுள்ள இயந்திராதிகளுக்கு அமைவாக ஒரு நாளைக்கான பச்சைக்கொழுந்து கொள்ளளவு வருமாறு

கெலேபொக்கை தொழிற்சாலை 9000 கிலோகிராம்
மிட்லன்ட்ஸ் தொழிற்சாலை 7000 கிலோகிராம்
ரங்களை தொழிற்சாலை 7000 கிலோகிராம்
கோமரை தொழிற்சாலை 5400 கிலோகிராம்

2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 இல் தேயிலைத் தொழிற்சாலைகளின் முடிவுத் தேயிலை உற்பத்தி பாரியளவு பின்தங்கியுள்ளது. ஏனெனில்இ இலங்கை முழுவதிலும் அமைந்துள்ள தோட்டங்களின் தேயிலை உற்பத்தியை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 2023 இல் தேயிலைக் கொழுந்து விளைச்சல் 50 சதவீதத்தினை விட குறைந்துள்ளது. இதற்கான காரணங்களாகஇ 2023 இல் நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலைஇ 2022 இல் இரசாயன உரப் பாவனைக்கு தடைவிதித்தமை மற்றும் இதனால் உரத்தின் விலை கணிசமானளவு உயர்ந்தமை என்பனவாகும். அதற்கமைவாகஇ தொழிற்சாலைகளுக்குக் கிடைத்த பச்சை தேயிலைக் கொழுந்தின் அளவு கணிசமானளவு குறைந்தது. மேலும்இ கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தில் கொழுந்து விளைச்சலின் குறைவானது 35 – 25 சதவீதங்களுக்கு இடைப்பட்டதாகும்.

ஏ. அரச நிலஅளவையாளர் அதிகாரசபைக்கு வழங்கியுள்ள ரூபா. ஐந்து இலட்சம் சம்பந்தமாக கீழே குறிப்பிடப்படுகின்ற காரணங்களால் நாம் இதுவரையில் கோரிக்கை விடுக்கவில்லை.

- இந்த உடுவெலை தோட்டம் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் கொள்வனவு செய்த ஒரு தோட்டமாக இருந்தாலும்இ ஜனவஸத்தின் பொறுப்பில் எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கையும் நடைபெறுவதில்லை.

- இத்தோட்டத்தின் உறுதியை நாம் தேடிப்பெற்றுக்கொண்ட பிறகு எமது உரித்தின் அடிப்படையிலும் அமைச்சின் அங்கீகாரத்துடனும் 50 ஏக்கர் காணியை விற்பனை செய்வதற்கான ஒரு நிபந்தனை யாதெனில்இ குறித்த 50 ஏக்கர் நிலத்தை விற்பனை செய்து கிடைக்கும் வருமானத்தின் பாதியை ஜனவசம நிறுவனத்தின் நியதிச்சட்டக் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக ஒதுக்க வேண்டுமென்றும்இ அவ்வாறு கொடுப்பனவு செய்தல் என்ற நிபந்தனையின் அடிப்படையில் ஜனவசம நிறுவனம் உடுவெல தோட்டத்திலிருந்து அதன் உரித்துரிமையை நீக்கிக்கொள்ள வேண்டும் என்பதாகும். அந்த வகையில்இ குறித்த தோட்டத்தினை கூட்டுத்தாபனத்தின் பொறுப்பின் கீழ் கொண்டுவரும் போது தோட்டத்தின் சுற்றுவட்டத்தை அளந்து உறுதியில் குறிப்பிட்டுள்ளவாறு காணியின் அளவு பௌதீக ரீதியாக இருக்கின்றதா என உறுதிப்படுத்த வேண்டியிருப்பதால் குறித்த முற்பணம் மீண்டும் பெற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஐ. 2022 இல் கோமரை அரச பெருந்தோட்டம் இலாபம் உழைப்பதற்கான காரணம் யாதெனில்இ 2021 இன் இரண்டாவது அரையாண்டில் தோட்டத்திற்குத் தேவையானளவு உரம் வழங்கிய பிறகு மீளாய்விற்கு உட்படுத்தும் வருடத்தில் கிடைத்த கொழுந்து விளைச்சலை விட 2022 இல் 214இ477 கிலோகிராம் அதிகமாக தேயிலைக் கொழுந்து பறிக்கப்பட்டமையினால் 2022 இல் கிடைத்த தேயிலை விளைச்சலுடன் ஒப்பிடுகையில் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் உரப் பற்றாக்குறை மற்றும் உரத்தின் அதிகரித்த விலை போன்ற காரணங்களால் தேவையானளவு உரத்தை பிரயோகிக்க முடியவில்லை. அதன் காரணமாக பாரம்பரிய தேயிலை உற்பத்திக்கு பொருத்தமான தரத்தில் தேயிலைக் கொழுந்தினைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. அதற்கேற்பஇ 2023 இல் கோமரை தேயிலைத் தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்து குறித்த ஆண்டில் எதிர்பார்த்த தேயிலை விற்பனை விலையை பெற்றுக்கொள்ள முடியவில்லை. மேலும்இ கொழுந்து விளைச்சல் குறைந்தமையினால் உற்பத்திச் செலவும் அதிகரித்தது. அத்துடன்இ கோமரைத் தொழிற்சாலையின் நவீனமயப்படுத்தல் உள்ளடங்கலாக மூலதனச் செலவினங்களும் உள்ளடங்கலாக நட்டம் உயர்ந்தது.

மேலும்இ கெலேபொக்கை அரச தோட்டம் 2022 இல்இ இறுதிக் கணக்கறிக்கைக்கு அமைவாக தேயிலை மற்றும் ஏனைய வருமானங்களுடன் ரூபா. 10இ461இ477 இலாபம் உழைத்துள்ளது. அவ்வாறேஇ 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கறிக்கைக்கு அமைவாகவும் ஏனைய வருமானங்களுடன் ரூபா. 10இ717இ096 இலாபம் உழைத்துள்ளது. அந்த வகையில்இ கெலேபொக்கை அரச தோட்டம் 2022 மற்றும் 2023 ஆம் வருடங்களில் நட்டமடையவில்லை.

அத்துடன்இ எமது கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான தோட்டங்களுள் கொட்டகங்கை மற்றும் விஹாரகலை வினைத்திறன் குறைந்த தோட்டங்களாகும். ஒவ்வொரு தோட்டத்திலும் ஒரு ஹெக்டயருக்கு இருக்கின்ற தேயிலைப் புதர்களின் எண்ணிக்கையானது ஏனைய தோட்டங்களுடன் ஒப்பிடுகையில்

குறைவானது. 2022 மற்றும் 2023 இல் வருமானம் உழைக்கும் துறைகளுக்கு போதியளவு உரம் பிரயோகிக்கப்படவில்லை. இதனால்இ கணிசமானளவு கொழுந்து விளைச்சல் குறைந்துள்ளது. அத்துடன் உற்பத்திச் செலவும் அதிகரித்துள்ளது. மேலும்இ மிட்லன்ட் அரச தோட்டம் மத்திய மலை நாட்டின் உலர் வலயத்தில் அமைந்துள்ளதோடு உரிய முறையில் உரம் பிரயோகிக்கப்படாமை காரணமாகவும் தேயிலை உற்பத்திக்குக் கிடைக்கும் பச்சைச் கொழுந்துகளின் தரம் குறைந்துள்ளமை காரணமாகவும் 2023 இல் விற்பனை விலை குறைந்துள்ளது. எனவேஇ 2023 இல் நட்டம் அதிகரித்துள்ளது.

(ஔ) (ஓ) எனும் இரண்டு இலக்கங்களிலும் குறிப்பிட்டுள்ள விடயங்களுடன் தொடர்புடைய ஹெயார்பார்க்இ ஹுன்னஸ்கிரியஇ ரங்களைஇ பாகலைஇ கொட்டகங்கைஇ வுட்சய்ட்இ கோமரைஇ மிட்லன்ட் தோட்டங்களின் தொழிலாளர்களின் செலவினங்கள் மற்றும் வருமானம் என்பன ஒப்பீட்டு ரீதியான சதவீதத்தில் காட்டப்பட்டுள்ளன. இங்கு மேலே குறிப்பிட்டுள்ள தோட்டங்களில் தேயிலை மீள்பயிரிடலுக்காக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சினால் வழங்கப்பட்ட மூலதனங்களுடன் புதிய தேயிலைப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்தப்பட்ட தொழிலாளர்களின் செலவுகளையும் கூட்டி கணக்கு வைக்கப்பட்டுள்ளது. என்றாலும்இ மேலே குறிப்பிட்ட புதிய தேயிலைப் பயிர்ச்செய்கைக்கான கிடைத்த நிதி மூலதனச் செலவினமாக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது. அதற்கேற்பஇ இங்கு காட்டப்பட்டுள்ள தரவுகள் வருமானத்தை உழைத்துக்கொள்வதற்காக ஈடுபடுத்தப்பட்ட தொழிலாளர்கள் மற்றும் அவர்களுக்காக உறப்பட்ட செவினங்களுக்குரிய வருமானத்தின் சதவீதமென சரிப்படுத்தப்பட வேண்டும்.

**<u>ஓ. தொழிநுட்ப பூங்காவனத்தை நிருமாணிப்பதற்காக காணிகளை கையகப்படுத்துதல் – வலஹந்துவை தோட்டம்.</u>**

ஐ. வலஹந்துவை அரச தோட்டத்தின் உரிமை 1994.04.21 ஆம் திகதிய 815.்.10 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கப்பட்டது. என்றாலும்இ காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் 2124 ்.40 ஆம் இலக்க 2019.05.24 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் மீள ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்த வகையில்இ தோட்டத்தின் சட்ட உரிமை காணிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டதுடன்இ தொழிநுட்ப பூங்காவனத்தை நிறுவுவதற்கான காணியின் உரித்து தொழிநுட்ப அமைச்சிற்கு வழங்கப்பட்டது.

மேகூறப்பட்ட நிலைமை தற்போது சரிப்படுத்தப்பட்டுள்ளதுடன்இ மேற்கூறப்பட்ட மீளஒழுங்குபடுத்தல் வர்த்தமானி அறிவித்தலை நீக்குமாறு அமைச்சு மட்டத்தில் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் பல கோரிக்கைகளை விடுத்தது. எனவேஇ குறித்த வேண்டுகோள்களைக் கருத்திற்கொண்டு மேற்கூறப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச்செய்து 2022.03.15 ஆம் திகதி 2271.்.25 இலக்க வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

ஐஐ. மேலே கூறப்பட்டவாறு தொழிநுட்ப பூங்காவனத்திற்கு வழங்கும் இடத்தை தீர்மானித்திருப்பது காணிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவினாலாகும்.

ஐஐஐ. இறப்பர் மரங்களின் வருமானம் இழப்பதை தவிர்த்துக்கொள்ள முடியாத நிலையில் குறித்த காணிகளின் நட்டஈட்டினை எமக்கு தருமாறு 2021.11.30 இ

2012.12.15 இ2021.12.28 இ 2022.12.13இ 2023.07.28இ2023.11.24திகதிய கடிதங்கள் மூலம் தொழிநுட்ப அமைச்சின் செயலாளர் மற்றும் அக்மீமன பிரதேச செயலகத்திடம் எழுத்து மூலமாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன்இ தொழிநுட்பப் பூங்காவிற்காக காணிகளை கையகப்படுத்துவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக அக்மீமனை பிரதேச செயலாளரால் 2023.12.02 ஆம் திகதிய கடிதத்தினூடாக எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே. காணிகளை கையகப்படுத்துவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருப்பதால் குறித்த காணிகளை வலஹுந்துவை பெருந்தோட்டத்திற்கு மீண்டும் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு 2022.02.12 ஆம் திகதிய கடிதத்தினுடாக அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐஏ. மேற்குறிப்பிட்ட விடையே இங்கும் பொருந்தும். பிணக்கிற்குட்பட்டுள்ள காணிகள் இதுவரையில் மீண்டும் ஒப்படைக்கப்படவில்லை. குறித்த பூமியில் எஞ்சியுள்ள இறப்பர் மரங்களிலிருந்து விளைச்சல் பெற்றுக்கொண்டிருப்பதாக அந்தத் தோட்டத்தின் தோட்ட அதிகாரி குறிப்பிட்டார்.

ஒள. இல. 02 மற்றும் 03 இன் கீழ் இடைப் பயிர்களை மேம்படுத்தவும் மீண்டும் வெட்டு மரப் பயிர்ச்செய்கையை நடாத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டிருந்தாலும்இ 2022 இல்இ கிட்டத்தட்ட 160.93 ஹெக்டயர் நிலப்பரப்பில் மீண்டும் தேயிலைப் பயிர்ச்செய்கை மற்றும் புதிய தேயிலைப் பயிர்ச்செய்கையை துவங்கும் நோக்கிலேயே செயற்பட்டது. இச்சூழ்நிலையில்இ குறித்த வருடத்தில் எஞ்சியிருந்த ஹெக்டெயர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டது. மேலும்இ 2022 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டத்தின் பராமரிப்புச் செயற்பாடுகளையும் 2023 இல் நிறைவேற்ற வேண்டியிருந்தது. அதற்கான அதிகளவான தொழிலாளர்கள் தேவைப்பட்டதால் வேறு பயிர்களைத் திட்டமிட்டிருந்தது போன்றே தொழிலாளர் பற்றாக்குறை காரணமாக குறித்த நடவடிக்கைகளையும் பூரணப்படுத்த முடியவில்லை. இல. 04 இன் கீழ் தொழிற்சாலை மற்றும் இயந்திராதிகளை நவீனமயப்படுத்துவதற்காக ரூபா. 190.4 மில்லியன் செலவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தாலும்இ இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் நிதி நெருக்கடிகளால் ரூபா. 40.53 மில்லியன் மாத்திரமே செலவு செய்யப்பட்டது என்பதை அறியத்தருகிறேன்.

### வலஹுந்துவை தோட்டத்தின் தேயிலைச் செடி பராமரிப்பு

வலஹுந்துவை தேயிலைச் செடிகளைப் பயிரிடும் வேலைத்திட்டம் இலங்கை தேயிலை சபையின் உதவியுடன் 2022 இல் ஆரம்பிக்கப்பட்ட ஒரு வேலைத்திட்டமாகும். 2023 இல் குறித்த நிதியுதவி கிடைக்கவில்லை. ஆதலால்இ இச்செயற்றிட்டத்தினை 25 சதவீதத்துடன் வரையறுக்க வேண்டியிருந்தது.

### 475,000 தேயிலைச் செடிகளை தயாரிக்கும் வேலைத்திட்டம்

2023 இல் 475இ000 தேயிலைச் செடிகளை தயாரிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் பராமரிப்பு நடவடிக்கை தவிர்த்து வேறு எந்தவொரு நடவடிக்கையும் இந்த வருடத்தில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆதலால்இ பௌதீக ரீதியான முன்னேற்றத்தை காட்ட முடியாது.